63

roved by the Madras Text Book Committee for School use.
*(Vide Gazette, Part I-B, dated 24th April, 1934, page 224.)*

# தமிழ் நூற் கோவை

## முதற் பகுதி

27 JUL 1934
MADRAS

புதுக்கோட்டை
மஹாராஜா கலாசாலைத் தமிழாசிரியர்,
பண்டித நா. கனகராஜையர், வித்வான்
தொகுத்தது.

மகாமகோபாத்தியாய திராவிட வித்தியாபூஷணம்,
தாக்ஷிணாத்ய கலாநிதி
பிரம்மஸ்ரீ. டாக்டர், உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்
முன்னுரையுடன் கூடியது.

TB
031,6 (9)
N34·1
174943

காபால் பிள்ளை
: திருச்சிராப்பள்ளி

பதி 934 [விலை அணா 10

# தமிழ் நூற் கோவை

## முதற் பகுதி

புதுக்கோட்டை

மஹாராஜா கலாசாலைத் தமிழாசிரியர்,

பண்டித நா. கனகராஜையர், வித்வான்

தொகுத்தது.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றது.

T. G. கோபால் பிள்ளை

தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1934 [விலை அணா 10

சென்னை திருவட்டீசுவரன்பேட்டை "தியாகராஜ விலாசம்"

மகாமகோபாத்தியாய திராவிட வித்யா பூஷணம்,

தாக்ஷிணாத்ய கலாநிதி

பிரமஸ்ரீ டாக்டர் - உ. வே. சாமிநாதையர் அவர்கள்

எழுதிய

# முன்னுரை

---

புதுக்கோட்டை மஹாராஜா காலேஜ் தமிழாசிரியர் வித்வான் ம-ா-ா-ஸ்ரீ நா. கனகராஜையரவர்கள் தொகுத்து வெளியிட்டுள்ள தமிழ் நூற் கோவையின் முதற் பகுதியும் இரண்டாம் பகுதியும் வரப்பெற்றேன். பழைய நூல்களிலிருந்தும் பிற்காலத்து நூல்களிலிருந்தும் நவீனமான வசனங்களிலிருந்தும் செய்யுட்களையும் வசனங்களையும் இக்கால முறைக்கேற்பத் தொகுத்திருப்பது மிகவும் நன்றாக விருக்கிறது. இவ்விஷயமாக எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சி பாராட்டத் தக்கது. முகவுரையிற் குறிப்பிட்டபடி எந்த நோக்கங்கொண்டு இவை தொகுக்கப்பெற்றனவோ அவை நிறைவேறுமென்று எண்ணுகிறேன்.

"தியாகராஜ விலாசம்"
14—11—'33.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

# முகவுரை

புதுமைமணங் கமழ உயர்தரக் கலாசாலைகளிற் பயிலும் மாணவர்க்குப் பயன்படுமோறு பல தமிழ்ப் புத்தகங்கள் வெளிவரும் இந்நாளில், இத் தமிழ் நூற்கோவையின் வெளியீடு மிகையாகாது. தமிழ் நூல்களிலே உள்ள சுவைகளை எவர் எவ்விதம் எடுத்துக் காட்டினும், அவை மாணவர்க்குப் புதுமை இன்பம் விளைக்கு மன்றோ? நான்காம் பாரத்தில் வாசிக்கும் மாணவர்க்கு ஏற்றவாறு இது தொகுக்கப்பெற்றுள்ளது.

இக் கோவையிலுள்ள செய்யுட் பகுதிகள் பல திறப்பட அமைக்கப் பெற்றிருப்பது, ஒவ்வொன்றினும் சிறிதளவேனும் ஒரு ஆண்டினுட் பயில்விக்கப் படுவதன் பொருட்டேயாகும். உரை நடைப் பகுதிகள் இயன்றவளவு பழமையும் புதுமையும் தழுவிய பொருள்கள் கொண்டவையாய் எழுதப்பெற்றுள்ளன. மாணவர் தரத்திற்கு ஏற்றவாறு புதுப் பொருள்களையும் பழம்பொருள்களை யும் பற்றிய உரைநடைப் பகுதிகள் கிடைப்பது அருமையே. அத் துறையிலே மிக்க பயிற்சியும் ஊக்கமும் உற்சாகமும் உடைய பெரி யோர் சிலர் எழுதி உதவிய பாடங்களும், நண்பர் சிலர் தந்துதவிய பாடங்களும் இந் நூற்கோவையிலே சேர்க்கப் பெற்றுள்ளன.

மகாமகோபாத்தியாய டாக்டர் - உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள், சென்னையிலிருந்து வெளியாகும் கலைமகள் என்ற மாதப் பத்திரிகையிலே எழுதியுள்ள மருதபாண்டியர் என்ற ஓர் வரலாற்றுச் செய்தியை, இந் நூற்றொகையில் ஒரு பாடமாகச் சேர்த்துக் கொள்ள அனுமதித்தார்கள். அவர்கட்கு எனது மனநிறை வணக்கம் உரியதாகும். இந் நூற்றொகையில் வெளிவந்துள்ள மற்ற பாடங் களை அன்புடன் உதவிய பெரியார் அனைவருக்கும் எனது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அறிஞர்கள் இதனைத் தம்தம் கலாசாலைகளில் பாடப் புத்தகமாக ஏற்படுத்து முகத்தான் எனக்கு ஊக்கம் அளிப்பரென நம்புகின்றேன்.

புதுக்கோட்டை,<br>16—9—'33.

இங்ஙனம்,<br>நா. கனகராஜையர்.

# உள்ளுறை

செய்யுட்பகுதி — பக்கம்


I. கடவுள் வாழ்த்து

1. தேவாரம் ... ... 1
2. பெருமாள் திருமொழி ... ... 2
3. திருவருட்பா ... ... 3

II. நீதிச் செய்யுட்கள்

1. திருக்குறள் ... ... 4
2. நாலடியார் ... ... 5
3. பழமொழி ... ... ,,
4. அறநெறிச்சாரம் ... ... 6
5. நீதிநெறி விளக்கம் ... ... 7

III. தனிச் செய்யுட்கள் ... ... 8

IV.. கதைச் செய்யுட்கள்

1. நளவெண்பா ... ... 10
2. அரிச்சந்திர புராணம் ... ... 15
3. குசேலோபாக்யானம் ... ... 20
4. கம்பராமாயணம் ... ... 24
5. திருவிளையாடற்புராணம் ... .... 27

V. பிரபந்தச் செய்யுட்கள்

1. அழகரந்தாதி ... .... 32
2. அழகர் கலம்பகம் ... ... ,,
3. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ... ... 33
4. திருவேங்கடமாலை ... ... 34
5. அறவுரை ... ... ,,

பக்கம்

## உரைநடைப் பகுதி

1. தமிழகம் ... 35
பண்டித, நா. கனகராஜையர், வித்வான்.

2. மருதபாண்டியர் ... 42
மகா மகோபாத்தியாய திராவிட வித்யாபூஷணம், தாக்ஷிணாத்திய கலாநிதி, பிரமஸ்ரீ. டாக்டர் - உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்.

3. பொன் ... 47
வித்வான், ஸ்ரீ. இராமையங்கார், தலைமைத் தமிழாசிரியர், சௌராஷ்டிர உயர்தர கலாசாலை, மதுரை.

4. சுலோசனை ... 51
ஸ்ரீ. க. பழனிக்குமாரக் கவிராயர், தமிழாசிரியர், போர்டு ஹைஸ்கூல், சோழவந்தான்.

5. சர்வதேச சங்கம் ... 58
ஸ்ரீ. ர்ா. ஜகந்நாதன், எம். ஏ.

6. சந்தன மரம் ... 63
ஸ்ரீ. வி. நடராஜன் B. Sc. Ag.

7. அன்புள்ள இடத்தில் அமலன் இருப்பான் ... 68
ஸ்ரீ. ஜி. இராமசந்திரன், பி. ஏ.

8. ஜப்பானும் ஜப்பானியரும் ... 77
ஸ்ரீ. டி. எஸ். குப்பண்ண சாஸ்திரியார், பி.ஏ., எல்.டி.

9. காங்கேயன் சூளுரை ... 86
ஸ்ரீ. உ. வே. வி. தி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், தலைமைத் தமிழாசிரியர், மஹாராஜா கலாசாலை, புதுக்கோட்டை.

10. ஆகாய விமானம் ... 93
ஸ்ரீ. குப்புசாமி ஐயர், எம். ஏ.

11. குறிப்புரை ... 99

# தமிழ் நூற் கோவை

## முதற்பகுதி

---

## I. கடவுள் வாழ்த்து

### 1. தேவாரம்

1. வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும்,
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

2. விறகில் தீயினன் ; பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் ; மாமணிச் சோதியான் ;
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே.

3. மனிதர்காள் ! இங்கே வம்மொன்று சொல்லுகேன் ;
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே.

4. பருதி யானைப், பல்வேறு சமயங்கள்
கருதி யானைக், கண்டார் மனமேவிய
பிருதி யானைப், பிறரறி யாததோர்
சுருதி யானைக் கண்டீர்தொழற் பாலதே.

5. வேத மோதிலென் ; சாத்திரங் கேட்கிலென் ;
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென் ;
ஓதி யங்கமோ ராறு முணரிலென் ;
ஈசனை யுள்கு வார்க்கன்றி யில்லையே.

—திருநாவுக்கரசர்

## 2. பெருமாள் திருமொழி

### (நாலாயிர திவ்விய பிரபந்தம்)

### விற்றுவக் கோட்டம்மான் விஷயம்

1. தருதுயரம் தடாயேல்உன் சரண்அல்லால் சரண்இல்லை ;
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ் விற்றுவக்கோட்(டு) அம்மானே !
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும், மற்றவள்தன்
அருள்நினைந்தே அழும்குழவி அதுவேபோன்(று) இருந்தேனே.

2. கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்போல்
விண்தோய் மதிள்புடைசூழ் விற்றுவக்கோட்(டு) அம்மா ! நீ
கொண்டாளா யாகிலும்உன் குரைகழலே கூறுவனே.

3. மீன்நோக்கும் நீள்வயல்சூழ் விற்றுவக்கோட்(டு) அம்மா ! என்
பால்நோக்கா யாகிலும்உன் பற்றல்லால் பற்றிலேன் ;
தான்நோக்கா(து) எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன்(று) இருந்தேனே.

4. வாளால் அறுத்துச் சுடினும், மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல், மாயத்தால்
மீளாத் துயர்தரினும் விற்றுவக்கோட்(டு) அம்மா ! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

5. வெங்கண்திண் களிறடர்த்தாய் விற்றுவக்கோட்(டு)அம்மானே!
எங்குப்போய் உய்கேன்உன் இணையடியே அடையல்லால்
எங்கும்போய்க் கரைகாணா(து) எறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே.

6. செந்தழலே வந்(து)அழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரம்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால் ;
வெந்துயர்வீட் டாவிடினும் விற்றுவக்கோட்(டு) அம்மா !உன்
அந்தமில்சீர்க் கல்லால் அகங்குழைய மாட்டேனே.

—குலசேகர ஆழ்வார்

## 3. திருவருட்பா

1. எய்ப்பிலே கிடைத்த வைப்பது வென்கோ!
என்னுயிர்க் கின்பமே யென்கோ!
துய்ப்பிலே நிறைந்த பெருங்களிப் பென்கோ!
சோதியுட் சோதியே யென்கோ!
தப்பெலாம் பொறுத்த தயாநிதி யென்கோ!
தனிப்பெருந் தலைவனே யென்கோ!
இப்பிறப் பதிலே மெய்ப்பய னளித்திங்(கு)
என்னையாண் டருளிய நினையே!

2. என்னுளம் பிரியாப் பேரொளி யென்கோ!
என்னுயிர்த் தந்தையே யென்கோ!
என்னுயிர்த் தாயே இன்பமே யென்கோ!
என்னுயிர்த் தலைவனே யென்கோ!
என்னுயிர் வளர்க்குந் தனியமு தென்கோ!
என்னுடை நண்பனே யென்கோ!
என்னொரு வாழ்வின் தனிமுத லென்கோ!
என்னையாண் டருளிய நினையே!

3. என்பிழை யனைத்தும் பொறுத்தருள் புரிந்தென்
இதயத்தில் இருக்கின்ற குருவே!
அன்புடை யரசே! அப்பனே என்றன்
அம்மையே! அருட்பெருஞ் சோதி!
இன்புறு நிலையில் ஏற்றிய துணையே!
என்னுயிர் நாதனே! என்னைப்
பொன்புனை மாலை புனைந்தவோர் பதியே!
பொதுநடம் புரிகின்ற பொருளே!

— சிதம்பரம் - இராமலிங்க சுவாமிகள்

# II. நீதிச் செய்யுட்கள்

## 1. திருக்குறள்

1. தானம் தவம் இரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

2. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

3. அறத்தா(று) இதுவென வேண்டா ; சிவிகை
பொறுத்தானோ(டு) ஊர்ந்தா னிடை.

4. பெண்ணிற் பெருந்தக்க யாவுள ; கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

5. குழலினி(து) யாழினி(து) என்ப ; தம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

6. தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

7. மகன்தந்தைக் காற்று முதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

8. அகனமர்ந்து செய்யா ளுறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்.

9. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

10. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

11. விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்(து) எனினும் வேண்டற்பாற்(று) அன்று.

12. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

13. யாகாவார் ஆயினும் நாகாக்க ; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

—திருவள்ளுவர்

## 2. நாலடியார்

1. கல்லாது போகிய நாளும், பெரியவர்கண்
செல்லாது வைகிய வைகலும்—ஒல்வ
கொடாஅது தொழிந்த பகலும் உரைப்பிற்
படாஅவாம் பண்புடையார் கண்.

2. தாமேயும் இன்புறார் ; தக்கார்க்கும் நன்(று)ஆற்றார் ;
ஏமஞ்சார், நன்னெறியுஞ் சேர்கலார் ;—தாம்மயங்கி
ஆக்கத்துள் தூங்கி, அவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறி வினர்.

3. கடையெலாம் காய்பசி யஞ்சும் ; மற்(று)ஏனை
இடையெலாம் இன்னாமை யஞ்சும்;—புடைபரந்த
விற்புருவ வேல்நெடுங் கண்ணாய் ! தலையெல்லாம்
சொற்பழி யஞ்சி விடும்.

4. என(து) என(து) என்றிருப்பன் ஏழை பொருளை
என(து) என(து) என்றிருப்பன் யானும்—தன(து)ஆயின்
தானும் அதனை வழங்கான் ; பயன் துவ்வான் ;
யானும் அதனை அது.

5. கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு—மெல்ல
இருப்பினும் நாயிருந் தற்றே ; இராஅ(து)
உரைப்பினும் நாய்குரைத் தற்று.

—சமணமுனிவர்

---

## 3. பழமொழி

1. முன்னும் ஒருகாற் பிழைப்பினை ஆற்றவும்
பின்னும் பிழைப்பின் பொறுப்பவோ ?—இன்னிசை
யாழின்வண் டார்க்கும் புனலூர ! ஈனுமோ
வாழை யிருகாற் குலை ?

2. ஆயிரவ ரானும் அறிவிலார் தொக்கக்கால்
மாயிரு ஞாலத்து மாண்(பு)ஒருவன் போல்கலார் ;
பாயிருள் நீக்கும் மதியம்போற் பன்மீனும்
காய்கலா வாகும் நிலா.

2. கல்லாதும் கேளாதும் கற்றார் அவைநடுவண்
சொல்லாடு வாரையும் அஞ்சற்பாற்(று);—எல்லருவி
பாய்வரை நாட ! பரி(சு)அழிந் தாரோடு
தேவரும் ஆற்றல் இலர்.

4. கல்வியான் ஆய கழிநுட்பம் கல்லார்முன்
சொல்லிய நல்லவும் தீயவாம் ;—எல்லாம்
இவர்வரை நாட ! தமரையில் லார்க்கு
நகரமும் காடுபோன் றுங்கு.

5. உரைமுடிவு காணன் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்; 'குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்.'

—மூன்றுறை யரையர்

## 5. அறநெறிச்சாரம்

1. உப்புக் குவட்டின் மிசையிருந்(து) உண்ணினும்
இட்டுணைக் காலத்துக் கூராதாம்—தொக்க
உடம்பும் பொருளும் உடையான் ஓர்நன்மை
தொடங்காக்கால் என்ன பயன் ?

2. இறந்த பிறப்பில்தாம் செய்த வினையைப்
பிறந்த பிறப்பால் அறிக;—பிறந்திருந்து
செய்யும் வினையால் அறிக, இனிப்பிறந்து
எய்தும் வினையின் பயன்.

3. நின்னை அறப்பெறு கிற்கிலேன், நன்னெஞ்சே !
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன் ?—நின்னை
அறப்பெறு கிற்பேனேல், பெற்றேன் மற்(று)ஈண்டுத்
துறக்கம் திறப்பதோர் தாள்.

4. முன்னின்(று) ஒருவர் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்,—பின்னின்(று)
இழித்துரைக்குஞ் சான்றோரை யஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை.

5. எள்ளிப் பிறருரைக்கும் இன்னாச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளி வைத்தாற்போற் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தொழுகல் ஆற்றின்
பிறிதெனினும் வேண்டா தவம்.

—முனைப்பாடியார்

## 5. நீதிநெறி விளக்கம்

1. கலைமகள் வாழ்க்கை முகத்த(து) எனினும்
மலரவன் வண்தமிழோர்க் கொவ்வான்;—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்(று)இவர் செய்யும் உடம்பு.

2. கற்பன வூழற்றூர் கல்விக் கழகத்தாங்(கு)
ஒற்கமின்(று) ஊத்தைவாய் அங்காத்தல்—மற்றுத்தம்
வல்லுரு அஞ்சன்மின் என்பவே மாபறவை
புல்லுரு அஞ்சுவ போல்.

3. தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்(று) அகமகிழ்க;—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக; கற்றவெல்லாம்
எற்றே யிவர்க்குநாம் என்று.

4. ஆக்கம் பெரியார் சிறியார் இடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப;—தூக்கின்
மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழும் துலைக்கு.

5. தீயசெயற் செய்வார் ஆக்கம் பெருகினும்,
தீயன தீயனவே வேறல்ல;—தீயன
நல்லன ஆகாவாம்; நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமாப் போல்.

—குமரகுருபர சுவாமிகள்

# III. தனிச் செய்யுட்கள்

## எல்லோருக்கும் கவலை யுண்டு என்பது

1. பாலுக்குச் சர்க்கரை யில்லையென் பார்க்கும், பருக்கையற்ற
கூழுக்குப் போடவுப் பில்லையென் பாருக்கும், குற்றித்தைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லையென் பார்க்கும், கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை யில்லையென் பார்க்கும் விசனமொன்றே.

## ஈயாத உலோபியைப் பாடியது

2. பாடல் பெறுனே, பலர்மெச்ச வாழானே,
நாடறிய நன்மணங்கள் நாடானே,—சேடன்
இவன்வாழும் வாழ்க்கை இருங்கடல்சூழ் பாரில்
கவிழ்ந்தென் மலர்ந்தென்ன காண்.

## எழிற்கோவை இகழ்ந்தது

3. இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே !
குருடேயும் அன்றுநின் குற்றம்—மருள்தீர்ந்த
பாட்டும் உரையும் பயிலாதன விரண்(டு)
ஒட்டைச் செவியும் உள.

## பதினாறு பேறு

4. துதிவாணி, வீரம், விசயம், சந்தானம், துணிவு, தனம்,
அதி தானியம், சௌபாக்கியம், போகம், அறிவு, அழகு,
புதிதாம் பெருமை, அறம், குலம், நோவகல், பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே.

## சிவனருள் தேடல் வேண்டும்

5. வெண்ணெயுற்று நெய்தேட வேண்டுமோ ; தீபமுற்றும்
நண்ணு கனல்தேடல் நன்றாமோ ;—வண்மனத்தை
நாடிச் சிவனிருக்க, நாடாமல் ஊர்தோறும்
தேடித் திரிவதென்ன செப்பு.

### துர்க்குணருக்கில்லாக் குணம்

6. ஞானம், பெருமை, நயம், கருணை, யுண்மை, பயி
மானம், பொறுமை, வணக்கம், உயர்—தானமுடன்,
சற்குணம், ஆசாரம், தருகல்வி, நீதிநெறி
துர்க்குணருக் கில்லென்றே சொல்.

### தெய்வச் செயல்

7. நினைத்த அதுவொழிந்து நேரிடும்வே றொன்று ;
மனித்த கருமங்கள் வாயா ;—கனத்த
அயனமர ராலும் அரியாலும் தெய்வச்
செயலினைக்கா ணப்படா தே.

### ஈயாதார் இயல்பு

8. எண்ணான்கு முப்பத் திரண்டுபெற் காட்டி, யிசையுடனே
பண்ணாகச் செந்தமிழ் பாடிவந்தாலும், இப் பாரிலுள்ளார்
அண்ணாந்து கேட்பர் ; அழகழ கென்பர் ; அதன்பிறகே
சுண்ணாம்பு பட்ட இலையுங் கொடார்கவி சொன்னவர்க்கே.

### ஊனுண்போரை இகழ்ந்தது

9. தேனோடும் ஊனுண்ணும் மானுடர்க் கஞ்சிச் சிவன்கரத்தில்
மானோடிப் புக்கது ; அயம் கோழி யோடின மைந்தனிடம் ;
மீனோடிப் புக்கது விண்ணினுஞ் சிந்தினும் ; வெவ்விலங்கும்
வானோடி யேபல ராசிக ளாயுயிர் வாழ்ந்தனவே.

### உத்தியோகம் நீங்கியவர் நிலைமை

10. தண்டுகொண் டோட்டினும் போகாது நம்மைத் தரிசிக்கவே
பண்டுவந் தோர்க்கின்று தாம்பூலம் வைத்துப் பரிந்தழைத்தும்,
திண்டுமின் னென்சொல்லி வாராதொழிந்தனர்; செய்கையெல்லாம்
கண்டுகொண்டோ மினித் தொண்டுகொண்டோம் நம்
[கடவுளுக்கே.

# IV. கதைச் செய்யுட்கள்

## 1. நளவெண்பா

### அன்னம் தூது சென்றது

1. நீணிறத்தாற் சோலை நிறம்பெயர ; நீடியதன்
தாணிறத்தால் பொய்கைத் தலஞ்சிவப்ப ;—மாணிறத்தால்
முன்அப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு.

2. அன்னம் தனைப்பிடித்தங்(கு) ஆயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே—அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

3. "அஞ்சல் மடவனமே ! உன்தன் அணிநடையும்
வஞ்சி அனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்" என்றான் ; களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

4. "வீமன் திருமகளாம் மெல்லியலை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன் !—சேம
நெடுங்குடையாய்" என்றுரைத்து நீங்கியதே அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பால் உயர்ந்து.

5. மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய—நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடம்சேர்ந் தாங்கதனை
"என்னுடல் சொல் ?" என்றாள் ஈங்கு.

6. "செம்மனத்தான், தண்ணளியான், செங்கோலான், மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்,—மெய்ம்மை
நளனென்பான் ; மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான் ;
உளனென்பான் வேந்தன் உனக்கு."

7. "வாவி யுறையும் மடவனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி" யென்றுரைத்
பார்வேந்தன் பாவை பதைத்து. [தாள்

[அன்னம் நளனிடம் சென்று பேசியது. அப்பால், மாவிந்த நகரில் அரசர் குலமுறைப்படி சுயம்வரம் நிகழ்ந்தது. மன்னர் பலர் வந்திருந்தனர். தேவரும் வந்தனர்.]

8. மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று.

9. காவலரைத் தன்சேடி காட்டக்கண்(டு), ஈரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுநின்(று)
ஊசலா டுற்றாள் உளம்.

10. கண் இமைத்த லால்,அடிகள் காசினியில் தோய்தலால்,
வண்ண மலர்மாலை வாடுதலால்,—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே யன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு.

11. விண்ணரசர் எல்லாரும் வெள்கிமனஞ் சுளிக்கக்,
கண்ணகல் ஞாலங் களிகூர,—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட, வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

12. கணிமொழிந்த நாளிற் கடிமணமுஞ் செய்தார்
அணிமொழிக்கும் அண்ணல் அவற்கும்—பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் அறைபுக்கார்
மற்றேவர் ஒவ்வார் மகிழ்ந்து.

[கலியின் சூழ்ச்சியால் நளன் புட்கரனோடு சூதாடினான். மந்திரிமார் அறவுரை கூறினர். நளன் கேட்டிலன். எல்லாவற்றையும் இழந்து நகர் நீங்கித் தேவியோடும் மக்களோடும் வனம் சென்றான்.]

13. மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான் போனாற்போல்,—தன்கால்
பொடியாடத் தேவியொடும் போயினான்; அன்றே
கொடியானுக்(கு) அப்பார் கொடுத்து.

மக்கள் துயரம்

14. சந்தக் கழற்று மரையும் சதங்கையணி
பைந்தளிரும் நோவப் பதைத்துருகி,—"எந்தாய்!
வடந்தோய் களிற்றாய்! வழியான எல்லாம்
கடந்தோமோ?" என்றார் கலுழ்ந்து.

நளன் கூற்று

15. "காதல் இருவரையும் கொண்டு கடுஞ்சுரம் போக்(கு)
ஏத முடைத்(து) இவரைக் கொண்டுநீ—மாதராய்!
வீமன் திருநகர்க்கே மீள்" என்றான் விண்ணவர்முன்
தாமம் புனைவாளைத் தான்.

தமயந்தி கூற்று

16. "குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம்; பெறலாமோ?—கொற்றவனே!
கோக்கா தலனைக் குலமகளுக்(கு)" என்றுரைத்தாள்
நோக்கால் மழைபொழியா நொந்து.

நளன் கூறுவது

17. "பொன்னுடைய ரேனும், புகழுடைய ரேனுமற்(று)
என்னுடைய ரேனும் உடையரோ?—இன் அடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்."

18. "சொன்ன கலையின் துறையனைத்தும் தோய்ந்தாலும்
என்னபயன் உடைத்தாம் இன்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்கால் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி.

[மக்களை அனுப்பிவிட்டுக் காட்டில் துயருற்றுப் பாழ் மண்டபத்தே நள்ளிருளிலே மனைவியைப் பிரிந்து நளன் தனித்து ஏகத் துணிந்தான்.]

19. ஒற்றைத் துகிலும், உயிரும் இரண்டாக
முற்றும்தன் அன்பை முதலோடும்—பற்றி
அரிந்தான் ; அரிந்திட்(டு), அவள் நிலைமை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து.

20. போய் ஒருகால் மீளும் ; புகுந்தொருகால் மீண்டேகும் ;
ஆயர் கொணர்ந்த அடுபாலின்—தோயல்
கடைவார்தம் கைபோல ஆயிற்றே, காலன்
வடிவாய வேலான் மனம்.

21. "தீக்கான கத்துரையும் தெய்வங்காள் ! வீமன்தன்
கோக்கா தலியைக் குறிக்கொள்மின் !—நீக்காத
காதலன்பு மிக்காளைப் காரிருளிற் கைவிட்டின்(று)
ஏதிலன்போற் போகின்றேன் யான்."

[பின்பு தமயந்தி தனியே புலம்பி நடந்து சேதிநாடு அடைந்தாள். நளன் வாகுவனாய் அயோத்தி யடைந்து, மடைத்தொழிலும் தேர்த்தொழிலும் ஏற்றுக்கொண்டான். தமயந்தி தன் பிறந்தகம் சேர்ந்த பிறகு, நளனைத் தேடி வருமாறு அந்தணத் தூதர் சிலரை அனுப்பினாள். ஒரு புரோகிதன் அயோத்தி நகர் அடைந்து தேடித், தமயந்தி தன்னிடம் கூறியவாறு சாற்றினாள்.]

22. "கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ ?—தான்" என்று
சாற்றினான் ; அந்தவுரை தார்வேந்தன் தன்செவியில்
ஏற்றினான் ; வந்தான் எதிர்.

23. "ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
பண்டைவிதியின் பயனேகாண் ;—தண்டாளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தானென்(று) ஐயுறேல் நீ."

[புரோகிதன் தான் அறிந்தவற்றைத் தமயந்தியிடம் கூறினான். இரண்டாம் சுயம்வரம் என்று அயோத்தி அரசனுக்கு அறிவிக்கப்பட்டது. நளன் வாகுவனாய்த் தேரோட்டி வந்தான்.]

நளன் தன் மக்களைக்கண்டு தழுவிப் புலம்பியது

24. மக்களை முன்காணு ; மனநடுங்கா ; வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா ;—"மக்காள்நீர் !
என்மக்கள் போல்கின்றீர், யார்மக்கள் ?" என்றுரைத்தான்
வன்மக் களியானை மன்.

25. "மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம் ;
அன்னைதனைத் கான்விட் டவனேக,—இந்நகர்க்கே
வாழ்கின்றோம் ; எங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்," என்றார் அழுது.

26. "உங்கள் அரசொருவன் ஆளநீ ரோடிப்போங்(து)
இங்கண் உறைதல் இழுக்கன்றோ !—செங்கை
வளவரசே !" யென்றுரைத்தான், மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி யெடுத்து.

27. "நெஞ்சால்இம் மாற்றம் நினைந்துரைக்க நீயல்லால்
அஞ்சாரோ மன்னர் அடுமடையா !—எஞ்சாத
தீமையே கொண்ட சிறுதொழிலாய் ! எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி"

28. "எந்தை கழலிணையில் எம்மருங்கும் காணலாம்
கந்து சுளியும் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியிற் றேய்ந்த வடு."

29. "மன்னர் பெருமை மடைய ரறிவரோ ?
உன்னை அறியா(து) உரைசெய்த—என்னை
முனிந்தருளல்" என்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண்.

30. "கோற்றக் குமரனையும் கோதையையும் தான்கண்டு
மற்றவன்றான் ஆங்குரைத்த வாசகத்தை—முற்றும்
மொழிந்தார் ;அம் மாற்றம் மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தாள் அழுது.

[தான் கண்ட உண்மையைத் தமயந்தி தன் தந்தையிடம் கூறினாள். நளன் வீமராஜன் வேண்டுகோளால் அரசன் தந்த இரு துகிலையும் உடுத்து முன்னையுருப் பெற்றான்.]

### கலி நீங்கியது

31. மிக்கோன் உலகளந்த மெய்யடியே சார்வாகக்
புக்கோர் அருவினைபோற் போயிற்றே—அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு.

[நளன் நாடு நோக்கிப் புறப்பட்டான். மன்னர் பலர் பின்வந்தனர். புட்கரனோடு மறுசூதாடி இழந்த பொருளையெல்லாம் திரும்பப் பெற்றான் நளன்.]

32. ஏனை முடிவேந்தர் எத்திசையும் போற்றிசைப்ப,
சேனை புடைசூழத் தேரேறி—ஆனபுகழ்ப்
பொன்னகரம் எய்தும் புரந்தரனைப் போற்பொலிந்து
நன்னகரம் புக்கான் நளன்.

33. கார்பெற்ற தோகையோ! கண்பெற்ற வாண்முகமோ!
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ!—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்கு
ஏதோ உரைப்பன் எதிர்!

---

## 2. அரிச்சந்திர புராணம்

### சந்திரமதி திருமணம்

1. அருந்தவ முனிவ ரெல்லாம் அரசனை நோக்கி, "ஐய!
பெருந்தவ முடையார் மண்ணில் நீயலால் பிறரும் உண்டோ?
திருந்திழை தனையுனக்கே திருமணம் முடிக்கத் தாதை
பொருந்தினன் வல்லை நீயும் எம்முடன் போதி," என்றார்.

2. "கன்னலங் கழனி வேலிக் கன்னோசி நோக்கி, இவ்வூர்
மன்னரும் அமைச்சர் தாமும் சேனையும் மாத ராரும்
முன்னரே செல்க," என்று மொழிந்து,சூ தனைக்கண் சாத்தி
"வன்னமா மணித்தேர் கொண்டு வருக")என அருளிச் செய்தான்.

வேறு

3. மாதங் கமடங் கல்வயப் பரிமா
பூதம் பலதே ரொடுபூ ணநிரீஇச்
சூதன் கொடுவந் துசுடர்க் கழலோன்
பாதங் களின்மீ துபணிந் தனனே.

4. வாரே றுசெழுந் தடமா முரசும்
நீரே றியசங் கமுநின் றதிரத்
தாரே றுபுயங் கள்ததும் பநெடுந்
தேரே றிவிரைந் துசெலுத் தினனே.

5. நற்றே ரினமன் னன்நடத் திடவே
சுற்றே றநிறைந் தயல்துன் னினவால்
குற்றே வல்செயும் பலகொற் றவர்தம்
பொற்றேர் சதகோ டிபொருப் பெனவே.

6. சிறையோ திமமேல் வருதே வனெனப்
பொறையோ டொளிர்வெண் சிவிகைப் பொலிவுற்(று)
இறையோ னொ(டு)அமைச் சர்இறைஞ் சிடமா
மறையோ திவசிட் டனும்வந் தனனே.

7. தரைசேர் கடல்ஒத் தனதா னைகடல்;
திரைபோ லநடந் தனதிண் பரிமா ;
விரைசேர் அருவித் திரள்வீழ் பலமால்
வரைபோ லநடந் தனவா ரணமே.

வேறு

8. வாள்செலச் சிலைசெல மாத ரார்செல
ஆள்செலத் தேர்செல ஆனை செல்லநீள்
தோள்செலுஞ் சுடர்மணித் தோளி னன்பல
நாள்செலக் கனேசிமா நாட்டை நண்ணினன்.

9. இடியென முழங்கிட இயம்பு இயங்களால்
வெடிபடும் உலகமும் விசும்பும் என்னநீள்
கொடிகளும் குடைகளும் குழுமக் கொற்றவன்
கடிகமழ் கங்கையின் கரையை நண்ணினன்.

10. வரைசெறி வேழமும், மாவின் கூட்டமும்,
விரைசெறி தார்ப்புய வேந்தர் மக்களும்
பிரசமா மலர்க்குழல் பேதை மாதரும்,
அரசனும் கங்கைநீ ராடி ஏறினர்.

11. அன்னமா டுந்துறை அகழும் வாவியும்,
வன்னமா மதில்களும், மாட கூடமும்,
பொன்னின்மா மேடையும் பொலிந்து தோன்றவக்
கன்னமா புரிதனைக் கண்ணின் நோக்கினன்.

வேறு

12. முன்ன மன்னன் முகுத்தமொ(ரு) ஏழ்எனச்
சொன்ன நல்தினம் வந்து தொடங்கலும்
மன்ன னும்மறை யோர்களு மாதரும்
கன்ன லந்திருக் காவணத் தெய்தினர்.

13. வேந்தர் ஈண்டினர் ; வேதியர் ஈண்டினர் ;
மாந்தர் ஈண்டினர் ; மங்கையர் ஈண்டினர் ;
ஆய்ந்த நீதி அமைச்சரும் அவ்வவர்ச்
சேர்ந்த சேனையும் சேரவந் தீண்டின.

சந்திரமதி சுயம்வர மண்டபம் புகுதல்

14. சென்னி நின்(று)இரு சீறடி மட்டும்வான்
மின்னி னலமைத் தன்னசெம் மேனியைப்
பொன்னி னல்மணி யால்புதைத் தேஎழில்
கன்னி தன்மணக் காவணத் தெய்தினள்.

15. அன்ன காலையின் அங்கைகள் நீட்டியே
கன்னல் மாமொழிக் காரிகை தோழிமார்
மன்னர் நாமமும் நாடும் வழிகளும்
இன்ன தின்ன தெனஎடுத் தோதுவார்.

[தோழியர், அரசர் பலர் பெயரும் ஊரும் பெருமையும் கூறிவந்து அரிச்சந்திரனைத் தெரிவித்தனர்.]

16. மந்தர மனையதோள் வள்ளல் பேர்சொலச்
சுந்தரத் தோகைமார் தோளைத் தாழ்த்தியச்
சந்திர வதியரிச் சந்தி ரன்றனைக்
கந்தர நீட்டியுட் கருத்து நோக்கினள்.

17. அங்கைவேல் மன்னனும் ஆசை மீக்கொள
மங்கைதன் பங்கய வதனம் நோக்கினன் ;
செங்கயற் கண்ணினள் திருக்க ழுத்தினில்
மங்கல நாணுறீஇ வயங்கக் கண்டனன்.

18. "கன்னியென் றெண்ணினம்; கன்னி யோவலள் ;
முன்னரே மங்கலம் பூண்ட மொய்குழல்,
இன்னமு மொருவருக் கெய்து மோ?"வெனு
மன்னவன் மாதுலற்(கு) உரை வழங்கினன்.

19. "பொறுத்துமுன் மங்கலம் பூண்ட பேதையை
மறுத்திரண் டாவது மணமு டிப்பரோ !
சிறுத்தவர் செய்தொழில் திரை வரைப்பினில்
நிறுத்தினிர் நீர்"என நெடிது கூறினன்.

20. வள்ளல் (சு) துரைத்தலும் மதிதயன் தன(து)
உள்ளம்விட் டோங்கிய வுவகை யம்பெரு
வெள்ளமுள் ளடக்கியே, "வேந்தர் காள்! இவன்
கள்ளமோ, மெய்ம்மையோ கட்டு ரைத்ததே."

21. "தையலாள் கழுத்தினில் தாலி யுண்டெனில்
கையினுற் கண் ணுறக் காட்டு வீர்?"எனச்
செய்யகை யறைந்தணி மூக்கிற் சேர்த்தி,"இவ்
வையனும் பொய்யன்"என்(று) அரசர் கூறினர் :

22. "மண்டல வேந்தனெம் மடந்தை மங்கலம்
கண்டதும், நீங்கள்தாம் கண்டி லாததும்,
திண்டிற வீர்! ஒரு தேவ ராசியம்
உண்(டு)"என மதிதயன் உரைப்ப தாயினன்.

23. "அண்டர் நாயகன் வரமளித்த நாளையில்,
வண்டணி குழலியோ(டு) உதித்த மங்கலம்
கண்டவர் பதியிவட்(கு) என்ற கட்டுரை
உண்டஃ தன்றிவே றுண்டு கேட்டிரால்."

24. மஞ்சனச் சடையினன் வரத்தின் வந்தநாள்,
கஞ்சன நீழலிற் காண்ப தன்றியே
அஞ்சனக் கண்ணிக்கும் அங்கைக் கெய்திடா(து)
எஞ்சலில் யாவரும் யானும் கண்டிலேம்."

வேறு

25. என்றலும் வல்லிமுன் எண்ணிய நாமம்
ஒன்றல(து) உள்ளுற வுன்னல ளாகிச்
"சென்றவன் மார்பிது சேர்(க)"என வுன்னு
மன்றலர் மாலையை வானி லெறிந்தாள்.

26. வஞ்சி வழங்கிய மாலை யணிந்தோன்
செஞ்சுட ரின்முக நின்றொளி செய்ய
வெஞ்சுடர் முன்சசி யாமென மிக்கோர்
கஞ்ச முகங்கள் கரிந்தன வன்றே.

27. மாதர்கள் ஆர்த்தனர்; வானவர் ஆர்த்தார்;
கீதர்கள் ஆர்த்தனர்; கேளிரும் ஆர்த்தார்;
சூதர்கள் ஆர்த்தனர்; துறவரும் ஆர்த்தார்;
வேதர்கள் ஆர்த்தனர்; வேலை யடங்க.

28. நல்லியல் நூலறி நாவலர் பாடப்,
பல்லியமும் பல பாடலும் ஆர்ப்ப,
அல்லி மலர்த்தொடை மாலை யணிந்த,
வல்லியு மன்னனும் மாளிகை புக்கார்.

—நல்லூர் - வீரன் ஆசுகவிராயர்

---

# குசேலோபாக்கியானம்

## குசேலரது வறுமை வாழ்க்கை

1. பல்லெலாந் தெரியக் காட்டிப், பருவரல் முகத்திற் கூட்டிச்,
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித், துணைக்கரம் விரித்து நீட்டி,
மல்லெலாம் அகல வோட்டி, மானமென் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ! இழிவிழி வெந்த ஞான்றும்.

2. இருநிலத் தியாவர் கண்ணும் ஏற்பதை யிகழ்ச்சி யென்ன
ஒருவிய உளத்தான் காட்டில் உதிர்ந்துகொள் வாரும் இன்றி
அருகிய நீவா ரப்புல் தானியம் ஆராய்ந்(து) ஆராய்ந்(து)
உருவவொள் நகத்தாற் கிள்ளி யெடுத்துடன் சேரக் கொண்டு,

3. வந்துதன் மனைகை நீட்ட வாங்கிமற் றவற்றைக் குற்றி,
அந்த மெல்லியல்பா கஞ்செய்(து) அதிதிக்கோர் பாகம் வைத்
தந்ததன் பங்(கு) அயின்று, தவலரும் உவகை பூத்து [துத்
மந்திர மறைகட் கெட்டா மாலடி நினைந்திருப்பான்.

4. இற்றிவன் வாழ்க்கைத் தன்மை இருபத்தேழ் மைந்த ருக்கு
மற்றவப் பாகக் கஞ்சி மட்குழி சியைப்பால் வைத்துப்
பற்றுகோ ரிகையால் மொண்டு, வாக்கப்பற் றுமை கண்டு
வெற்றுடம் பாகிநிற்பள் ; மெலிவள்;பின் என்செய் வாளால்.

வேறு

5. ஒருமகவுக் களித்திடும்போ(து) ஒருமகவு
கைநீட்டு முந்திமேல் வீழ்ந்(து)
இருமகவும் கைநீட்டும்; மும்மகவும்
கைநீட்டும்; என்செய் வாளாள்;
பொருமியொரு மகவழும்;கண் பிசைந்(து) அழுமற்
றொருமகவு; புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமகவு;
எங்ஙனம் சகிப்பாள்; பெரிதும் பாவம்.

6. இவ்வண்ணம் கலாம்விளைக்கும் மைந்தர்களை
நனிநோக்கி இரங்கி யேங்கிச்,
செவ்வண்ணக் கரதலத்தால் அணைத்து,மடித்
தலத்திருத்திச், சிறப்புச் செய்து,

மைவண்ணக் கண்ணீரைத் துடைத்து,முகம்
வெரிந்புறந்தை வந்தும், ஆம்பல்
அவ்வண்ண வாய்முத்தங் கொண்டுநயந்(து)
ஓர்விதத்தில் ஆற்றல் செய்வாள்.

7. வேறுமனைச் சிறுனயின்ற பக்கணங்கண்(டு)
ஓடிவந்து விழிநீர் வாரச்
சீறுதலி லாதஅனை முகம்பார்த்து "இன்
ஞன்இன்ன தின்ருன் ; என்வாய்
ஊறுதலால் இப்பொழுதே செய்தளித்தி"
என்றுடுத்த வுடைதொட் டீர்க்கும்
தேறுதலில் சிறுமகவை யெடுத்துமார்
பிடையணைத்துச் சிந்தை நோவாள்.

8. இவ்வாறு மிடியென்னும் பெருங்கடலில்
அழுந்தியுந்தற் கினிமை சான்ற,
செவ்வாய்மை யந்தணனை வெறுத்துரையாள் ;
அலர்மொழிகள் சிறிதும் செப்பாள் ;
துவ்வாமை மைந்தர்கள்பால் மறந்தும்இயற்
ருள் ; அவள்தன் சுகுண மென்னே !
எவ்வா(று)இத் துயர்க்கடல்நீந் துவம்எனுமோ
ரெண்ணமுளத் தென்று முண்டால்.

சுசீலை குசேலரிடம் குறை நேர்ந்தது

9. கற்புடைய வருந்ததியே முதன் மடவார்
புகழவரும் கற்பின் மிக்காள்
பொற்பமையா மிடியென்னும் சாகரத்தி
லழுந்திமனம் புண்ணே யாகிப்,
பற்பலநாள் செலவொருநாள் அமயமறிந்(து)
உளந்துணிந்து, பண்பிற் போற்றிச்,
சொற்பெறுநற் புகழ்க்கணவன் முகநோக்கி
யெண்ணியவை சொல்ல லுற்ருள் :

10. "கொழுந்துவிட் டெரியும் முத்தழல் வளர்க்கும்
கோதிலா முனிவ! நம் சிறூர்கள்
அழுந்துபட் டேங்க, வெழும்பசி யொழிக்க
அனமிலா துயங்கினர் அந்தோ !
முழங்கும் ஈரொன்பான் புராணம்நன்(கு) ஓர்ந்தோர்
மூரலால் உயிர்நிற்கு மென்று
வழங்குவர் அச்சொல் மறிதிரைக் கடல்சூழ்
மண்ணிடத் துண்மையே யாமே."

11. "தரித்திர மிக்க வனப்பினை யொடுக்கிச்
சீரத்தை யுலர்தர வாட்டும் ;
தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்பும் ;
சாற்றரு முலோபத்தை மிகுக்கும் ;
தரித்திரம் தலைவன் தலைவியர்க் கிடையே
தடுப்பருங் கலாம்பல விளைக்கும் ;
தரித்திரம் அவமா னம்பொய் பேராசை
தருமிதிற் கொடியதொன் றிலையே."

12. "தரித்திரங் களிப்பாங் கடலுக்கோர் வடவை ;
சாற்றுமெண் ணங்கள்வா ழிடமாம் ;
தரித்திரம் பற்பல துக்கமும் தோன்றத்
தக்கபே ராகர மென்ப ;
தரித்திரம் நன்மை சாலொழுங் கென்னும்
தழைவனந் தனக்கழல் தழலாம் ;
தரித்திரம் கொடிய வெவற்றினும் கொடி(து) ; அத்
தகையதை ஒழித்தல்நன் றாமே."

13. "யாதவர் குலத்திற் றோன்றிய வரசர்
யாவர்க்கும் அதிபனும் இணையில்
மாதவ னுடன்நீ பலகலைக் கடலை
வாய்மடுத் தனையென வகுப்பர் ;
ஆதலின் அப்பீ தாம்பரன் மருங்கில்
அணிந்(து)அவன் பாற்பெருஞ் செல்வம்
தீதறக் கொண்டு கொடுத்துநஞ் சிறவர்
செல்லல்நோய் தவிர்க்குதல் வேண்டும்."

14. "இளமையில் நின்னோ(டு) இருங்கலை கற்ற
எழிலிபோல் வண்ணனிற் கண்ட
அளவையே யெல்லாப் பேசரும் வளமும்
அளிக்குவன் ; ஐயம தின்றால்
பளகறு நேசன் ஒருவனைப் படைத்தல்
பருந்தனப் பொதிபெற்றாற் போன்ம்மென்(று)
உளமிகத் தெளிந்தோர் ; புகலுநன் மாற்றம்
உண்மையாம் ; பொய்ம்மையா காதே."

15. "கண்ணனைத், துளவ மாலிகை நிறத்திற்
கமலைவாழ் தரவருள் புரிந்த
மண்ணிய மணியைத், தினந்தினம் போற்றும்
மாசறு தவத்தினர் உள்ளத்(து)
எண்ணிய வெண்ணி யாங்களிப் பவனை
எய்திநஞ் சிறுருயச் செல்வம்
நண்ணிவா" வென்னு நங்கை சொற்றிடலும்
நற்றவக் குலேசன் ஈதுரைக்கும் :

குசேலர் மறுமொழி

16. "மக்களுக் கிரங்கி வாடும் மடத்தகை யணங்கு! கேட்டி,
தக்கமுற் பவத்தில் ஆன்ற தருமம்நன் கியற்றி னோர்கள்
ஒக்கவிப் பவத்தி லின்பம் ஒருங்கனு பவிப்பர் ; இன்றேல்
மிக்கவெந் துயரத் தாழ்வர் ; இதற்குளம் மெலித லென்னே."

17. "மைந்தர்கள் தம்மைப் போற்ற வளநிதி வேண்டு மென்றாய் !
நந்திய பறவை கான நயந்துறை விலங்கு முன்னு
வந்தபல் லுயிர்க்குச் சேம வைப்புண்டோ ! வருவா யுண்டோ !
எந்திடத் தேனும் போய்லன் றிரப்பது தானு முண்டோ !"

18. "கல்விலுட் சிறுதே ரைக்கும், கருப்பையண் டத்து யிர்க்கும்,
புல்லுண வளித்துக் காக்கும் புனத்துழாய்க் கண்ணி யண்ணல்,
ஒல்லுநின் மைந்தர்க் காவா தொழிவனோ ? ஒழியா னுண்மை
மெல்லியல் ! கொண்ட துன்பம் விடுவிடு, மறந்து மெண்ணல்."

19. "வளநிதி படைத்தோ மென்றும்; வடிவவில் லுடையோ மென்றும்,
அளவில்சேய் ஈன்றோ மென்றும், அனுபவத் தமைந்தோ மென்றும்,
இளமையில் சிறந்தோ மென்றும், எழினல முடையோ மென்றும்,
உளமகிழ் கூர்வர் ; சற்றும் உண்மை நூல் உணர்ச்சி யில்லார்."

20. "பாற்கட லடுத்த மீனப் பால்விரும் பாது மற்ற
வேற்குமா விரும்பி ஞற்போல் எம்பிரான் திருமுன் சார்ந்து
நாற்கதி கடக்கும் இன்பச் செல்வத்தை நண்ணி டாமல்
சேற்கருங் கண்ணாய்! துன்பச் செல்வமோ நண்ணு வேன்யான்."

—வல்லூர் - தேவராஜ பிள்ளை

---

## 4. கம்பராமாயணம்

### சுந்தர காண்டம்—உருக்காட்டுப் படலம்

### சீதையின் துயரம்

1. "பொறையிருந் தாற்றியென் னுயிரும் போற்றினேன்
அறையிருங் கழலவற் காணும் ஆசையால் ;
நிறையிரும் பல்பகல் நிருதர் நீள்நகர்ச்
சிறையிருந் தேனையப் புனிதன் தீண்டுமோ ?

2. "வஞ்சனை மானின்பின் மன்னைப் போக்கி,யென்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாயென,
நஞ்சனை யானகம் புகுந்த நங்கையான்,
உய்ஞ்சனன் இருத்தலும் உலகம் கொள்ளுமோ ?"

3. "அற்புதன் அரக்கர்தம் வருக்கம் ஆசற
விற்பணி கொண்டருஞ் சிறையின் மீட்டநாள்,
'இற்புகத் தக்கலை' யென்னின், யானுடைக்
கற்பினை எப்பரி(சு) இழைத்துக் காட்டுகேன் ?"

4. "ஆதலால் இறத்தலே அறத்தின் ஆ(று)" எனச்
"சாதல்காப் பவருமென் தவத்திற் சாம்பினர் ;
ஈதலா திடமும்வே றில்லை" யென்றொரு
போதுலா மாதவிப் பொதும்பர் எய்தினள்.

அனுமான் அருகில் அடைதல்

5. கண்டனன் அனுமனும் கருத்தும் எண்ணினன் ;
கொண்டனன் துணுக்கம்;மெய் தீண்டக் கூசுவான் ;
“ அண்டர்நா யகன்அருள் தூதன் யான்”எனத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினன்.

6. “அடைந்தனென் அடியனேன் இராமன் ஆணையால்;
குடைந்துல கனைத்தையும் நாடுங் கொட்பினால்
மிடைந்தவர் உலப்பிலர் ; தவத்தை மேவலால்
மடந்தை!நின் சேவடி வந்து நோக்கினேன்.”

7. “ஐயுறல்! உளதடை யாளம் ; ஆரியன்
மெய்யுற வுணர்த்திய வுரையும் வேறுள;
கையுறு நெல்லியங் கனியிற் காண்டியால்
நெய்யுறு விளக்கனாய்! நினையல் வே(று)”என்றான்.

வேறு

8. என்றவன் இறைஞ்ச நோக்கி, இரக்கமும் முனிவும் எய்தி,
‘நின்றவன் நிருதன் அல்லன்; நெறிநின்று பொறிகள் ஐந்தும்
வென்றவன் ; அல்லன் ஆகில் விண்ணவன் ஆகல் வேண்டும் ;
நன்றுணர் வுரையன்; தூயன்; நவையிலன் போலும்’ என்னா,

9. ‘அரக்கனே யாக; வேறோர் அமரனே யாக ; அன்றிக்
குரக்கினத் தலைவனே தான் ஆகுக ; கொடுமை யாக ;
இரக்கமே யாக வந்திங் கெம்பிரான் நாமஞ் சொல்லி
உருக்கினன் ; உணர்வைத்தந்தான் ; உயிரிதின் உதவி
[யுண்டோ?”

10. எனநினைந்(து) எய்தநோக்கி ‘ இரங்குமென் னுள்ளம் ; கள்ளம்
மனனகத் துடையமாய வஞ்சகர் மாற்றம்அல்லன் ;
நினைவுடைச் சொற்கள் கண்ணீர் நிலம்புகப் புலம்பா நின்றான்;
வினவுதற் குரியன்’ என்னா “வீரநீ யாவன்?” என்றாள்.

அனுமான் தன் வரலாறு கூறி அடையாளம் கூறுதல்

வேறு

11. “நடத்தலரி தாகும்நெறி; நாள்கள்சில தாயர்க்(கு)
அடுத்தபணி செய்திவண் இருத்தி”யென அச்சொற்(கு)
உடுத்த உடையோடும், உயிர் உக்கஉட லோடும்,
எடுத்தமுனி வோடும்,அயல் நின்றதும் இசைப்பாய்.

12. நீண்டமுடி வேந்தனருள் ஏந்தி நிறைசெல்வம்
பூண்டதனை நீங்கி,நெறி போதலுறு நாளில்,
ஆண்டநகர் ஆரையோடு வாயில்அக லாமுன்
"யாண்டையது கான்?" என இசைத்ததும் இசைப்பாய்.

கணையாழி கொடுத்தல்

13. "மீட்டும்உரை வேண்டுவன இல்லை'யென 'மெய்ப்பேர்
தீட்டியது; தீட்டரிய செய்கையது; செவ்வே
நீட்டி(து)என நேர்ந்தனன்" எனநெடிய கையாற்
காட்டினன்ஓர் ஆழி;அது வாணுதலி கண்டாள்.

கணையாழி பெற்ற சீதையின் உணர்ச்சி

14. இறந்தனர் பிறந்தபயன் எய்தினர்கொல் என்கோ!
மறந்தனர் அறிந்துணர்வு வந்தனர்கொல் என்கோ!
துறந்தவுயிர் வந்திடை தொடர்ந்ததுகொல் என்கோ!
திறந்தெரிவ தென்னை கொல்! இந் நன்னுதலி செய்கை.

சீதை அநுமானைப் பாராட்டியது

15. "மும்மைசால் உலகம் தந்த முதல்வற்கு முதல்வன் தூதாய்ச்
செம்மையால் உயிர்தந் தாய்க்குச் செயலென்னல் எளிய துண்டே;
அம்மையாய் அதத னுய அப்பனே! அருளின் வாழ்வே!
இம்மையே மறுமைதானு நல்கினை யிசையோ(டு)"என்றாள்.

16. "பாழிய பணைத்தோள் வீர! துணையிலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ளலே! யான் மறுவிலா மனத்தேன் என்னில்,
ஊழியோர் பகலாய் ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும்வீ வுற்றஞான்றும் இன்றென விருத்தி"யென்றாள்.

பின்பு கடல் கடந்ததைப் பற்றிச் சீதை கேட்க அநுமான் கூறியது

வேறு

17. "சுருங்கிடை உன்னொரு துணைவன் தூயதாள்
ஒருங்குடை யுணர்வினர் ஒய்வின் மாயையின்
பெருங்கடல் கடந்தனர் பெயரும் பெற்றிபோல்
கருங்கடல் கடந்தனென் காலினல்" என்றான்.

மீண்டும் சீதை வினவியது

18. "இத்துணைச் சிறியதோர் எண்ணில் யாக்கையை
தத்தினை கடலது தவத்தி னுயதோ?
சித்தியின் இயன்றதோ? செப்புவாய்" என்றாள்,
முத்தினும் நிலவினும் முறுவல் முற்றினாள்.

அனுமான் பேருருவம் கொண்டது

19. சுட்டினன்; நின்றனன்; தொழுத கையினன்;
விட்டுயர் தோளினன் விசும்பின் மேக்குயர்
எட்டரு நெடுமுக டெய்தி நீளுமேல்
முட்டுமென் றுருவொடு வளைந்த மூர்த்தியான்.

அனுமானை உடம்பைச் சுருக்கிக்கொள்ளுமாறு கூறி மேலும் சீதை கூறியது

20. "மாண்டேன் எனினும் பழுதன்றே; இன்றே மாயச் சிறைநின்று
மீண்டேன் என்னை யொறுத்தாரைக் குலங்க ளோடும் வேரறுத்தேன்
பூண்டேன் எங்கோன் பொலங்கழலும்; புகழே யன்றிப் புன்பழியும்;
தீண்டேன் என்று மனமகிழ்ந்தாள்; திருவின் முகத்துத் திருவன்னாள்.

—கம்பநாடர்

---

## 5. திருவிளையாடற் புராணம்

### மாமனாக வந்து வழக்குரைத்தது

1. கன்னிநான் மாடக் கூடல் கடிநகர் வணிக மாக்கள்
தன்னின்மா நிதிக்கோன் அன்னான் தனபதி என்னும் பேரான்
மன்னினான்; அனையான் கற்பின் மடவரல் சுசீலை என்பாள்
பொன்னினாள் முளரிச் சேக்கைப் புண்ணியத் திருவின் அன்னாள்.

2. எனஇவர் தமக்கு மைந்தற் பே(று) இன்றி இரங்கு நாளில்,
தனபதி மருகன் தன்னைத் தகவுசால் மகவாக் கொண்டு
மனமகிழ் சிறப்பால் நல்க, மனைவியும் தொழுது வாங்கிப்
புனைவன புனைந்து போற்றிப் பொலி(வு)உற வளர்த்துக் கொண்டாள்.

3. தனபதி மகப்பே(று) அற்றான் ஆயினும் தணவாக் காதல்
மனைவிமேல் வைத்த ஆசை மயக்கினால் வருந்தி ஈன்ற
தனையனை மகவாத் தந்த தங்கைமேல் தீராப் பூசல்
வினைவிளைத்(து) ஒழுக ஓர்நாள் இளையளும் வெகுண்டு சொல்வாள்:

4. "பெருமிதம் உவக்(கு)என்? பிள்ளைப்பே(று) அற்றபாவி! நீஎன்
அருமைநல் மகனல் அன்றோ இருமையும் அடைவாய்"என்ன,
பெரிதுநாண் அடைந்து 'மேலைக்(கு) ஆயினும் பிள்ளைப் பேறு
தருதவம் புரிவேன்' என்னுத் தனபதி தவமேற் செல்வான்.

5. தன்பெரும் செல்வம் எல்லாம் மருமகன் தனக்கே யாக்கி,
அன்புகொள் மனைவி யோடும் அருந்தவ நெறியிற் சென்றான்;
பின்(பு)அவன் வரவு தாழ்ப்ப, மருமகன் பெற்ற எல்லாம்
வன்பினல் வழக்குப் பேசி வௌவினர் தாய மாக்கள்.

6. விளைநிலம், அடிமை, பைம்பூண்,வெறுக்கை,நன் பசுக்கள்,ஏனை
வளனும்மாற் றவர்கைக் கொள்ள, வன்சிறை இழந்த புள்போல்
தளர்(வு)உறு மகனும் தாயும் 'சார்(பு)இலார் தம்ம னோர்க்(கு) ஓர்
களைகணுய் இருக்கும் கூடற் கடவுளே சரணம்' என்னு.

7. வந்துவான் அகடுபோழ்ந்த மணிமுடி விமானக் கோயில்
சுந்தர நாதன்பாதத் துணைதொழு(து)இறைஞ்சி, "யார்க்கும்
தந்தையும் தாயும்ஆகும் தம்பிரான்! நீரே, எங்கட்கு
எந்தையும் யாயும்" என்னு இரங்கிநின்(று) இனைய சொல்வாள்:

8. "என்மகன் தன்னைமைந்தன் இன்மையால் எவரும் காணத்
தன்மகன் ஆகக்கொண்டு தகுதியால் அன்றே காணி,
பொன்மனை, பிறவும் நல்கிப் போயினன் எம்முன்; இப்பால்
வன்மையால் தாயத் தார்கள் அவைஎலாம் வௌவிக் கொண்டார்.

9. ஒருத்தி நான்;ஒருத்திக்(கு) இந்த ஒருமகன்;இவனும் தேறும்
கருத்(து) இலாச் சிறியன்; வேறு களைகணும் காணேன்; ஐய!
அருத்திசால் அறவோர் தேரும் அருட்பெருங் கடலே; எங்கும்
இருத்திநீ அறியாய் கொல்லோ" என்றுபார் படிய வீழ்ந்தாள்.

10. மாறுகொள் வழக்குத் தீர்க்க வல்லவர் அருளி னலே [யில்
சீறுகொள் வடிவேல் கண்ணாள் சிறுதுயில் அடைந்தாள்; மெய்
ஊறுகொள் கரணம் ஐந்தும் உற்(று)அறி கனவில் கங்கை
யாறுகொள் சடையார் வேதச் செல்வராய் அடுத்துச் சொல்வார்:

11. "புலர்ந்தபின் தாயத் தோரைப் புரவலன் ஆணை ஆற்றல்
வலம்தரு மன்றத்(து) ஏற்றி மறித்தனை இருத்தி,யாம்போந்(து)
அலந்தரும் அறிவால் மூத்தோர் அனைவரும் இசைய அந்தச்
சலம்தரு வழக்குத் தீர்த்துத் தருகுவம் போதி" என்றார்.

12. வேரிஅம் குவளை உண்கண் விழித்தனள் வியந்து, "கெட்டேன்!
ஆரும்இல் லார்க்குத் தெய்வம் துணை என்ப(து) அறிந்தேன்" என்னாக்
கார்இருங் கயல்உண் கண்ணாள் கணவனைத்தொழுது வாழ்த்திச்
சீர்இளம் குமர னோடும் தெரிவைதன் மனையில் சென்றாள்.

13. சென்றவள் கங்குல் எல்லை தெரிந்தபின் எழுந்து, வெள்ளி
மன்றவன் கோயில் வாயில் வந்துவந் தனைசெய்(து),அம்பொன்
குன்றவன் உரைத்த ஆற்றால் கொடுமைசால் வழக்குப் பூட்டி
வென்றவர் இருக்கை எய்தி, விளம்புவாள் பலரும் கேட்ப:

14. "அட்டில்வாய் நெருப்பிடேலோர் அடிஇடேல்; அறத்தா(று) அன்றிப்
பட்டிமை வழக்கால்வென்று போகொட்டேன்; பலரும் கேட்க
இட்டனன் அரசன் ஆணை; அறத்தவி(சு) ஏறி ஆன்றோர்
ஒட்டிய படிகேட்(டு) எங்கள் உரிப்பொருள் தந்து போமின்."

15. என்றனள் மறித்த லோடும் இழுக்குஉரை ஆடி, வைது,
வன்திறல் வலியார் தள்ளி அடித்தனர்; மைந்த னோடும்
சென்றனள் 'முறையோ' என்னாத் திருந்(து)அறத் தவிசி னோர்முன்
நின்றுஉரை ஆடினாள்; கேட்(டு) அறிந்தனர் நீதி நூலோர்.

16. அறத்தவி(சு) இருப்போர் ஏவல் ஆடவ ரோடும் போந்து
மறித்(து), அவைக் களத்தில் கூட்டி வந்தனள், வந்த எல்லை,
அறக்கொடி பாகர் வெள்ளி அம்பல வாணர் தாம்அத்
திறத்தன பதியே என்னத் திருஉருக் கொண்டு செல்வார்.

வேறு

17. பெருவிலைக் குண்டலம் பிடரில் பத்திபாய்ந்(து)
எரிகதிர் கவிழ்ப்ப,வாள் எறிக்கும் அங்கதம்
அருவரைத் தோள்கிடந்(து) இமைப்ப ஆகமேல்
குருமணிக் கண்டிகை குலாய்ப்பின் கோட்டவே.

18. முரல்அளி புறவிதழ் மெய்ப்பச் செய்பதா
மரைசிறி(து) அலர்ந்தென மணிசெய் மோதிரக்
கரதலம் வீசி,ஓர் கடுங்கண் ஏ(று)எனப்
பெருமித நடையொடு நடக்கும் பெற்றியார்.

19. வாடிய முளரிபோல் மா(று) இட்டார் இடத்(து)
ஊடியும், அலர்ந்த போ(து)ஒப்ப மைந்தன்மேல்
நாடிய தண்அளி நயந்தும், உட்கிடை
கூடிய முகத்தினர் குறுகு வார்அவை;

வேறு

20. "அரசன் இங்(கு) இல்லை கொல்லோ? ஆன்றவர் இல்லை கொல்லோ ?
குரைகழல் வேந்தன் செங்கோல் கொடியதோ? கோ(து)இல் நூல்கள்
உரைசெயும் தெய்வம் தானும் இல்லைகொல்? உறுதி ஆன
தருமம் எங்(கு) ஒளித்ததே கொல்?" என்(று)அறத் தவிசில் சார்வார்.

21. தனபதி வரவு நோக்கி வஞ்சனைத் தாயத் தார்கள்,
இனைவுறு(ம்) மனத்தார் ஆகி விம்மிதம் எய்தி வெல்லும்
மனவலி இழந்து பண்டு வழக்(கு) அலா வழக்கால் வென்ற
வினைநினைந்(து) உள்ளம் அச்சம் நாணினால் விழுங்கப் பட்டார்.

22. மாதுலர் ஆகி வந்தோர் மருகனைத் தம்பின் வந்த
தா(து)உல ராத கோதை தன்னொடும் தழீஇத்தாம் கண்ட
மீ(து)உல ராத சாம வேதம்ஆர்ப் பவர்போல் வாய்விட்(டு)
"ஆதுலர் ஆனீர் அந்தோ !ஐய"என்(று) அழுது நைந்தார்.

23. குடங்கையின் நெடுங்க(ண்)ணாளும், குமரனும் வணிகர் தாளில்
தடங்க(ண்)ணீர் ஆட்ட வீழ்ந்தார் ; தடக்கையால் எடுத்துப் புல்லி
மடங்கல் ஏ(று)அனையார் தாமும் மற்றவர் தமைத்தங் கண்ணீர்
நெடுங்கடல் வெள்ளத்(து) ஆழ்த்திக் குமரனை நோர்ந்து நைவார்.

24. "ஐம்படை மார்பில் காணேன்; சிறுசிலம்(பு) அடியில் காணேன்;
மொய்ம்பிடை மதாணி காணேன் ; முகத்தசை சுட்டி காணேன் ;
மின்படு குழைகள் காணேன் ; வெற்(று)உடல் கண்டேன் அப்பா !
என்பெறும் என்று பிள்ளைப் பணிகளும் கவர்ந்தார் ?" என்னா,

25. அனைவரும் இரங்க வாய்விட்(டு) அழுதவர் இளையாள் தன்னைத்
தனையனைக் கண்ணீர் மாற்றித் தடக்கையான் முதுகு தைவந்(து),
"இனையன்மின், என்முன் வேறொன் றெண்ணன்மின் ; என்னை வஞ்ச
வினைஞர்வல் வழக்குச் சோர்ந்து விடுவது காண்மின்" என்னா,

26. "நட்பிடை வஞ்சம்செய்து நம்பினார்க்(கு) ஊன்மா றூட்டத்(து)
உட்படக் கவர்ந்தும், ஏற்றோர்க்(கு) இம்மியும் உதவா ராயும்,
வட்டியின் மிதப்பக் கூறி வாங்கியும் சிலர்போல் ஈட்டப்
பட்டதோ? அறத்தா(று) ஈட்டு நம்பொருள் படுமோ?" என்னா,

27. மங்கல மாடம் ஓங்கு மதுரைநா யகனை நோக்கிச்
செங்கரம் சிரமேல் கூப்பி, "மாணிக்கம் தேற்றி விற்கும்
எங்குல வணிகர் ஏறே! எம்மனோர் வழக்கை இந்தப்
புங்கவர் இடனாத் தீர்த்துத் தரு(க)" எனப் புலம்பி ஆர்த்தார்.

28. ஆவலித்(து)அழுத கள்வர் வஞ்சரை வெகுண்டு நோக்கி,
"காவலன் செங்கோல் நுண்ணூல் கட்டிய தருமத் தட்டில்
நாளனும் துளைநா விட்(டு)எம் வழக்கையும் நமராய் வந்த
மேவலர் வழக்கும் தூக்கித் தெரி(க)"என விதந்து சொன்னார்.

29. நரைமுது புலிஅன் னான்சொல் கேட்டலும்,நடுங்கிச் சான்றோர்
இருவர்சொல் வழக்கும் மேற்கொண்(டு) அறுவதித் திரண்டும் நோக்கி
தெரிவழி இழுக்கு ஞாதி வழக்(கு)எனச் செப்பக் கேட்டு
வெருவினர் தாயத் தார்கள் வலியரின் வேறு சொல்வார்:

30. "தவல்அரும் சிறப்பின் ஆன்ற தனபதி வணிகர் அல்லர்
இவர்" என, அவையம் கேட்ப இருகையும் புடைத்து நக்குக்
கவளமான் உரித்துப் போர்த்த கண்ணுதல் வணிகர் கோமான்,
அவர் அவர் குடிப்பேர், பட்டம், காணி, மற்(று) அனைத்தும் கூறும்.

31. தந்தை,தாய், மாமன், மாமி, தாயத்தார், அவரை ஈன்றார்,
மைந்தர்கள் உடன்பி றந்தார், மனைவியர், கிளைஞர், மற்றும்
அந்தம்இல் குணங்கள், செய்கை ஆதிய அடையா ளங்கள்
முந்தையின் வழுவா வண்ண முறையினால் மொழிந்தான் முன்னோன்,

32. அனையது கேட்ட ஆன்றோர் அனைவரும் நோக்கி, "அந்தத்
தனபதி வணிகர் தாமே இவர்எனச் சாற்ற லோடும்
மனவலித் தாயத் தார்தம் வழக்(கு)இழுக்(கு) அடைந்த(து) ஈது
நனைவழி வேம்பன் தேரின் தண்டிக்கும் நம்மை" என்னா,

33. "இல்லினுக்(கு) ஏகிமீள்வன் யான்"என்றும், "குளத்திற்(கு) ஏகி
ஒல்லையில் வருவேன்" என்றும், ஒவ்வொரு வார்த்தை இட்டு
வல்எழு அனைய தோளார் அனைவரும் வன்கால் தள்ளச்
செல்லெழு முகில்போல் கூட்டம் சிதைந்தனர் ஒளித்துப் போனார்.

34. அனையவர் போக, நின்ற அறம்நவில் மன்றத்(து) உள்ளோர்
தனபதி வணிகர் தந்த தனமெலாம் தத்த மைந்தற்(கு)
எனமனை எழுதி வாங்கி ஈந்தனர்; ஈந்த எல்லை,
மன(ம்) மொழி கடந்த நாயகர் மறைந்துதம் கோயில் புக்கார்.

35. இம்எனப் பலரும் காண மறைந்தவர் இரும்தண் கூடல்
செம்மல்என்(று) அறிந்து,நாய்கச் சிறுவனுக்(கு)உவகை தூங்க
விம்மிதம் அடைந்து வேந்தன் வரிசைகள் வெறுப்ப நல்கிக்
கைம்மறி வணிகர் கோயில் புதுக்கினன் கனகம் கொண்டு.

—பரஞ்சோதி முனிவர்

# V. பிரபந்தச் செய்யுட்கள்

## 1. அழகரந்தாதி

1. பித்தரும் பாநின்ற நெஞ்சனே, வஞ்சனேப், பேருலகோர்
கைத்தரும் பாவி யெனுங்கடை யேனேக் கடைக்கணியாய்!
முத்தரும் பாருந் தொழுமழகா ! வண்டு மூசுந்துழாய்ப்
புத்தரும் பார்முடி யாய் !அடி யாரைப் புரப்பவனே !

2. புரந்தர னுமெனப் பூபதி யாகிப், புகர்முகமா
துரந்தர சாளிலென் ? நல்குர வாகிலென் ? தொல்புவிக்கு
வரந்தர மாலிருஞ் சோலை நின்ருர்க்கென் மனத்தி னுள்ளே
நிரந்தர மாயலங் காரர்க்கிங்(கு) ஆட்பட்டு நின்ற பின்னே.

3. நின்ற பிராணன் கழலுமுன் னேநெஞ்ச மேநினையாய்!
சென்ற பிராயம்வம் பேசென்ற தால்திரு மங்கை யின்பம்
துன்ற பிராமனேச், சுந்தரத் தோளனேத், தோளின் மல்லைக்
கொன்ற பிரானே, யடைந்தடி யாரொடுங் கூடுகைக்கே.

—பிள்ளைப் பெருமாளையங்கார்

## 2. அழகர் கலம்பகம்

### தவம்

4. ஊசிமுனே நின்றுமென ; தாழ்குகை நுழைந்துமென ;
வூமரிலி ருந்துமென ; வளைபோலே
காசினி சுழன்றுமென ; வானிடை பறந்துமென ;
காயமிதெ ழுந்துவிழும் வினே போமோ?
நீசரையும் அண்டர்செய சோலைமலை யின்கண்முழு
நீலமலை யுண்டுதொழும் ; இயலாதேல்,
கேசவ முகுந்தமது சூதன வனந்தகக
கேதன வெனுந்தளரின் நினேவீரே.

### மறம்

5. போறு, பொறு, தூத! பசி பொருய் முந்திப்
புனேசுருட் டோலையைத் தின்னு
புரவலர் காதிற் செருகு சந்திரிகை
புயல் நிறத்தழகர் சீர் பதியின்
மறவர் என்றறிந்தும், காரிகை கேட்டாய் !
மதமலோ அதுபுல வரைக்கேள்
வயலிலே அரிவை, சிலேயிலே நாரி,
மரத்தினும் மண்ணினும் பாவை,

குறிதிகழ் தையல், பாணர்பால் வஞ்சி,
குடக்கினிற் கோதையும் ஆங்கே
குன்றின்மேற் குன்று விளம்பிடி யுண்டு ;
குமரியுண் டடவியி லுடனே ;
நறுமணங் கூடும் சோறு முண்டு ; ஓடு ;
நங்கையைப் பார்வினை முகத்தில்
ஞாலமேல் நீங்கள் வாலையே படைத்தால்
நரியொடுந் திரிவது திறமே.

துதி

6. மதுசூதனா ! முகுந்தா ! வாமனா ! மாயா !
அதிரூபா ! ராமா ! அழகா !—எதுவீரா !
வெண்ணந் துளவா ! விமலா ! கமலாட்சா !
தண்ணந் துளவா ! சரண்.

—கவிகுஞ்சர பாரதி

## 3. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

7. தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கையகழ்ந்(து)
எடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்(கு)
ஏற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் நடமாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ(கு)
ஒழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே ! மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே ! வருகவே
மலயத் துவஜன் பெற்றபெரு
வாழ்வே! வருக, வருகவே.

—குமரகுருபர சுவாமிகள்

## 4. திருவேங்கடமாலை

8\. காந்தள் இரவலர்போற் கையேற்பக் கொன்றைகொடை
வேந்தனெனப் பொன்சொரியும் வேங்கடமே!—பூந்துளவின்
கான்மடங்கா மார்வத்தார், காண விரும்பினர்மேல்
நான்மடங்கா மார்வத்தார் நாடு.

9\. ஓதுமறை யோர்புறமும் உள்ளுங் கலையினரும்
மேதையக லாவிருக்கும் வேங்கடமே!—கோதைகுழல்
சுற்றூத தாரணியார் தூயதிருத் தாளூன்றப்
பற்றூத தாரணியார் பற்று.

10\. கிட்டுநெறி யோகியருங் கிள்ளைகளுந் தங்கூடு
விட்டுமறு கூடடையும் வேங்கடமே!—யெட்டுமத
மாவென்று வந்தான் வரநாளை வாவின்று
போவென் றுவந்தான் பொருப்பு.

—பிள்ளைப் பெருமாளையங்கார்

## 5. அறவுரை

11\. தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர் !
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வந் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை யஞ்சுமின்; புறஞ்சொல் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானஞ் செய்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட்(பு) இகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருள்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம் அகலா(து) அணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை யஞ்சுமின்; பிழைஉயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளுங் களவும் காமமும் பொய்யும்,
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையுஞ் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது; ஒல்லுவ(து) ஒழியாது;
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்;
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்! ஈங்கு......

—இளங்கோவடிகள்

# 1. தமிழகம்

தமிழ் மொழியைத் தம் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் தமிழர் எனப்படுவர். தமிழர் வாழும் நாடு தமிழ் நாடு என்றும், தமிழகம் என்றும் கூறப்படும். முன்னாளிலே தமிழகம் என்பது வடக்கில் வேங்கடமலையும், தெற்கில் குமரியும், கிழக்கிலும் மேற்கிலும் கடலும் எல்லையாக அமைந்த நிலவரைப்பினுள் அடங்கியிருந்தது. தமிழ் மொழியிலே இந் நாளில் வழங்கும் இலக்கண நூல்களில் மிகவும் பழமைபெற்ற தொல்காப்பியத்தில் தமிழகத்தின் எல்லை இங்ஙனம் கூறப்பட்டுள்ளது. அக் காலத்திற்கு முன்னும் பின்னும் இந்த எல்லை வடக்கிலும் தெற்கிலும் மாறுபட்டதுண்டென்று அறிகிறோம்.

தமிழர் என்ற வகுப்பினர் ஆதி காலத்தில், இந்திய சமுத்திரமாக இப்பொழுதுள்ள விடத்தில், ஆபிரிக்காக் கண்டத்தையும் ஆஸ்திரேலியா கண்டத்தையும் இணைக்குமாறு அமைந்திருந்த பெரு நிலப்பரப்பாகிய தமிழகத்திலே வாழ்ந்து, கடல்கோளினால் வடக்கு நோக்கிச் சென்று பாண்டிய நாட்டிற் குடியேறினர் என்றதோர் கொள்கை இந் நாளில் வழங்குகின்றது. இக் கொள்கைக்கு ஆதரவாகிய வாக்கியங்கள் சிலப்பதிகாரம் என்ற தமிழ்க் காப்பியத்தில் உண்டு. மேல் நாட்டு அறிஞரிற் சிலரும் இப் புதுக் கொள்கையை ஆதரிக்கின்றனர். கால்டு வேல் ஆசிரியர் கொள்கை, தமிழ் மக்கள் இமயமலைக்கு வடக்கிலுள்ள குளிர்ந்த நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்து குடியேறினர் என்பதாம். இக் கொள்கையை ஆதரிப்பாரும் பலருளர். இந் நாளிற் பெரும்பான்மையான தமிழறிஞர்கள், 'தமிழர் தமிழ் நாட்டுக்குப் புதியோர் அல்லர், உள்நாட்டவரே' என்று துணிந்துரைக்கின்றனர். தமிழ்மொழியின் இன மொழிகளே என்று கருதத்தக்க, நாகரிகம் முதிரப் பெறாத மொழிகள் சில, வடநாட்டிலும் திபெத்திலும் பிற நாடுகளிலும் வழங்குதலால், நம்மவர் ஒரு காலத்திலே இந்திய நாடு முழுவதும் வியாபித்திருக்க வேண்டும் என்று அறிஞர் சிலர் கூறுகின்றனர். பழைய சரித்திரங்களை ஆராயும் பெரியோர்கள் பர்மாவிலும், இலங்கையிலும், ஜாவா தீவிலும், சுமத்திரா, போர்னியோ, பலி முதலிய தீவுகளிலும் தமிழர் முன்னாளிலே போய் வாழ்ந்து வந்தனர் என்று கூறத்தக்க பொருத்தங்கள் உள்ளன என்பர். இந்நாளிலே தமிழர் வாழும் நாடு

என்று உண்மையிற் கூறப்படுவது சென்னை இராஜதானியின் தென்கீழ்ப்பகுதியே யாயினும், தொழிலின் பொருட்டும் வியாபாரத்தின் பொருட்டும், வேறு பிழைப்பின் பொருட்டும் தமிழ் மக்கள் சென்று வாழாத நாடு உலகத்தில் எதுவும் இல்லையென்று கூறலாம். தமிழர் எண்ணிக்கையைக் கணக்கெடுக்கத் துணிவோர் இந்நாளிலே உலகமெங்கும் ஆராய்ந்து உண்மை காணவேண்டும்.

முன்னாளிலே இத் தமிழ்மக்கள் தமிழ் நாட்டிலே தமக்கெனப் படைத்துக்கொண்ட வாழ்க்கை முறை ஒன்று உண்டு. இவ் வாழ்க்கை முறையைப்பற்றி விளக்கும் பொறுப்பை மேற்கொண்டு இந்நாளை மக்களுக்கு உண்மையை உணர்த்துவது தொல்காப்பியத்தில் உள்ள பொருளதிகாரம் என்ற பகுதி ஆகும். அந் நூற் பகுதியை நன்கு ஆராய்ந்து தமிழர் பண்டை வாழ்க்கை முறையைப்பற்றித் தமிழ் மொழியிலும், ஆங்கில மொழியிலும், இந் நாளில் அறிஞர் பலர் ஆராய்ச்சி நூல்கள் வெளியிட்டிருக்கின்றனர். தமிழர் படைத்திருந்த தனி நாகரிகம் மிகவும் சிறந்தது என்பதும், வேறெவ்வகை நாகரிகத்துக்கும் அது பின்னிடையாது என்பதும் இவ் வாராய்ச்சி நூல்களால் விளங்கும்.

ஆதிகாலத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்திருந்த முறையைப்பற்றி இங்குச் சிறிது எடுத்துரைப்போம்: நிலம் இயற்கை யமைப்பிற்கு ஏற்ப நால்வகையாகப் பகுக்கப்பட்டது. இந் நால்வகைப் பகுப்புடைமையால் பூமிக்கு நானிலம் என்ற பெயரும் அமையலாயிற்று. நிலங்கள் நான்கும் முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப்பட்டன. மலையும் மலையைச் சார்ந்த நிலமும் குறிஞ்சி எனப் பட்டது. குறிஞ்சி என்னும் மரம் இந் நிலத்திற்குச் சிறந்ததாதலால் இப் பெயர் வந்தது என்பர். காடுகளும் அவற்றைச் சார்ந்த நிலமும் முல்லை என்ற பெயர் பெற்றது. முல்லை இந் நிலத்திற்குச் சிறந்த கொடியாதலால் இப் பெயர் வந்தது எனப்படும். நாடுகளும் அவற்றைச்சார்ந்த நிலங்களும் மருதம் எனப் பெற்றன. மருதமரம் இந் நிலத்திற்குச் சிறந்த மரமாதல்பற்றி இப் பெயர் அமைந்தது. கடலும் கடற்றுறை நிலமும் நெய்தல் என்று பெயர் பெறும். நெய்தல் என்ற நீர்க்கொடி இந் நிலத்துக்கு உரியதாதலால் இப் பெயர் அமைந்தது என்பர். இந் நானிலத்து வாழும் மக்கள் இன்னின்னவர், அவர் இன்னின்ன தொழில் செய்து வாழ்வர் என்பவற்றைப் பற்றியெல்லாம் இலக்கண நூல்கள் நன்கு வரையறுத்துரைக்கின்றன.

குறிஞ்சி :—இந்நிலப் பகுதியில் வாழ்ந்த மக்களில் ஆடவர், குன்றவர் குறவர் எனவும், மகளிர் குறத்தியர் எனவும் கூறப்பட்டனர். இந் நிலப் பயிர் மலைநெல், தினை முதலியனவாம். அகில், தேக்கு, வேங்கை முதலிய மரங்கள் இங்கு ஓங்கி வளரும். கிளி, மயில், முதலிய பறவைகளும், புலி, கரடி, சிங்கம், யானை முதலிய விலங்குகளும் இந் நிலத்திற் சஞ்சரிக்கும். இந் நிலமக்கள், தினை முதலிய பயிர்களைப் பயிரிடுதல், முன் சொல்லிய பறவைகளையும் மிருகங்களையும் வேட்டமாடுதல், தேன் திரட்டுதல், கிழங்கு கல்லியெடுத்து உணவுக்கு உதவுமாறு செய்தல் முதலிய தொழில்களைச் செய்து வந்தனர். குறிஞ்சியில் அரும்பி மலரும் பூக்கள் குறிஞ்சி, காந்தள், வேங்கை, சுனைக்குவளை முதலியனவாம். அருவிகளும், மலைச் சுனைகளும் இங்குள்ள நீர் நிலைகளாம். இந் நிலத்தூர்கள் சிறுகுடி என வழங்கப்படும். குறிஞ்சி நிலத்தைக் குடிமக்களுக்கு நலம் நிரம்பக், குறைவேதுமின்றி ஆட்சி செய்த தலைவன் சிலம்பன், வெற்பன் பொருப்பன் என மலையொடு பொருந்திய பெயரே பூண்டிருந்தனன். முருகனை இந் நிலவாசிகள் தெய்வமாகக்கொண்டு வழிபட்டனர்.

முல்லை :—ஆநிரைகளைக் காடுகளில் மேய்த்து வாழும் புண்ணியத் தொழில் பூண்ட ஆயர் என்னும் பழந்தமிழ் மக்களே இந் நிலத்தில் வாழ்ந்தோராவர். அவர்களில் ஆடவர், ஆயர் இடையர் என்றும் மகளிர், ஆய்ச்சியர் இடைச்சியர் எனவும் அழைக்கப் பெற்றனர். வரகு சாமை முதலியன இந் நிலத்தில் விளையும் பயிர்களாம். இங்குக் காணப்படும் மரங்கள் கொன்றையும், குருந்தமும், காயாவுமாகும்; மலரும் மலர்களிற் சிறந்தவை முல்லை, தோன்றி முதலியன. காட்டுக் கோழி, மான், முயல் முதலியவை இங்கு வாழும் பறவைகளும் மிருகங்களும் ஆகும். கான் யாறுகள் இந் நிலத்தவர்க்கு நீர் உதவும். இந் நிலத்தூர்கள் பாடி, சேரி எனப்படும். இந் நிலமக்கள் சாமை, வரகு பயிர்செய்தல், ஆநிரை மேய்த்தல், ஏறு தழுவல், கொன்றைக் குழலூதல் முதலிய தொழில்களைப் பூண்டு வாழ்வர். இவர்களைத் தக்க முறையாற் பரிபாலிக்கும் தலைவன் குறும்பொறை நாடன் எனப் பெறுவான். மாயவனை இந் நிலத்தவர் தெய்வமாகக் கொண்டு வழிபட்டனர்.

மருதம் :—நெற்பயிர் செய்தலைத் தம் முக்கியத் தொழிலாகக் கொண்ட மருத நிலமக்கள் உழவர், கடையர் எனப்படுவர். இவர் தம் மகளிர் கடைசியர், உழத்தியர் எனப் பெற்றனர். எருமை, நீர் நாய் முதலிய விலங்குகளும், நாரை, அன்னம், குருகு முதலிய

பறவைகளும் இங்கு வாழ்வன. செந்நெல்லும், வெண்ணெல்லும் இந் நிலத்துப் பயிராகும். காஞ்சி, வஞ்சி, மருதம் என்ற மரங்கள் இங்கு வளர்ந்தோங்குவன. தாமரைப் பூ, கழுநீர்ப் பூ, குவளைப் பூ முதலிய மலர்கள் மருதத்தில் மலரும். ஊர்கள் மூதூர், பேரூர் எனப் பெறும். கிணறுகளும், பொய்கைகளும், யாறுகளும் இந் நிலத்தை வளம்படுத்தும். இந்நிலத்தவர் விழவு அயர்தல், வயல் உழுதல், நெல்லரிதல் முதலிய தொழில்களைப் பூண்டு வாழ்வார். இந் நிலத்தலைவன் ஊரன், மகிழ்நன் எனப் பெறுவன். இந்திரனே இந் நிலத்தில் வாழ்வோர் வணங்குந் தெய்வம் ஆகும்.

நெய்தல்:—உப்பு விளைத்தலும், மீன் விற்றலும் தொழிலாக வுடைய நெய்தல் நிலமக்கள் பரதவர் நுளையர் எனவும், பெண்டிர் பரத்தியர் நுளைச்சியர் எனவும் பெயர் பெற்றிருந்தனர். இன்னோர் வாழ்ந்த ஊர்களுக்குப் பட்டினம் என்றும் பாக்கம் என்றும் பெயர் வழங்கியது. இங்குப் புன்னையும், தாழையும் செழித்து வளரும். கடற்காகம் முதலிய பறவைகளும் சுறாமீன்களும் இங்கே வாழ்வனவாம். மணற் கிணறுகளும் உவர்க்கழிகளும் இங்குள்ள நீர் நிலைகளாம். தாழம்பூவும், நெய்தல் மலரும் இங்கு நிறைந்திருக்கும். நெய்தல் நிலத்தலைவன் துறைவன், கொண்கன், சேர்ப்பன் எனப் பெறுவன். நெய்தல் நிலத்தார் வணங்கும் தெய்வம் வருணன் ஆவன்.

இந் நால்வகை நிலங்களுள் முல்லை நிலமும், குறிஞ்சி நிலமும் வெயிற் கொடுமையாற் பாலைநிலம் ஆவதும் உண்டு. குறிஞ்சிக்கும் முல்லைக்கும் இடையில் இயல்பாலன்றிச் செயற்கையால் தோன்றுவதாதலால் தொல்காப்பியர் பாலையை நடுவுநிலைத்திணை என்பர். பிற்காலத்தார் இதனை ஐந்தாவது நிலப் பகுப்பாகக் கொள்வர். இந் நிலத்து ஆடவர், எயினர் மறவர் எனவும், பெண்டிர், எயிற்றியர் மறத்தியர் எனவும் பெயர் பெறுவர். இவ்வகுப்பினர் தாமே உழுது பயிர் செய்து பிழைத்தற்கு நிலவாய்ப்பு இன்மையால், வழிப்பறியாற் கிடைத்த பொருள்களையும், அயல் நகரங்களிற் கொள்ளையிட்டுக் கவர்ந்த பொருள்களையும் கொண்டு வாழ்வர். பாலையில் வாழும் பறவைகள் பருந்து, கழுகு முதலியனவாம். இங்கு வளரும் மரங்கள் உழிஞை, பாலை, இருப்பை முதலியனவாம். பூக்கள் குரா, மரா என்ற மரப்பூக்களாம். இங்கு நீர் நிலைகள் இருத்தல் இல்லை. நீரில்லாக் குழியும், பாழ்ங்கிணறும் இங்குள்ளன என்பர். நிலத்தவர் வாழும் ஊரின் பெயர் குறும்பு எனப்படும். இந் நிலத்தலைவன்

விடலை, காளை எனக் கூறப்பெறுவன். இம்மக்கள் தம் முயற்சி நிறைவேறுமாறு வணங்கும் தெய்வம் துர்க்காதேவியாம்.

முன்கூறிய நால்வகை நிலங்களும் இயற்கையாய் அமைந்தவையே. அவற்றில் வாழ்ந்த மக்களும் இயற்கை யின்பம் நுகர்ந்து அவ்வந் நிலவியல்புக்கேற்ற தொழிலைச் செய்து, பாவநெறியிற் செல்லாது நன்மனத்தோடு வாழ்ந்து வந்தனர். இவ்வாறு தனித்தனி இயல்புடையவராய் வெவ்வேறு நிலங்களில் வாழ்ந்த மக்கள், பின்னுளில் ஒருவரோடொருவர் கலந்து பயின்று நிலப்பிரிவு தெரியா வண்ணம் வாழலாயினர். சிறப்பான பழக்க வழக்கங்கள் பலவாறு கலப்புற்றுப் பொதுமையாயின. இவர்கள் ஒருவர்க்கொருவர் உதவியாய் நின்று, பலவகைக் கலைத்துறைகளினும் பயின்று நாகரிக வாழ்வில் மேம்பட்டனர்.

இனி நம் முன்னோர்களாகிய பழந்தமிழ் மக்களின் சமய நிலையைப் பற்றியும், கடவுள் வழிபாட்டைப் பற்றியும் சிறிது கூறுவோம். நானிலங்களைப்பற்றி விளக்கிக் கூறுமிடத்தே அவ்வந் நிலங்களுக்குரிய தெய்வங்களைப்பற்றி உரியவமைப்பிற் கூறினோம். அவ்வந்நில மக்கள் அத் தெய்வங்களுக்குத் தம்தம் நிலங்களிலே கோயில்கள் அமைத்து வணங்கி வந்தனர் என்று பழைய நூல்களால் அறிகிறோம். இத் தெய்வங்களே யன்றிச் சிவபெருமான், பலதேவர் முதலிய தேவாலயங்களும், அருகமதப் பள்ளிகளும், பௌத்த மடங்களும் முன்னுளில் இந் நாட்டில் மனவேறுபாடு விளையாவண்ணம் சமரசம் விளக்கி அமைந்திருந்தன என்று பழைய நூல்கள் உரைக்கின்றன. சில அறிஞர்கள் கந்தழி யென்ற கடவுளை உள்ளக் கோயில் அமைத்து வழிபட்டனர். குறிஞ்சி நிலத்தவர் வழிபட்ட சேயோனும், முல்லை நிலத்தவர் வழிபட்ட மாயோனும் தமிழகத்துத் தெய்வமே என்று அறிஞர் கூறுகின்றனர். திருமால் வழிபாடு பெருகிய காலத்தே இம் மாயன் அம்மாலிற் கலந்து மறைந்தான் என்றும் கூறுகின்றனர். நெய்தல் நிலத்தவர் வணங்கிய தெய்வம் என்று தொல்காப்பியர் கூறும் வருணனும், மருத நிலத்தவர் வணங்கும் கடவுள் என அப் பெரியார் கூறும் வேந்தனும் இந்திரனும் தமிழகத்துத் தெய்வங்களே என்று கூற இயலாது. வேதங்களிலே ஆரியர் வழிபட்ட தெய்வ வினத்திற் சேர்ந்த இவ்விரு தெய்வங்களும் தமிழகத்துக்கு எப்பொழுது வந்து புகுந்தன வென்பது அறியப்படவில்லை. இதனை ஆராய்ந்த இந்நாளைச் சரித்திரப் புலவர் ஒருவர், “ தமிழகத்துத் தெய்வங்களை ஆரிய நாட்டுத் தெய்

வங்களோடு ஒற்றுமைப்படுத்தக் கருதிய தொல்காப்பியர், மாயோனைத் திருமால் என்றும், சேயோனைக் கார்த்திகேயன் என்றும் முடிவு செய்துகொண்டு, அம் முடிவிற்கிணங்க நெய்தல் மருத நிலங்களில் முன்னிருந்த தமிழகத்துத் தெய்வப் பெயர்களை மறந்தோ, மறைத்தோ வருணன், வேந்தன் என்றனர். குறிஞ்சி முல்லைத் தெய்வங்கள் இயற்கையில் மக்கள் உள்ளத்தில் எழுந்த தெய்வங்களேயாதல் போல, நெய்தல் மருதத் தெய்வங்கள் கடலோன், சேஞோன் என்ற பெயர்களால் வழங்கப்பட்ட இயற்கை தெய்வங்களாய் இருத்தல் வேண்டும்" என்று கூறுகின்றனர். இக் கொள்கை எவ்வாறிருப்பினும், ஆரியரும் தமிழரும் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னே ஒற்றுமைப்பட்டுப் பயின்றனர் என்பது சரித்திரம் வல்லார் கண்ட உண்மையாம்.

பின்னுளிலே தமிழகத்தே தோன்றிய மாறுபாடுகள் மிகப் பலவாம். இந்நாளில் முன்னோர் வாழ்வும், ஒழுக்கமும், பழக்க வழக்கங்களும் நம்மவர்க்குப் புதுமையாய்த் தோன்றும் நிலைமை அடைந்துள. தமிழகத்தில் நெடுங்காலமாக அரசு பூண்டிருந்தவர் சேர, சோழ, பாண்டியர் எனப் பெறுவர். இம் முத்திறத்தவரும் தமிழ்ப் பழங் குடியினரே யாவர். இவர்கள் பின்னுளில் தம்மை வட நாட்டு மன்னரோ டொப்பச் சந்திர, சூரிய வமிசத்தவர் என்று கூறிக் கொண்டது புலவர் புனைந்துரையாம். தமிழகத்திலே குறு நிலத் தலைவர்களாக வேளிர் பலர் இருந்தனர். பெருமன்னராகிய மூவேந்தரும், குறுநிலத் தலைவராகிய வேளிரும், நம் நாட்டில் முன்னுளில் வாழ்ந்த முறையைப் புறநானூறு, பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களால் நன்கு அறியலாம். பின்னுளில் வந்து தமிழகத்தைக் கைப்பற்றிய பல்லவ வேந்தரும் பிறரும் தமிழர் ஆகார். முன்னை நாளில் மன்னர்களால் நன்கு அமைந்த நகரங்கள், வஞ்சி மாநகர், உறையூர், மதுரை என்பனவாம். புகார் என்ற காவிரிப் பூம்பட்டினமும், காஞ்சி நகரமும், திருவாரூரும், கொற்கை நகரும், தஞ்சாவூரும் சில சிறந்த மன்னர்களால் நன்கு அமைந்தன. பின்னை நாட்சோழ மன்னரால் சயங்கொண்ட சோழபுரம், கங்கை கொண்ட சோழபுரம் என்ற பெரு நகரங்கள் அமைந்து காவிரிப்பூம்பட்டினம் ஒடுங்கியது போலச் சுருங்கி ஒடுங்கி விட்டன. சமீப காலத்திலே தமிழகத்தை ஆண்ட விஜயநகர சக்கரவர்த்தியின் இராஜதானி ஒரு பெரும் போரால் அழிந்தது. நாயக்க மன்னர்கள் அமைத்த நகரங்கள், கட்டிடங்கள் மட்டும் இன்றளவும் உள்ளன.

ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழகத்தின் சமயநிலையே ஒருவாறு உருக்கொள்ளலாயிற்று. அந் நாளிலே தோன்றிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் அக் காலத்துக்குச் சற்று முன்பின்னாக இருந்த அரசர்களால் அமைக்கப்பெற்ற எண்ணிறந்த தேவாலயங்களிலே கோயில்கொண்ட திருமால், சிவபெருமான் என்ற கடவுளர் கழன்மலரில் மக்கள் மனம் படியும்படி செய்து புதிய வாழ்வை அமைத்தனர். நித்திய, நைமித்திக பூசை முறைகள் புதுமை புதுமையாய்த் தோன்றின. பல்லவ மன்னர் அமைத்த வழிபற்றி நாட்டிற் பல இடங்களிலும் கற்கோயில்கள் பல தோன்றலாயின. பெருங் கோயில்கள் ஒன்றன்பின் ஒன்றாய் எழுந்தன. பல்லவர் குகைக் கோயில்களும் ஆங்காங்கு அமைந்தன. சிற்பக் கலையும் சித்திரக் கலையும் நாடெங்கும் தலைசிறந்து விளங்கின.

இங்ஙனம் தமிழகத்து வாழ்ந்த மக்கள் தங்கள் தாய்மொழி வளர்ச்சிக்கு எத்தகைய பணிபுரிந்தனர் என்பதை இனிச் சிறிது கூறுவோம்: பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னே தோன்றிய தமிழ் மொழியில் முதலிற் பேச்சு நடை வழங்கியது. பின் எழுத்து நடையும் இலக்கிய நடையும் தோன்றின. புலவர் பலர் தோன்றினர்; செய்யுள் நடையிலே இலக்கியங்கள் பல அமைத்தனர். இலக்கிய அமைதிக்கு இலக்கணம் வேண்டும் என்ற எண்ணம் தோன்றவே, இலக்கண அமைதிகளை ஒவ்வொன்றாக அமைக்கத் தொடங்கினர். பின்பு அகத்தியரும், தொல்காப்பியரும், பிற பெரியார்களும் இலக்கண நூல்களை இயற்றியுதவினர். தொல்காப்பியர் எக் காலத்தில் இந் நாட்டில் இருந்தார் என்று துணிந்துகூறக் கூடவில்லை. புலவர் பலர் முயற்சியாலும், புரவலர் ஆதரவாலும் இலக்கியங்களும் இலக்கண நூல்களும் வளர்ந்தன. இப்புலவர் தலைச்சங்கத்தார் எனப்பெற்றனர். இச் சங்கம் தென்மதுரையில் இருந்தது என்பர். கடல் வடக்கு நோக்கிப் பெருகியதால் இவர்கள் கபாடபுரம் என்ற நகரை அடைந்தனர். அங்கும் அரசர் ஆதரவாற் பல நூல்களையும் செய்யுள்களையும் இயற்றினர். பின் அந்நகரம் அழியவே, வடமதுரையை அடைந்து முன்போலவே தமிழ்ப்பணி பூண்டனர். வடமதுரை யென்பது தமிழ்ப்பாண்டி நாட்டுத் தலைநகராய் இப்பொழுதுள்ள மதுரைக் கருகில் இருந்தது. கபாடபுரத்துப் புலவர் கூட்டம் இடைச்சங்கம் எனப்பட்டது. வடமதுரைப் புலவர் கூட்டம் கடைச்சங்கம் எனப்பட்டது. தலைச்சங்கத்தார் நூல்களில் இந்நாளில் ஒன்றும் அகப்பட

வில்லை. இடைச் சங்கத்து நூல்களில் தலைசிறந்த தொல்காப்பியம் இன்றளவும் பூரண வுருவோடு நின்று நிலவுகின்றது. கடைச் சங்கத்து நூல்களில் எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க் கணக்கு என்பவை இந் நாளில் உள்ளன.

பின்னாளிலே சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர் ஆதரவு பெற்று எழுந்த நூல்கள் பல இந் நாளில் நம் நாடெங்கும் பரவுகின்றன. சமணரும் பௌத்தரும் இயற்றிய பல காவியங்களும், இலக்கண நூல்களும், பிரபந்தங்களும் இன்றும் நிலவுகின்றன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் அருளிய அருளிச் செயல்களாகிய தமிழ் வேதங்களும் வழங்குகின்றன. இந் நாளிலும் அரும்புலமை படைத்த நல்லோர் சிலர் தமிழ்ப் பணி புரிகின்றனர். இத்தகைய பெருமை வாய்ந்த தமிழகத்தின் வரலாறு இவ்வளவில் அடங்குமோ!

"பெற்ற தாயும் பிறந்தநன் னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே."

---

## 2. மருத பாண்டியர்

சிவகங்கை ஸமஸ்தானத்திற்குத் தலைவராக ஏறக்குறைய 150 வருடங்களுக்கு முன்பு மருத சேர்வைகாரர் என்பவர் இருந்தார். அவருடைய பெருமையையும் நல்லியல்பையும் அறிந்த குடிகளும் வித்துவான்களும் அவரை மருத பாண்டியர் என்று வழங்கி வந்தனர்; மகாராஜாவென்றும் தமக்குள் பேசிக்கொள்வார்கள். அவர் பல வித்துவான்களை ஆதரித்துப் பலவகைப் பரிசுகள் வழங்கினார். தமிழறிவுடையவராதலால், வந்த வித்துவான்களோடு ஸல்லாபம் செய்து சாதுர்யமாக அவர்களுக்கு ஏற்பப் பேசுதலும், அவர்கள் கூறுவனவற்றைக் கேட்டு மகிழ்ந்து உடனுடன் பரிசளிப்பதும் அவருக்கு இயல்பு. அவர்மீது வித்வான்கள் பாடிய பிரபந்தங்களும், சமயத்திற் கேற்பப் பாடப்பெற்ற பல தனிப்பாடல்களும் அங்கங்கே வழங்கி வருகின்றன. சிறந்த வீரர். அவர் ஆட்சியின் எல்லையில் திருட்டுப் பயம் முதலியன கிடையா. அவருடைய ஆணைக்கு அஞ்சி யாவரும் நடந்து வந்தனர்.

அவர் தெய்வ பக்தி உடையவர். தம் ஆட்சிக்குட்பட்ட ஆலயங்களில் நித்திய நைமித்திகங்கள் விதிப்படி காலத்தில் நடந்துவரும் வண்ணம் வேண்டியவற்றைச் செய்து வந்தார். பல தலங்களில்

அவர் திருப்பணிகள் செய்துள்ளார். ஆலயங்களுக்குத் தேவதான மாக நிலங்களை அளித்திருக்கின்றார். முருகக் கடவுள் கோயில் கொண்டெழுந்தருளிய முக்கிய ஸ்தலமாகிய குன்றக்குடியில் திரு வீதிக்குத் தென்பாலுள்ள ஒரு தீர்த்தத்தைச் செப்பஞ்செய்து படித்துறைகள் கட்டுவித்தனர். அக்குளம் மருதாபுரி என்று அவர் பெயராலேயே வழங்கும். அதனைச் சூழ அவர் வைத்த தென்னை மரங்களிற் சில இன்றும் உள்ளன. குன்றக்குடி மலைமேற் சில மண்டபங்களைக் கட்டி யிருக்கின்றனர். அவை கட்டப்பட்ட பொழுது மிக உயர்ந்த சாரங்கள் அமைக்கப்பட்டன. அவற்றில், மேலே உள்ளது மருத பாண்டியரால் அமைக்கப்பட்ட சாரம், கீழ்ச்சாரம் வேங்களப்ப நாயக்கர் என்னும் ஒரு ஜமீன்தாரால் அதற்குமுன் கட்டப்பட்டது. அவற்றைக் குறித்து, "மேலைச் சாரம் எங்களப்பன், கீழைச்சாரம் வேங்களப்பன்" என்னும் பழ மொழி ஒன்று அந்தப் பக்கத்தில் வழங்கி வருகிறது.

அக்காலத்தில் ஜனங்கள் மருத பாண்டியரை 'எங்களப்பன்' எனச் சொல்லி வந்தனரென்பதனாலேயே அவருடைய உத்தம குணங்களும் அவர்பால் இருந்த அன்பும் புலப்படும். காளையார் கோவிலிலுள்ள மிகப் பெரிதான யானை மடு என்னும் தீர்த்தத்தைச் செப்பஞ்செய்து நாற்புறமும் படித்துறை கட்டுவித்தார். அந்த ஸ்தலத்தில் கோபுரமும் கட்டுவித்தார். அப்பொழுது மிக்க தூரத்தி லிருந்து செங்கற்கள் வரவேண்டியிருந்தன. அதற்காக வழி முழுவதும் சில அடிகளுக்கு ஒவ்வொரு மனிதராக நிற்கவைத்து ஒருவர் கை மாற்றி ஒருவர் கையிற் கொடுக்கும் வண்ணம் செய்து செங்கற்களை வரவழைத்தனர். அவ்வாறு மாற்றுபவர்களுக்கு அவல் கடலை முதலிய உணவுகளையும் தண்ணீரையும் அடிக்கடி கொடுத்து அவர்களுக்குக் களைப்புத் தோன்றுமல் செய்வித்தார்.

காளையார் கோவிலுக்குத் தேர் ஒன்று மிகப் பெரியதாக அமைக்கவேண்டுமென்று அவர் கருதித் தக்க சிற்பிகளை வருவித்து வேண்டியவற்றை யெல்லாம் சேகரித்து முடித்தார். அத் தேரின் அச்சுக்கு ஏற்றதாக ஒரு பெரிய மரம் கிடைக்கவில்லை. பல இடங் களுக்குச் செய்தி அனுப்பி விசாரித்துவந்தார். அப்பொழுது அவ ருடைய ஆட்சிக்குட்பட்ட திருப்பூவணத்தில் வையை ஆற்றிற்குத் தென்கரையில் ஆலயத்துக்கு எதிரில் மிகப்பழையதும் பெரியதுமாக மருதமரம் ஒன்று இருப்பதாக அறிந்தார். அதனை அச்சுக்கு

உபயோகப்படுத்தலாமென் றெண்ணி, உடனே அதனை வெட்டி அனுப்பும்படி அங்கே உள்ள அதிகாரிகளுக்கு உத்தரவு அனுப்பினுர்.

அதனைப் பெற்ற அதிகாரிகள், அவ்வாறே செய்ய நினைந்து வேண்டிய வேலையாட்களை ஆயுதங்களுடன் வருவித்து மரத்தை வெட்டத் தொடங்கினுர்கள். அப்பொழுது, அதனைக் கேள்வி யுற்று அத் தலத்தில் திருப்பூவணநாதருக்குப் பூசைசெய்து வருப வர்களுள் ஒருவராகிய புஷ்பவனக் குருக்கள் என்னும் பெரியோர், "அந்த மரத்தை வெட்டக்கூடாது" என்று ஓடிவந்து தடுத்தார். "ராஜாக்கினைக்கு மேலேயோ உம்முடைய ஆக்கினை?" என்று சொல்லிவிட்டு அதனை வெட்டும்படியாக வேலைக்காரர்களை ஏவி ஞர்கள். அதைக்கண்ட குருக்கள் ஆத்திரம் மிக்கவராகி, "மகா ராஜாமேல் ஆணை! நீங்கள் இந்த மரத்தை வெட்டக்கூடாது" என்று மீட்டும் தடுத்தார். அவ்வாறு ஆணையிட்டு மறித்ததனுல் அவர்கள் அஞ்சி வெட்டுதலை நிறுத்திவிட்டு உடனே அச்செய்தியை மருதபாண்டியருக்குத் தெரிவித்தார்கள்.

அதனை அறிந்த மருதபாண்டியர், "ஸ்ரீகாளீசுவரருடைய திருத் தேருக்காக நாம் வெட்டச் சொல்லியிருக்கும்பொழுது அதைத் தடுக்கலாமோ? அவ்வளவு தைரியத்தோடு தடுத்ததற்கு என்ன கார ணம் இருக்கக்கூடும்? நாமே நேரிற்போய் இதனை விசாரித்து வர வேண்டும்" என்றெண்ணித் தமது பரிவாரங்களுடன் சென்று திருக் கோயில் வாயிலில் உள்ள ஒரு மண்டபத்தில் தங்கினுர். கோவில் அதிகாரிகள் மரியாதைகளோடு வந்து அவரைக் கண்டனர். பாண்டியர் விபூதி குங்குமப் பிரஸாதங்களைப் பெற்று அணிந்து கொண்டார்.

அப்பால், "கோயிற் காரியங்கள் குறைவின்றி நடந்துவரு கின்றனவா?" என்று விசாரித்தார். பின்பு, அவர்களை நோக்கி, "இங்கே உள்ள குருக்களில் ஒருவர், வைகைக் கரையிலுள்ள மரத்தை வெட்டக் கூடாதென்று தடுத்ததாகக் கேள்விப்பட் டோம். நம்முடைய கட்டளையைத் தடுத்த அவர் யார்? இப் பொழுது அவர் எங்கே உள்ளார்?" என்று கேட்டார். அவர் கள், "இதோ, இப்பொழுதுதான் மகாராஜா அவர்களுக்குப் பிர ஸாதங்கள் கொடுத்துவிட்டு அவ்விடத்துக்கு அஞ்சி மதுரைக்குப் போய்விட்டார். இவ்வளவு நேரத்திற்குள் வெகுதூரம் போயிருப் பார்" என்று நடுநடுங்கிச் சொன்னுர்கள்.

புஷ்பவனக் குருக்கள், தாம் செய்த செயலால் தமக்கு என்ன துன்பம் வருமோ வென்றஞ்சி, மருத பாண்டியருடைய அதிகாரத்துக்குட்படாத இடத்திற்குப் போக வேண்டுமென்று கருதி, முன்னரே ஸித்தம் செய்து வைத்திருந்த வண்டியில் ஏறி மதுரை போய்ச் சேர்ந்து விட்டார்.

மருத பாண்டியர், உடனே மதுரைக்குச் சென்ற குருக்களுக்கு ஓரபய நிருபம் எழுதுவித்து அதைக் காட்டி அவரை அழைத்து வரும்படி ஒருவரை அனுப்பினர். அபய நிருபம் என்பது, பழைய காலத்தில் குற்றவாளிகளுக்கேனும், அஞ்சி ஓடி ஒளித்த பகைவர்களுக்கேனும். "நீங்கள் அஞ்சவேண்டாம்; இங்கே வந்தால் உங்களுக்கு ஒரு துன்பமும் நேராது" என்று அரசர்களால் அவர்களுக்குள்ள பயத்தைப் போக்குவதற்காக எழுதப்படுவது.

அந் நிருபத்தைப் பெற்ற புஷ்பவனக் குருக்கள் திருப்பூவணம் வந்து மருதபாண்டியர் முன்னே நடுக்கத்தோடு நின்றார். பாண்டியர் கோபத்தை வெளிக்காட்டாமல் அடக்கிக்கொண்டு அவரை இருக்கச் சொல்லி, "நீர்தாம் அந்த மரத்தை வெட்டக்கூடாது என்று சொன்னவரோ?" என்று கேட்டார்.

குருக்கள் :—ஆமாம், மகாராஜா!

பாண்டியர்:—காளையார் கோயில் தேருக்கு உபயோகித்தற்காக நாம் அதை வெட்டச் சொல்லியிருக்கும்போது நீர் தடுக்கலாமா?

குருக்கள் :—அதற்குத் தக்க காரணங்கள் இருந்தமையால் தான் அப்படிச் செய்தேன்.

உடனிருந்த அதிகாரிகளும் ஊராரும் பிறரும் மருத பாண்டியர் குருக்களை என்ன செய்து விடுவாரோவென்றும், குருக்கள் தாம் செய்த குற்றத்திற்கு என்ன சமாதானம் சொல்லப்போகிறாரோ வென்றும் அஞ்சி, அவ்விருவர்களுக்கும் இடையே நடந்த சம்பாஷணையை ஆவலோடு கவனித்து வந்தார்கள்.

பாண்டியர் :—என்ன காரணங்கள் இருக்கின்றன? அஞ்சாமற் சொல்லும்.

குருக்கள் :—இந்த ஸ்தலம் மிகவும் சிறந்தது; பழமையானது மதுரைச் சுந்தரேசுவரர் பொன்னனையாளுக்காக இரசவாதம் செய்த இடம். இறந்துபோன ஒருவனுடைய எலும்பு இத் தலத்தில் வையையாற்றிற் போட்டபொழுது புஷ்பமாக ஆயிற்று? அதனல் இது புஷ்பவன காசி என்று பெயர்பெறும். இந்த ஸ்தலத்தை மிதிக்க

அஞ்சி நாயன்மார் மூவரும் வையைக்கு வடகரையிலேயே இருந்து தரிசனம் செய்துகொண்டு சென்றூர்கள். அதற்கு அறிகுறியாக வடகரையில் அம் மூவர்களுக்கும் ஆலயம் உண்டு. இவைபோன்ற பெருமைகளால் ஒரு யாத்திரை ஸ்தலமாகவே இவ்வூர் இருந்து வருகிறது. அயலூரிலிருந்து எவ்வளவோ ஜனங்கள் நாள்தோறும் வந்து வந்து வையையில் ஸ்நானம்செய்து ஸ்வாமி தரிசனம் செய்து விட்டுச் செல்லுகிறூர்கள். வையையில் எப்பொழுதும் நிறைய ஜலம் ஓடுவதில்லை. கோடைக்காலத்தில்வடகரை ஓரமாகத்தான் கொஞ்சம் ஜலம் ஓடும். அப்பொழுது அங்கே சென்று ஸ்நானஞ்செய்து வருபவர்கள், மணலில் நடந்து துன்பமுற்று வெயிலின் கொடுமை யை ஆற்றிக் கொள்வதற்கு இந்த மருத மரத்தின் கீழிருந்து இளைப் பாறி விட்டுச் செல்வது வழக்கம். இந்த மரம் எவ்வளவோ நூற் ரூண்டுகளாக இருந்து வருகிறது. நூற்றுக்கணக்கான ஜனங்கள் நிழலுக்காக இதன்கீழ் இருக்கலாம்."

மருத பாண்டியர், இங்ஙனம் குருக்கள் கூறும் காரணங்களைக் கேட்டுக்கொண்டே வந்தார்; அவை பொது ஜனங்களின் நன்மை யைக் கருதியவை என்பதை அறிய அறிய, அவருடைய கோபம் சிறிது சிறிதாகத் தணிந்துகொண்டே வந்தது. பின்னும் கூர்ந்து கேட்கலாயினர்.

"மகாராஜாவுக்கு, இந்த மரத்தினுல் ஜனங்களடையும் பெரும் பயன் தெரிந்திருந்தால் இப்படிக் கட்டளை பிறந்திராது என்று எண் ணினேன். இந்த மரத்தை வெட்டிவிட்டால் அயலூர்களிலிருந்து, பிரார்த்தனைகளைச் செலுத்தும்பொருட்டு ஸ்நானம் செய்துவிட்டு வரும் கர்ப்ப ஸ்திரீகளும், குழந்தைகளோடும் பிராயம் முதிர்ந்தவர் களோடும் வரும் பக்தர்களும், பிறரும் வெயிற் காலத்தில் மிக்க துன் பத்தை அடைவார்கள். அக்கரையிலிருந்து வருபவர்களும் வெயி லில் வந்த இளைப்பை ஆற்றிக்கொள்ள இடமில்லாமல் தவிப்பார்கள். மகாராஜா நினைத்தால் இந்த சமஸ்தானத்தில் எவ்வளவோ மரங் கள் கிடைக்கக் கூடும். இந்த ஒரு மரந்தான் இருக்கிறதென்ப தில்லை. இந்த மரத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் எனக்கு மகாராஜாவின் ஞாபகம் வரும். இது பல ஜனங்களுடைய தாபத் தைப் போக்கி அவர்களுள்ளங்குளிரச் செய்து நிழலளித்து மகாரா ஜாவைப் போல் விளங்கி வருகின்றது. அன்றியும் மற்ருெரு முக் கியமான விஷயந்தான் என்னுடைய மனத்தில் அதிகமாகப் பதிந்

திருக்கின்றது. இந்த அருமையான மரம் மகாராஜாவுடைய பெயரைத் தாங்கிக்கொண்டு நிற்கின்றது. இந்த மரம் நெடுங்காலம் இருக்க வேண்டுமென்பதே, மகாராஜாவின் க்ஷேமத்தையே குறித்து ஸந்நிதியில் அர்ச்சனை செய்துவரும் எனது பிரார்த்தனை. இதை வெட்டலாமா ?" என்று கூறிக் குருக்கள் நிறுத்தினார்.

பக்கத்தில் நின்ற யாவரும் தம்மையே மறந்து, "ஹா ! ஹா !" என்று தங்கள் உணர்ச்சியை வெளிப்படுத்தினார்கள். "மகாராஜாவினுடைய பெயரைத் தாங்கிக்கொண்டு இது நிற்கின்றது" என்று சமயோசிதமாக அவர் சொல்லிய வாக்கியமானது எல்லோருக்கும் ஆச்சரியத்தையும் உருக்கத்தையும் உண்டாக்கிவிட்டது.

பராமுகமாகக் கேட்டுக்கொண்டு வந்த மருதபாண்டியர் முக மலர்ந்து நிமிர்ந்து குருக்களைப் பார்த்தார். அவருடைய உள்ளம் குருக்களுடைய நல்லெண்ணத்தை அறிந்து கொண்டது. உண்மையான அன்பே அவரை அவ்வாறு தடுக்கச் செய்ததென்பதை அவர் உணர்ந்து, "சரி; நீர் செய்தது சரியே! உமக்கு நம்மேல் உள்ள விசுவாசத்தையும் பொது ஜனங்களின்மேல்உள்ள அன்பையும் கண்டு சந்தோஷிக்கிறோம்," என்று கூறினார்.

மருதமரம் வெட்டப்படாமல் நின்றது. குருக்கள் அச்சம் நீங்கினார். காளையார் கோயில் தேருக்கு வேறொரு மரம் அச்சு ஆயிற்று.

---

## 3. பொன்

'எல்லாம் பொருளிற் பிறந்து விடும்' என்று சங்கப் புலவர் ஒருவர் கூறியது இந்தக் காலத்தில் கண்கூடாகக் கண்டறியத்தக்க விஷயமாம். "பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே" என்ற பழமொழி தனி மனிதர்க்கு மாத்திரம் பொருந்துவதோடு அமையாது, தேசங்களுக்கும் பொருந்துவதாய் உள்ளது. இந் நாளிலே செல்வச் செழிப்பால் உயர்ந்த அமெரிக்கா, சில நூற்றாண்டுகளுக்குமுன் சரித்திரம் இல்லாதது. பல்லாயிர ஆண்டுகளாகச் சரித்திரப் பிரசித்தியடைந்த சீனதேசம் தற்கால நாகரிகத் துறைகளில் முன்னேறிப் பணம் பெருத்த தேசமாய் இல்லாதிருப்பதால், சிறிய தேசமாகிய ஜப்பானுக்கும் அஞ்சவேண்டி யிருக்கிறது. ஒரு மனிதன் நல்வாழ்வு பெறப் பொன் அவசியமா யிருப்பதுபோலவே, ஒரு நாட்டுக்கும், பல நாடுகள் சேர்ந்த ஒரு கண்டத்துக்கும், பல கண்டங்கள் அடங்கிய உலகத்துக்கும் பொன் இன்றியமையாததா யிருக்கிறது.

வியாபாரங்கள் பலவகையாலும் பெருத்த இக் காலத்தில் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குப் பண்டமாற்று நடைபெறுவதற்குப் பொன்னின் உதவி அவசியமாகும். அடக்கமாகச் சிற்றளவுக்குள் நில்லாமல், மேலும் மேலும் வளர்ந்துகொண்டே வருகின்ற உலக வியாபாரத் தொகுதிக்கு ஓரே நாணயமும், அந் நாணயம் செய்ய ஒரே உலோகமும் இருத்தல் நலம் என்று பொருள் நூல் வல்லார் துணிந்து கூறுகின்றனர். அவ்வாறு ஏற்றுக்கொள்ளத் தக்க உலோகம் பொன்னே என்பது அறிஞர் துணிபு.

உலகம் எங்கும் வாழும் நாகரிகம் படைத்த நாட்டு மக்களெல்லாம் வியாபாரத்துக்கு உபயோகிக்கும் வண்ணம், நாணயமாக வழங்கும் பொருட்டு எவ்வளவு பொன் வேண்டும்! பொன்னின் நயமும் ஒளியும் கருதி ஆபரணங்களாகச்செய்து அணியும் ஆடவர் பெண்டிர் பொருட்டு எவ்வளவு பொன் வேண்டும்! இந்தியாவினுள் நுழைந்த பொன்னெல்லாம் நாணயமாற்றுக்கு உதவாமல் பெண் மக்கள் உடம்பெல்லாம் ஆபரணமாய் மாறிப் புகுந்து மறைந்து விட்டது என்னுமோர் அபவாதமும் உண்டு. இந்த நகைப் பைத்தியத்துக்கு தேசம் காலம் என்ற பேதம் கிடையாது. எல்லா நாடுகளிலும் எல்லாக் காலத்திலும் இப் பைத்தியம் உண்டு. நாகரிகமே அறியாத காட்டு மனிதரும் தம் கையிற் கிடைத்த பொன்னைக் கட்டி கட்டியாய் ஆபரணமாக அணிந்திருந்தனர். கொலம்பஸ் அமெரிக்காவிலே கண்ட அற்புதக் காட்சிகளில் காட்டு மக்கள் பொன் மணிகள் பூண்டு வந்து போர் புரிந்ததும் ஒன்று என்று அவர் சரித்திரத்தால் அறிகிறோம். மிக்க நாகரிகம் படைத்த ஆங்கிலேய, அமெரிக்க, பிரான்ஸிய, ஜெர்மனிய மக்களும் பொன்னணி பூணும் ஆசையை நாகரிகம் முதிர்ந்துள்ள இந்நாளிலும் ஒழிக்கவில்லை.

அன்றியும் நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் கோயில்களிலும் தொழுமிடங்களிலும் பொன்னை மிகுதியாய் உபயோகிக்கவே விரும்புகிறோம். வாகனங்களிலும் நகைகளிலும் பாத்திரங்களிலும் விமானங்களிலும் பொன்னைப் பயன்படுத்துவது எங்கும் உள்ளது. பொன்மயமான பெருங் கோபுரங்களை எழுப்பிய பௌத்தரும் சீக்கியரும் தங்கள் ஆலயங்களுக்கு மிகுந்த பொன்னை உபயோகித்திருக்கின்றனர்.

உலகத்திலே மேன்மேலும் சுற்றிக்கொண்டே வரும் நாணயங்களும் வியாபார முறைகளின் இரகசியத்தால் சில நாடுகளிலே

போய்த் தூங்குகின்றன. பெரும்பான்மையான நாடுகளுக்குப் பொன் பஞ்சம் வந்துவிடுகின்றது. இன்னும் இவைபோன்ற பல காரணங்களால் உலகத்திலே மேலும் மேலும் பொன் அகப்பட வேண்டுவது அவசியம் ஆகின்றது.

ஆஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் ஆங்கிலேயரும் பிறரும் போய்க் குடியேறியது பொன்னின் பொருட்டாகவே. ஆப்பிரிக்காவிலும் பொன் சுரங்க வேலைகள் அநேக மக்களை இழுத்தன. வெறும் காட்டு மனிதர் வாழ்ந்த பிரதேசங்களில் அவர்கள் மதிப்பறியாது ஆற்றுப் படுகைகளிலும், அடுத்த பாறை நிலங்களிலும் ஒட்டிக் கிடந்த பொன் எத்தனையோ மக்களுக்குப் பிழைப்பும் ஊதியமும் கொடுத்துள்ளது.

உலகிலுள்ள பொன் சுரங்கங்களின் மொத்த வருவாய் வருஷத்துக்குச் சற்றேறக்குறைய இரண்டுகோடி அவுன்ஸ் பொன்னாகும். இந்தப் பொன்னில் அரை வாசிக்குமேல் தென்னாப்பிரிக்காவில் உள்ள டிரான்ஸ்வால் நாட்டுச் சுரங்கங்களில் இருந்தே கிடைக்கின்றது. எஞ்சி யிருக்கும் பகுதியை உலகத்திலுள்ள மற்ற நாடுகள் எல்லாம் உதவுகின்றன.

இந்தியாவும் அநேக நூற்றாண்டுகளாகப் பொன்னுதவும் நிலம் உள்ளதாகவே இருந்துவருகின்றது. இந்தியச் சுரங்கங்களில், மிகவும் வருவாய் உள்ளது, மைசூர் சமஸ்தானத்தில் உள்ள கோலார் தங்கச் சுரங்கமேயாகும். இந்திய நாட்டுப் பொன் விளைவில் கோலார் சுரங்கத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பங்குவருகின்றது

கோலார் என்பது மைசூர் இராஜ்யத்தின் கீழ்ப்பகுதியில் உள்ளதோர் ஜில்லாவாகும். இந்நாட்டில் நிலம் பெரும்பாலும் கற்பாறையால் அமைந்துள்ளது. பொன் சுரங்கமுள்ள இடத்தைச் சேர்வதற்கு ஒரு சிறு இருப்புப்பாதை போடப்பட்டுள்ளது. சுரங்கத்தின் அருகிற் சென்றால் எங்கும் கருங்கல்லும் சல்லிகளும் வெண் மணற்றிட்டையும் காணப்படும். செடி கொடி வகைகள் ஏதும் இரா. சிறு குடிசைகள் சிலவும் ஆங்காங்குப் பெரும் புகைப் போக்கிகளும் காணப்படும்.

சுரங்கத்திற் பொன் வெட்டி எடுக்கும் இடம் நாலாயிரம் அடிக்கு மேலும் ஆழமாய் இருக்கும். சுரங்கத்தினுட் செல்லச் சாய்வான வழிகளும் நேர்வழிகளும் உண்டு. மனிதர் இறங்குவது நேர்வழிகளாலேயே. சுரங்க வாயிலில் இருப்புக் கயிற்றால் மேலும் கீழும் செல்லுமாறு அமைக்கப் பெற்றிருக்கும் இயந்திர அறைகள் உண்டு

சுரங்க வாயிலில் உள்ள இராட்டினங்களின் உதவியால் மனிதர் உட்கார்ந்ததும் இந்த அறைகள் கீழே இறக்கப்படும். இந்த இயந்திரம் ஆறாயிரம் அடி ஆழம் வரையில் மனிதரை இறக்கக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. இறங்கிப் போகும்போது ஒரே இருட்டாய் இருக்கும். இந்த இயந்திர உதவியால் நிமிஷத்துக்கு இரண்டாயிர அடி வீதம் வெகு விரைவாகக் கீழே இறங்கலாம்.

கீழே சென்றால் தொழிற்சாலை தோன்றும். காற்று மிகவும் உஷ்ணமாய் இருக்கும். இயந்திர விசிறிகள் உதவியால் சிறிது சிறிது காற்றின் உஷ்ணம் குறைக்கப்படும். வழி இருளாயிருக்குமாகையால் விளக்கின் உதவியால் நெடுந்தூரம் நடந்து பார்க்கலாம். பாதாள வுலகத்திலே தொழில் செய்யும் தொழிலாளிகள் தங்களுக்குக் கிடைக்கும் சொற்பச் சம்பளத்தின் பொருட்டு ஒரு முறை உட்சென்றால் எட்டு மணிநேரம் அங்கிருந்து வேலை செய்யவேண்டும். கிணறுகளிலே பாறைகளைக் கிளப்ப மருந்து வைப்பதுபோலப் பொன்னோடும் பாறைகளைப் பிளந்து எறிவதே அங்குள்ள தொழிலாளர் வேலையாம். பொன்னை எடுக்கும் தொழிலாதலால், அத்தொழிலாளர் மிக்க நம்பிக்கைக்குப் பாத்திரமானவராய் நடந்துகொள்ள வேண்டும். அங்குள்ள தொழிலாளரிற் பெரும்பான்மையோர் தமிழ் மக்களே.

இவ்வாறு கல்லும் கட்டியுமாக மேலே வரும் பொன்பொடிக் கலப்பைச் சுத்தம் செய்வது மிகவும் சிரமமான வேலையாம். இது மிகவும் ஜாக்கிரதையாய்ச் செய்யப்படவேண்டும். பாறைகளைச் சல்லி சல்லியாய் உடைத்துப் பொடி செய்து அத்துகளைப் பாதரஸத்தோடு கலப்பார்கள். இதற்கென்றே ஒருஇயந்திரம் அமைந்துள்ளது. அந்த இயந்திரத்தில் உள்ள தகடுகள் சரிவாக வைக்கப்பட்டிருக்கும். மேலிருந்து பொன்பொடி கலந்த கற்பொடியைத் தண்ணீரோடு கரைத்துவிட்டுப் பெரும் பகுதியாகிய பொன்னை மேலே ஒட்டி வைத்த பாதரஸத்திலும், தகட்டிலும் பொருந்தியிருக்கக் கண்டு எடுப்பது முதன்முறையாம். இம்முறையில் பெரும் பகுதி தங்கம் வந்துவிடும். எஞ்சியிருப்பதையெடுக்கக் கம்பளியை உபயோகிப்பர் கம்பளியில் ஒட்டிய தங்கத்தை யெடுக்க 'பொடாஸியம் ஸைனேட்' என்ற உப்பை உபயோகிப்பார்கள். இந்த உப்பைக் கரைத்த தண்ணீரில் கம்பளியை முக்கினால் பொன் வேறாய்விடும். இன்னும் எஞ்சியுள்ள தங்கத்தை எடுக்க, முதலில் காந்தத்தின் சக்தியைக் கொண்டு அந்த திரவத்தில் இருக்கும் இரும்பைப் பிரித்துவிட்டு மேற்சொல்லிய 'பொடாஸியம் ஸைனேட்' என்ற உப்பைக்

கொண்டே பொன்னைப் பிரித்துவிடுவார்கள். எஞ்சியிருக்கும் நீரில் உள்ள மண் எல்லாம் வெண்மை நிறமாய் மணல்போலாகி வெளியிலே குவிக்கப்படும்.

ஒரு வண்டி பொன் கல்லிலிருந்து இம்மூன்று முறைகளாலும் பிரித்தெடுத்தால் ஒரு அவுன்ஸ் பொன் கிடைக்கிறது. பல்லாயிரக் கணக்கான ஏழை மக்கள் இந்தத் தொழிலாற் பிழைக்கிறார்கள். இவர்கள் இரவு பகல் பாராது பாதாள வுலகத்திலே படும்பாடெல்லாம், உலகத்தில் மேன்மேலும் பொன் பல வழிகளாலும் பரவுதற்கேயாம்.

174943

## 4. சுலோசனை

இராமபிரான், இராவணனை அவன் இயற்றிய பல குற்றங்களுக்காகத் தண்டிக்கத் திருவுளங்கொண்டு, சுக்கிரீவன் உதவிபெற்று வானரப் படையோடு இலங்கையை யடைந்தனன். இராவணன் அதனை அறிந்து போர் தொடங்கினன். கும்பகர்ணனும் பிற அரக்க வீரர்களும் பெரும்படையோடு முன்சென்று தாசரதியின் கணைகளுக்கிலக்காகி மாண்டனர். அப்பால் இராவணன், இந்திரனை வென்றடக்கிய மேகநாதன் என்ற தன் மகனைப் போர்க்கு அனுப்பினன்.

மேகநாதனும் பெரும் படையோடு போர்களம் புகுந்து போர் புரிய, அரக்கர் சேனையைக் குரக்குச் சேனைகள் கொன்றொழித்தன. இந்திரனை வென்ற வீரன், இலக்குவனது வில்லினின்றெழுந்த அம்பொன்றால் தாக்குண்டு, அதற்காற்றாது நகர் நோக்கித் திரும்பினன். அங்குத் தனது தந்தையின் அரண்மனையை யடைந்து போர்க்களத்தில் நிகழ்ந்தவற்றை எடுத்துக் கூறி, "இராமபிரானோடு போர் புரிதல் அரிது. வெற்றி பெறுதல் இராமனை எதிர்த்தார்க்கு எளிதன்று. ஆதலால் அவன்பால் சீதையை விடுத்து வணங்கி நாடும் மரபும் அழியாது காத்தலே நலமாம்'' என்று எடுத்துரைத்தனன். இராவணன் இவ்வறவுரை கேளாது கண்களில் நெருப்பெழ வெகுண்டு படபடவெனப் பேசி மீண்டும் அவனைப் போர்புரியவே தூண்டி விடை கொடுத்தான்.

மேகநாதன், தனது தந்தை சொல்லை மறுத்து அதனால் அவன் சீற்றத்துக்கு ஆளாகிப் பழி பூண்பதைக் காட்டிலும், தாசரதியை எதிர்த்து அவன் கணையால் மாய்வதே மாண்புடையதாகும் எனக் கருதினான். அதனால் அவன் தந்தை முகம்நோக்கித், "தந்தாய், ஒன்று செய்ய நினைக்கின்றேன். எண்ணிய எண்ணியாங்கு எய்து

தற்கு ஆற்றல் தரும் இயல்புளதாகிய ஒரு வேள்வியை நம் நிகும்பலைக் காட்டிலே சென்று செய்து முடித்துவர விழைகின்றேன். அதன் பின்னர் அமர்க்களம் சென்று வெற்றி பெற்று மீள்வன்'' என்று வணங்கிக் கூறினன். இராவணனும் மனமகிழ்ந்து தன் அரும்பெறல் மைந்தனைப் புகழ்ந்து ஆசிகூறி அனுப்பினான்.

இந்திரனை வென்றோன் நிகும்பலைக்குப் புறப்பட்டான். புறப்படு முன்பு அவன் தன் மனைவி சுலோசனையிடம் விடை பெற்றுச் செல்லக் கருதி அவளது அந்தப்புரம் அடைந்தான்; அங்குப் போர் தொடங்கிய நாள் முதலாகத் தன் கணவனைப் பிரிந்து துக்கமே உருவமாய் அமைந்து கண்ணீரால் நனைந்த ஆடையும் சோர்ந்த முகமும் கொண்டு எதிர்வந்த சுலோசனையைக் கண்டான். வாடிய மேனியுடன் பூங்கொடிபோல் வந்து வணங்கிநின்ற தன் மனைவியைத் தேற்றக் கருதிய மேகநாதன், "பெண்ணே, நீ கண்ணீர் பெருக்கும் காரணம் யாது? இந்திரசித்தின் மனைவி துயர்க்கண்ணீர் வடித்தாள் என்று கேட்டால் எவரேனும் நம்புவரோ? நின் உள்ளத்தைக் கரைத்த துயரம் என்ன?'' என்று இன்சொற்களால் வினவினன்.

அதற்குச் சுலோசனை முன்றானையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, "மணாள, உம்மையன்றி வேறு உறுதுணை எவரும் இல்லாத அடியாளைப், போர் என்று கூறி, நீர் பிரிந்து சென்று எத்துணை நாட்களாயின? போர்க்களத்திலே வெற்றி தோல்விகள் இன்னவர்க்கே என்ற உறுதியுண்டோ? இன்று வருவீர், நாளை வருவீர் என்று உமது வரவை ஆவலுடன் எதிர்பார்த்து எத்துணை நாட்கள் ஏக்கமுற்றிருப்பேன்? இவ்வளவு நாளாக என்னைக் காண வாராமையால் உமக்கு என்ன நேர்ந்ததோ என்று என் உள்ளம் கவலத் தொடங்கியது'' என்றாள்.

அப்பொழுது இந்திரசித்து அவளை நோக்கி, "சுலோசனா, யான் எதன் பொருட்டுப் போர்க்களம் புகுந்தேன் என்பதை நீ அறிவாயன்றோ? எந்தை வைதேகியைக் கவர்ந்தமையால், நம் குலத்திற்குத் தீராப் பழியும், வாராப் பகையும் வந்தன. காகுத்தன் கணைக்கு இரையாகிக் கும்பகருணனும் அதிகாயனும் மாண்டனர். அரக்கர் படைஞருள் எண்ணிறந்தோர் மாண்டொழிந்தனர். யானும் ஒரு முறை இராமனுக் கிளைய வீரன் இலக்குவன் கணைகளின் உருசி பார்த்து மீண்டேன். யான் என்ன கூறியும் தந்தை கேளாமையால் நிச்சயமாக வெற்றியை விளைவிக்கும் வேள்வி யொன்றை நிகும்பலை

சென்று நிறைவேற்றி வருமாறு அவரிடம் ஆணை பெற்றுப் புறப் பட்டு வந்தேன். யான் வேள்வியை நிறைவேற்றிப் போரில் வெற்றி பெற்று மீளும் அளவும் நீ ஆற்றியிருப்பாயாக'' எனக் கூறினன்.

அது கேட்ட சுலோசனை கண்கலங்கி "இன்னுயிர்த் தலைவ, மீண்டும் போர் புரியவோ துணிகின்றீர்? மும்மைசால் உலகுக்கெல் லாம் முதல்வனாகிய இராமபிரானது தெய்விக சக்தியின் முன், நுமது தந்தையின் வில்லாற்றலும், வாட்போர் வன்மையும், வரங் களும் பிறவும் எதிர்த்து நிற்க வலிபடைத்தன ஆமோ? அவர் செய் யும் செயல் அறிஞர் வெறுப்பிற் குரியதாம். கணவன் உருவன்றி வேறொன்றும் காணாத கற்பின் தெய்வத்தைச் சிறை வைத்திருப்பது, எரியைக் கொணர்ந்து சிறு துகிலிற் பொதிந்து வைத்தது போலவாம். அத் தெய்வத்தின் கற்புத்தீயே இந்நாட்டைச் சுட்டது; அரக்கரை வேரோடும் அழித்தது. இன்றுவரை உமது தந்தையையும் உம்மை யும் எதிர்த்து நின்று வெற்றிகொண்டார் எவரேனும் உளரோ? இராமபிரானை எதிர்த்து நிற்க எவரால் இயலும்? உண்மையறிவு பெற்றவரான நுமது சிறிய தந்தை விபீஷணர், இராகவனைச் சரண மடைந்தார். அவரும் அவர் மரபும் ஓங்கும். நமக்கு இனி இவ் வுலகில் வாழ்வில்லை. இம்மட்டோடாவது போரை நிறுத்தி நம் குலத்தின் மானம் அழியாது காத்தல் நலம்'' என்றாள்.

சுலோசனையின் இரக்க மொழிகளைக் கேட்ட மேகநாதன், "பெண்ணே, நீ கூறிய அனைத்தும் மெய்யே. இப்பொழுது நாம் தொடங்கியிருக்கும் போர் மிகப் பெரிதாகும். இதனால் எண்ணிறந்த வீரர் விண்ணுலகம் புக்கனர். யானோ தந்தையிட்ட கட்டளையைச் சிரமேற்றாங்கிச் செய்தற்குரிய செயல்களை இயற்றும் கடமை பூண்ட வனாவேன். நம்மை எதிர்த்து நிற்கும் மாற்றானாகிய இராமனும், தந்தையின் ஆணையைக் காத்தற்பொருட்டன்றோ காடுபோந்தனன்? ஆதலின் எனக்கு விடை கொடுப்பாயாக. நம் குலத்தின் மானம் அழியாது காத்தல் நலம் என்று நீய்ய கூறினாய். ஆதலால் தீது வரினும், நலம் வரினும், இனி யான் முன் வைத்த காலைப் பின் வைத்தல் ஆகாது. நிகும்பலைக்குச் சென்று விரைவில் மீள்கின்றேன். விடை பெறுகின்றேன்'' என்று கூறிப் புறப்பட்டான்.

இங்ஙனம் கற்பிற் சிறந்த தன் மனைவியைப் பிரிந்து சென்ற மேகநாதன் நிகும்பலையை அடைந்து, தான் நிறைவேற்றக் கருதிய வேள்வியைத் தொடங்கி, உரியவர் உதவியோடு நடத்திக்கொண்டு

இருந்தான். அதனை ஒற்றர் மூலம் அறிந்த இலக்குவன், அவ்வேள்வி கடவா வண்ணம் தடுக்கக் கருதி, இராமன் ஆணை பெற்றுப் புறப்பட்டு, அந் நிகும்பலைக் காட்டை அடைந்தான். அனுமானும் விபீஷணனும் வேறு சில வானர வீரர்களும் இலக்குமணனைக் தொடர்ந்து வந்தனர். நிகும்பலையிற் பெரும்படை யொன்றைச் சக்கர வியூகமாக அமைத்து, அதனிடையில் இருந்து வேள்வி இயற்றிய இந்திர சித்தினை இலக்குவன் கண்டான். அவ் வேள்வியின் சிறப்பினைக் கண்டு அதிசயித்துச் சிறிது நேரம் நின்ற இளைய பெருமாள், பின்பு படைக்கடலைப் பிளந்து, இந்திரசித்தை நெருங்கி, அவன் மேற் பல அம்புகள் தொடுத்தான். உடல் முழுதும் அம்புகள் பாய்ந்து தைத்தும் அதனைப் பொருட்படுத்தாது வேள்வியை நிறைவேற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்த மேகநாதனைப் போர்க்குத் தூண்டத் துணிந்து, இலக்குவன் சில சொற்கள் கூறினன். அவற்றைக் கேட்டுப் பொறாத இந்திரஜித்து, தான் நினைத்த காரியத்தை நிறைவேற்றாது போர்க்கு எழுந்தான். குரக்குப்படைஞர் நெருப்பை அவித்துப் புகையை எழுப்பினர். இராவணன் மைந்தனும், இராமன் இளவலும் பெரும்போர் புரிந்தனர். பல்வகைப்பட்ட தெய்விக சத்தி வாய்ந்த அம்புகளைத் தொடுத்தும் அரக்க வீரன் வலி குறையா திருத்தலைக்கண்ட இலக்குவன், தனது அம்பறாத் தூணியினின்று ஒரு கணையை எடுத்து வில்லில் தொடுத்து, "தாசரதியாகிய இராமபிரான் தர்மாத்மாவும், சத்திய சந்தனும், ஆண்மையில் நிகரற்றவனும் ஆவது உண்மையாயின், அம்பே! இந்த இராவணியைக் கோல்லுக" என்று கூறி விடுத்தான். அக் கணை இந்திரசித்தனது தலையைத் துணித்து இராமபிரான் கழலடியிற் சேர்த்து, வலக்கரத்தைத் துணித்து சுலோசனையின் முன்னே போட்டது.

ஏந்திய வாளுடன் வந்து தன்னெதிரில் விழுந்த கரத்தை உற்று நோக்கிய சுலோசனை, அக்கரம் பற்றியிருந்த வாளில் தனது நாயகன் பெயர் பொறிக்கப்பட்டிருக்கக் கண்டு துயர்க்கடலின் கரைகாணாது மயங்கி விழுந்தாள்; ஏங்கினாள்; தனது கரங்களை நெரித்தாள்; புலம்பினாள்; "தலைவ! யான் தடுத்தும் கேளாது சென்று மாய்ந்தீரே. கணவன் மனைவியாகிய இருவரும் உயிரும் உடம்பும் போல்வர். கணவன் இறந்தால் மனைவி பிணமே யாவாள். ஆதலால் இவ் வுலகில் இனி எனக்கு என்ன வாழ்வுண்டு? இனி யான் உயிர் தரித்திரேன். எரியிற் புகுந்து மாய்வேன். இன்றேல் என் உடலை விலங்கினங்கட்

கும், புள்ளினங்கட்கும், பேய்கட்கும், பூதங்கட்கும் விருந்தாகக் கொடுப்பேன்'' என்று புலம்பினாள்; பிறகு தனது தோழிகளை யழைத்துச் சிதையடுக்கி நெருப்பை வளர்க்கக் கட்டளை யிட்டாள்.

அதைக்கேட்ட தோழியருள் ஒருத்தி, சுலோசனைக்குப் பல ஆறுதல் மொழிகள் கூறி, "அம்மே, ஊழ்வலியை வெல்லுதல் எவர்க்கும் அரிது. தலைவனை இழந்த துயரம் பொறுத்தற்கரியதே. ஆயினும் கழிந்ததைக் குறித்து வருந்துவதால் வரும் பயன் என்ன?'' என்றனள். மற்றொரு தோழி, "தலைவியே, இத் துணிபட்ட கரத்தைக் கண்டு நின் கணவன் இறந்தான் என்று நீ கருதுவது எவ்வாறு? இது எவருடைய கரமோ? எவர் எறிந்தனரோ? என்ன மாயையோ? இவற்றையெல்லாம் கருதாது, நீ ஏன் நின் கணவன் இறந்தார் என்று வருந்த வேண்டும்?'' என்றாள். இச் சொற்களால் சுலோசனை ஒருவாறு மனவமைதியுற்று, "எவரிடம் சென்று உண்மையை விசாரித்தறிவேன், அந்தோ! செய்வதறியேனே'' என்று புலம்பி நின்றாள்.

பின்பு சிறிது நேரம் சிந்தித்துத், "தலைவர் கரமே, யான் என் தலைவரை வேட்ட அன்று முதல், இன்றுவரை இன்ப துன்ப வாழ்வுகளில் ஒற்றுமைப்பட்டுச் சொல்லும் பொருளும், பூவும் மணமும் போலப் பொருந்தியிருந்ததுஉண்மையாயின், நான் அவரையன்றிப் பிறர் எவரையும் கனவிலும் நினைத்திலேன் என்பது மெய்யாயின், விண்ணவர் தலைவனைச் சிறையிட்ட வீரசிகாமணியாகிய என் தலைவர் யாரால் உயிரிழந்தார், அவரைக் காண யான் எங்குச் செல்ல வேண்டும் என்ற வினாக்களுக்கு விடை கூறுக" என்றாள். உடனே அக் கரம் அவள் கற்பின் மகிமையால் தோழியர் அதிசயிக்கப், "பெண்ணே, யான் நிகும்பலை சென்று வேள்வி நடத்திக்கொண்டிருக்கும்போது, இராமனுக் கிளையான் வானரப் படையோடு வந்து கடும்போர் புரிந்து அம்பொன்றால் என் சிரத்தையும் கரத்தையும் துணித்தனன். கரம் உன்பால் உற்றது. சிரம் இராமன் கழல் சார்ந்தது. கற்புடையாய், நீ அக் காட்சியை அங்குச் சென்று காண்க'' என்று நிலத்தில் எழுதியது; எழுதி முடித்ததும் முன் போலத் தரையில் விழுந்தது.

அதனால் உண்மையை அறிந்துகொண்ட சுலோசனை இராவணனிடம் சென்றாள். இலங்கேசன் ஆத்தான மண்டபத்தே அரியணையில் வீற்றிருந்தான். மந்தோதரியும் அருகில் இருந்தாள்.

சுலோசனையின் வரவுகண்ட இராவணன், அவளைச் சீதையென்று எண்ணி, மந்தோதரியை நோக்கி, "அதோ வருகின்றனள் சீதை! இந்திரசித்து இராம லக்குமணரை வென்றனன். என் பகைவர் ஒழிந்தனர். என் எண்ணம் இனி நிறைவேறும். சீதை நம்மைச் சரணமடைய வருகின்றாள்" என்று கூறினான். மந்தோதரி அது கேட்டு மனம் வருந்தி, வந்தாளை உற்று நோக்கிச் சற்றுத் திகைத்து அவள் தன் மருகி சுலோசனையே எனவறிந்து, தசமுகனை நோக்கி, "அவள் சானகி யல்லள். நமது மருமகள் சுலோசனையே! அவள் வருங் கோலத்தை உற்று நோக்கினல் நமது மைந்தனுக்கு ஏதோ துன்பம் நேர்ந்திருக்கும் என்று தோன்றுகிறது" என்றனள்.

மந்தோதரி இவ்வாறு கூறி முடிக்குமுன் சுலோசனை அங் கடைந்து, மாமன் மாமியரை வணங்கித் தன் தலைவன் கரத்தை முன் வைத்துத் தரையிற் சாய்ந்து புலம்பி அழுதாள். இராவணன் அக் காட்சியைக் கண்டு நிகழ்ந்தவற்றை அறிந்துகொண்டான்; துயரத்தாற் பதுமைபோல் ஆனான். தன் இருபது கண்களினின்றும் நீர் ஆறாகப் பெருக அலறி யழுதான்; பலவாறு புலம்பினான்; நிலத் தில் வீழ்ந்து புரண்டான். அப்பொழுது மந்தோதரி தன் உதரத் தைப் பிசைந்துகொண்டு தேவரும் இரங்கக் கோவென்று அலறி யழுதாள்.

அப்பொழுது சுலோசனை இராவணனைப் பணிந்து, தனது நாயகன் சிரத்தைத் தன்னிடம் சேர்ப்பிக்க வேண்டினள். அது கேட்ட இலங்கேசன் பெருங்கோபம் கொண்டான்; சுலோசனையைப் பார்த்து, "மதியற்ற பேதையே, என்ன கூறினை? இப்பொழுது ஈடும் எடுப்பும் இல்லாத ஆண்மையும் வெற்றியும் படைத்த மகனை இழந்த துயரத்தைக் காட்டிலும், உன் சொற்கள் என் நெஞ்சை அதிகமாகப் பிளக்கின்றன. என்முன் நில்லாது போ," என்றான். சுலோசனை பின்னும் வணங்கி, "என் தலைவர் தலையை யான் காணு மாறு அருள வேண்டுகின்றேன். உமது துயரம் என் துயரத்தினும் பெரிது அன்றே" என்றனள். அவ்வுரை கேட்ட அரக்கர்கோன் பற்களை நெறு நெறெனக் கடித்துப் "பெண் பேதாய், நீ கணவன் பிரிவுக்காற்றாதவளாயின் எரியில் மூழ்கி நின் கணவனிடம் சென்று சேர்க. பகைஞனிடம் சென்று இறந்த மகன் தலையை இரந்து கேட்குமாறு கூறி என் மனத்தைப் புண்படுத்தா தொழிக," என்று

கூறினன். சுலோசனை, இனி இங்குப் பேசிப் பயனில்லை யென்று கருதிப் போர்க்களஞ் சென்றாள்.

இதற்குள் மேகநாதனை வென்ற இலக்குவன் இராமனை யடைந்து வணங்கி நின்றான். இராமபிரான், 'தம்பியுடையான் பகை யஞ்சான்' என்று கூறி அவனைப் புகழ்ந்து பாராட்டினன். அவ்வம யத்தே சுலோசனை அங்கு நெருங்கினள். வானரர் அவள் சீதையோ என்று ஐயுற்றுப் பிறகு தெளிந்தனர். சுலோசனை இராமபிரான் கழல்களில் வீழ்ந்து, " அடைக்கலம் புகுந்தார்க்கு அருள்புரியும் வள்ளலே! என் கணவரது சிரத்தைக் கண்டு வணங்கி எரியிற் புக அருள்புரிய வேண்டுகிறேன்" என்று பிரார்த்தித்தனள்.

இராமபிரான், "கற்புக்கணிகலமே, இங்குளோர் உன் கற்பின் சிறப்பை அறியுமாறு, அத் தலையைப் பேசச் செய்க" என்று கூறித் தலையை வருவித்து முன்னே இடுவித்தனன். தலையைக் கண்ட சுலோசனை ஆறாத்துயரங்கொண்டு, அதனை மும்முறை வலம் வந்து வணங்கித் " தலைவரே, உமது ஆணையால் யான் இங்கு அடைந் தேன். இனி யான் செய்தற்குரியது யாதென்று கூறியருள வேண்டுகிறேன். இங்கு என்னோடு பேசாதிருப்பின், என் கற்பின் சிறப்பைப் பற்றி இங்குள்ளோர் ஐயங்கொள்ள நேரிடும்" என்று கூறி னள். சிரம் சிறிது நேரம் மௌனமாயிருந்தது. சுலோசனை துயர மிகுந்தவளாய், "என் தலைவரே, இலக்குவனோடு நீர் போர் புரியுங் கால் என் தந்தையை யான் அழைத்துவாராமையால் என்மேற் சினங்கொண்டீரோ?" என்று கேட்டாள். அது கேட்ட தலை, சிறிது நகைத்து, " என்னை ஏன் பழிக்கின்றனை? உனது கற்பின் திறத்தை உலகம் அறிய இது ஒரு குறியாகும்" என்று கூறியது. பின்பு சுலோசனை அத் தலையை உடன்கொண்டு இராம லக்குமணரை வணங்கி விடைபெற்று எரியிற் புகுந்து உயிர் துறந்தாள்.

இலக்குவன், " இச் சுலோசனையின் தந்தை யார்?" என்று இராகவனைக் கேட்க, அப் பெரியோன் ஆதிசேடனே அவள் தந்தை யாவன் என்று கூறி, இலக்குவனுக்கு அவனது அவதார இரகசி யத்தை உணர்த்தினன். இராமன் அருளால் இலக்குவன் மனம் தெளிந்து முன்போற் போர் புரிந்து இராமன் துணைவனாய் நின்றனன்.

———

## 5. சர்வதேச சங்கம்

சமீபகாலத்திலே நிகழ்ந்த உலகப்பெரும்போரைப் பற்றி நாம் அறிவோம். இந் நாளைய கலாசாலை மாணவர்க்கு, அதன் நிகழ்ச்சியைப்பற்றி வெளியாயுள்ள பல புத்தகங்களும், அப் பெரும் போரின் இயல்பை விளக்கிக் காட்டுகின்றன. சிறிது வயது சென்றவர்கள் 1914-ஆம் வருஷம் முதல் 1918-ஆம் வருஷம் வரையில் நிகழ்ந்த அப் போரின் செய்திகளை அவ் வருஷங்களில் வெளிவந்த பத்திரிகைகளால் அறிந்திருப்பர். நம் நாட்டிலிருந்தும் பல்லாயிரம் படைஞர் இப் பெரும் போரிலே தம் உயிரைத் தியாகஞ் செய்யச் சென்றனர். ஆங்கில முறையால் வைத்தியம் பயின்ற பலர் போர்க்களத்தருகு சென்று வைத்தியம் புரிந்தனர். அவர்களுள் உயிரோடு மீண்டு வந்தோரெல்லாம் அரசாங்கத்தாரால் நன்கு பாராட்டப்பட்டு விசேஷ சன்மானங்கள் அடைந்து வருவதையும் நாம் அறிவோம்.

உலகப் பெரும் போரிலே கோடிக்கணக்கான வீரர்கள் தம் உயிரைக் கொடுத்தனர். அதனால் உலகமெங்குமிருக்கும் பல நாடு நகரங்களிலுள்ள இல்லங்கள் ஆண்மக்கள் இன்மையாற் பாழாயின. இப் போரிலே இறந்த மக்கள் தொகையே மூன்று கோடிக்கு மேலாயிற்று. காயம் பட்டுத் திரும்பியவரும் வெற்றி சின்னங்களோடு நாடுகளுக்கு மீண்டவரும் எத்துணையரோ? இப் போரிற் செலவான பணத்தொகை இவ்வளவு என்று எண்ணிச் சொல்ல இயலாது. இதனால் உண்டான கடன்களை இன்னும் அநேக தேசங்கள் தீர்க்க வழியறியாமல் திகைக்கின்றன.

இப் பெரும் போர், முன்னாளில் நிகழ்ந்த எந்த யுத்தத்தினும் பல வகையாலும் பெரியதேயாம். இதன்கண் உபயோகமாகிய வாகனங்கள், ஆயுதங்கள், மருந்துகள் முதலிய பொருள்களைப்பற்றி முன் எப்போரிலும் நாம் காதாலுங் கேட்டதில்லை. சென்ற நூற்றாண்டிலே ரஸாயன சாஸ்திரமும், பௌதிக சாஸ்திரமும், பிற துணைச் சாஸ்திரங்களும் அடைந்த முன்னேற்றம் எல்லாம் இந்தப் போர்க்கு உதவுவனவாயின. புதுமையாக அறிஞரால் அமைக்கப்பட்ட பல வகை இயந்திரங்களும் பயன்பட்டன. முன் என்றும் கனவிலும் நினைத்திராத அவ்வளவு வேகமாகப் பிரயாணம் செய்யவும், ஆயிரக்கணக்கான மக்களை ஒரு நொடியில் அழிக்கவும் வேண்டிய வழிகள்

எல்லாம் அமைந்தன. செய்திகள் உலகமெங்கும் விரைவிலே பரவிப் பல நாடுகளையும் போர்க்கெழுப்பின. உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் இப் போரிற் கைகலந்தன. இரண்டு காதங்களுக்கப்பாலிருக்கும் மக்களையும் நூற்றுக்கணக்காகக் கொல்லத்தக்க பெரிய பீரங்கிகளும், இன்னும் மிக்க கொடுமையியற்ற வல்ல இயந்திர பீரங்கிகளும் இந்தப் போரில் முன்னின்றன. ஆகாய விமானங்கள் ஆகாயத்திலிருந்தபடியே குண்டுகளை யெறிய அநேக நகரங்கள் பாழாயின.

இவ்வாறு நிகழ்ந்த அழிவைக்கண்டு பொறுத நன்மக்கள் எல்லாம் மிகவும் மனம் வருந்தினர். இந் நல்லோருள் மிகவும் சிறந்தவராக மதிக்கத்தக்க அமெரிக்க ஐக்கிய மாகாண நாட்டுத் தலைவராயிருந்த உட்ரோ வில்ஸன் என்ற பெரியார், உலக சமாதானத்துக்குரிய சிறந்த வழிகளைப்பற்றி எங்கும் பிரசங்கம் செய்து இனிப் போரே நடவாதிருக்க வழி தேடவேண்டும் என்று கூறினர். அவர் உபதேசங்களின் நன்மையை உணர்ந்த பலரும் ஒன்று சேர்ந்து சர்வதேச சங்கம் என்ற பெரும் பஞ்சாயசபையை நிறுவ வேண்டும் என்று தீர்மானித்தனர். உலகப் பெரும் போரின் முடிவு கண்ட வருஷத்திலே இச் சங்கத்தை அமைக்கும் முயற்சி தொடங்கியது.

முதன் முதலாக இச் சங்கத்திற் சேர்வதாகக் கையொப்பம் இட்ட தேசங்கள் நாற்பத்திரண்டாம். அவற்றுள் நம் நாடாகிய இந்தியாவும் ஒன்ருகும். இப்பொழுது இச் சங்கத்திலே ஐம்பதுக்கு மேற்பட்ட தேசங்கள் சேர்ந்திருக்கின்றன. இத் தேசங்கள் எல்லாம் உலகப் பொது சமாதானத்தின் பொருட்டு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றன. அந்த ஒப்பந்தம், போரால் விளைந்த கெடுதியை நன்கு விளக்கி, உலகம் எங்கும் உள்ள தேசங்கள் அனைத்தும் அன்பு, நம்பிக்கை, பொதுநல நோக்கம் என்ற நெறிகளால் ஒன்றேடொன்று ஒத்துழைக்க முயற்சி செய்ய வேண்டும் என்று தெரிவித்தது.

சர்வ தேச சங்கத்தின் அங்கத்தினராயிருக்கும் எல்லா நாட்டினரும் தமக்குள் ஏதேனும் சச்சரவு நேரிடுமாயின் முதலிலேயே போர்க்கு இறங்கி விடாமல், சச்சரவு நேர்ந்த காரணத்தைச் சங்கத்துக்குத் தெரிவித்து, அமைதி பெற முயல்வதாக வாக்களித்திருக்கின்றனர். முன்னளிலே நாடுகள் எல்லாம் மனமாறுபாடு கொண்டால்

முதலிலே வெருட்டுவதும், இரண்டாவது முறையாகப் போர்க்கு இறங்குவதுமே வழக்கமாய்க் கொண்டிருந்தன.

இரண்டு தேசங்கள் போரில் இறங்கும்போது நியாயம் உள்ள பக்கமே வெற்றி பெறும் என்று நாம் நிச்சயமாய் நம்பமுடியாது. மஞ்சூரியா சம்பந்தமாகச் சீன தேசத்துக்கும் ஜப்பானுக்கும் சமீபத்தில் நேர்ந்த போரிலே ஜப்பானே வென்றது. அந்த வெற்றிக்குக் காரணம் நியாயத்தின் பலம் அன்று. அந் நாட்டின் சைன்ய பலமே யாகும். இவ்வண்ணமே படைபலம் குறைந்த நாடுகளை பலம் மிக்க நாடுகள் வலிவுச் சண்டைக்கிழுத்து அழிக்காமல் இருக்கும் பொருட்டுச் சர்வ தேச சங்கம் தன்னால் இயன்ற வேலைகளைச் செய்து வருகிறது.

சர்வ தேச சங்கத்திலே ஒரு நியாய சபை உண்டு. அந்த நியாய சபையார் இவ்வாறு கிளைக்கும் போர்களைப்பற்றி விசாரித்து நியாயம் வழங்குவர். போர் எழாமல் இருக்க எந்த வழியிலெல்லாம் முயற்சி செய்யலாமோ அவ்வளவும் செய்வர். இதனால் தேசங்களின் சச்சரவுகள் கேவலம் சேனை பலத்தால் முடிவு செய்யப்படாமல், நியாயத்தால் தீர்மானமாகக்கூடிய சௌகர்யம் வாய்த்தது. சர்வ தேச சங்கத்துக்குத் தெரிவித்த பிறகே போர் புரியவேண்டி யிருப்பதால், திடீரென்று போர் தொடங்க வழியுண்டாகாது என்றும் அறியலாம். கோபத்துக்குக் கொஞ்சம் தாமதம் கிடைத்தால் அநேகமாய் அது அடங்கலுமாம்.

முன்னாளிலே இரண்டு தேசங்களுக்குள் யாதேனும் ஒரு விவகாரம் ஏற்படுமானால், அதனை விசாரித்து முடிவுசெய்ய ஒரு நியாயஸ்தலம் இல்லாதிருந்தது. இப்பொழுது இச் சங்கத்தின் சார்பாக ஒரு நிலையான சர்வதேச வழக்கு விசாரணை மன்றம் அமைந்திருக்கின்றது. இந்த நீதி மன்றத்திலே எப்பொழுது வேண்டுமாயினும் அங்கத்தினர் உரிமை யடைந்த எந்த நாடும் வழக்குத் தொடரலாம்.

இச் சங்கத்தில் நடந்துவரும் வேலை யென்னவென்பதை இனிக் கவனிப்போம்: இந்தச் சங்கத்திலே சர்வதேச மகாசபை என்ற பெரிய சபை ஒன்றும், சிறிய பஞ்சாய சபை ஒன்றும் உண்டு. மகா சபையிலே அங்கத்தினர் உரிமைபெற்ற ஒவ்வொரு தேசமும் மும்மூன்று பிரதிநிதிகளை அனுப்பி ஒத்துழைக்கிறது. இம் மகாசபை

வருஷம் ஒரு முறை ஸெப்டெம்பர் மாதத்திலே ஸ்விட்ஸர்லாண்டு நாட்டிலுள்ள ஜினேவா நகரத்திற் கூடுகிறது. இந்தியாவிலிருந்து வருஷந்தோறும் இம் மகாசபைக்குப் பிரதிநிதிகள் போவதுண்டு. இந்தச் சபை ஒரு மாத காலம் நடைபெறும். இதன்கண் பல நாடுகளுக்குமுரிய பொது நல விஷயங்கள் பேசித் தீர்மானிக்கப்படும்.

சிறிய பஞ்சாயத்தார் இம் மகா சபை கூடி நடைபெறாத காலங்களில் எல்லாம், அவசர விஷயங்களை உடனுக்குடன் கூடித் தீர்மானம் செய்யும் உரிமை பெற்றவராவர். இப் பஞ்சாய சங்கம் வருஷத்திற்குப் பலமுறை கூடும். எல்லாத் தேசங்களும் சம்மதித்துத் தமக்குள்ளே சில குறிப்பிட்ட பிரதிநிதிகளை இந்தச் சிறு சபைக்குத் தெரிந்தெடுத்திருப்பர். அவசரம் நேர்ந்தபோதெல்லாம் விரைவிலே வருதற்குச் சௌகரியம் இல்லாத தூர தேசவாசிகள் எல்லாம் இப் பஞ்சாயத்தாரிடம் தம் பொறுப்பை ஒப்பித்துவிடுவர். இப் பஞ்சாயத்தார் முயற்சியால் அநேக சிறு போர்கள் நடவாமல் தடுக்கப்பட்டன.

இந்த சர்வதேச சங்கத்தின் சார்பாக அமைந்த நீதிமன்றம் ஹாலண்டு தேசத்திலே ஹேக் என்ற நகரத்தில் அமைந்துள்ளது. இந்த நீதி மன்றத்தில் பதினொரு நீதிபதிகள் சாசுவத ஸ்தானம் பெற்றவராய் இருக்கின்றனர். இப் பதினொருவரும் வெவ்வேறு நாடுகளிலிருந்து நியமனம் பெற்றவராவர். இவர்கள் தேச தேச விவகார சம்பந்தமான நியாய விஷயங்களை விசாரணை செய்து தக்க முடிவு கூறுவார்கள்.

அன்றியும், ஜினேவா நகரில் பொது சர்வதேசத் தொழிலாளர் நிலயம் ஒன்றும் இருக்கிறது. இந்த நிலயத்தில் சர்வதேசங்களிலுமுள்ள தொழிலாளர்களுக்கு அப்பொழுதப்பொழுது நிகழும் குறைகளை நன்கு விசாரித்துப் பரிகாரம் தேடும் முயற்சியும் மேன்மேலும் நன்மை விளைக்கும் முயற்சியும் நடந்துவருகிறது.

சர்வதேச சங்கம் உலகிலே இனிமேல் பெரும்போர் ஒன்றும் நிகழாதிருக்கவேண்டுவனவாகிய முயற்சிகளைச் செய்வதோடு நின்றுவிடவில்லை. எல்லா நாட்டினரும் வியாபாரம், தொழில், கல்வி, பொதுநலம், அறிவு வளர்ச்சி முதலிய பல துறைகளாலும் ஒருவரோடொருவர் ஒத்துழைக்கவும் ஆவன செய்கின்றது. அறிவு வளர்ச்சிக்காக ஒத்துழைக்கும் பகுதியிலே, நம் நாட்டு அறிஞர் பலர்

அவ்வக்காலங்களிலே சென்று பலதிறப்பட்ட நலம் புரிந்து வந்திருக்கின்றனர். இல்வாறு சென்று புகழ் படைத்தாருள் இப்பொழுது ஆந்திர சர்வ கலாசாலை உப அத்தியக்ஷராய் இருக்கும் டாக்டர் ஸர். எஸ். ராதாகிருஷ்ணன் என்ற அறிஞர் பெயரை உலகம் எல்லாம் அறியும்.

இவ்வாறு பல வழிகளாலும் உலக நலத்துக்கு உழைக்கின்ற இச் சங்கத்தின் வருஷவாரிச் செலவுக்காக ஒவ்வொரு தேசமும் தன் தன் சக்திக்குத் தக்கபடி இவ்வளவு பணம் உதவவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்திய நாடும் இந்தச் சங்கத்தில் தொடக்கத்திலிருந்தே அவயவியாகச் சேர்ந்து தன் பங்காகிய திரவிய சகாயத்தை ஆண்டுதோறும் அளித்து வருகின்றது.

உலகத்திலே போர் என்றதோர் நோய் உள்ளவளவும் பொது ஜன நலம் என்ற சுகம் ஏற்பட இயலாது. உடம்பின் சௌக்கியத்துக்காக மருந்து உதவுவது இருவகையாம். வந்த நோயைப் போக்கவும், நோய் வராமலே காக்கவும் மருந்து உட்கொள்வதுண்டு. உலகப் பெரு நோயாகிய போர் வராமற் காக்கவும், வந்தாலும் உடனே ஒழிக்கவும், உலகம் என்ற உடம்பு தனது பல அங்கங்களும் ஒரே எண்ணத்தோடும் நோக்கத்தோடும் ஒத்துழைக்கும் அமைதியைப் பெற்றிருக்க வேண்டும். ஒரு அங்கம் ஒற்றுமைக்கு மாறாக நின்றாலும் உடம்புக்கே கேடு விளையும். அறிஞர்கள் பலரும் கேவலம் ஒரு நாடு, நகர், ஊர் என்று பிரித்துப் பாராமல் உலகப் பொது நலத்தையே நாடுவாராதலால், உலகம் என்ற உடம்பிலே உள்ள பலவகை அங்கங்களாகிய தேசங்கள் அனைத்தினும் உலகப் போர் என்ற நோயை ஒழிக்கத்தக்க அமைதி என்ற மருந்துக்கு மூலப்பொருளாய் உள்ள அறிவு என்ற மூலிகை வளர வேண்டும் என்பதே நமது பிரார்த்தனையாம்.

## 6. சந்தன மரம்

" சந்தன மென்குறடு தான்றேய்ந்த காலத்தும்
கந்தங் குறைபடாது "

" அரைக்கினுஞ் சந்தனம் தன்மணம் அறாது "

மணம் மிக்க மரங்களில் தலைமை வகிப்பது சந்தன மரமாகும்.

சந்தன மரம் பல்லாயிர ஆண்டுகளாக இந்திய நாட்டிலேயே வளர்ந்து, பிற நாடுகளில் வாழும் அரசரும் செல்வரும் மிக்க விலை கொடுத்துப் பெறும் மணப்பொருளை உதவுவதாம். ஐயாயிர ஆண்டுகளுக்கு முன்னே சந்தன மரம் இந்தியாவிலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி யாகியதைக் குறிக்கும் சரித்திரங்கள் உண்டு. முத்தும், சந்தன மரமும் தமிழ் நாட்டுக்கே உரியவையென்பது தமிழ் நூல்களாலும் அறியப்படும். உஷ்ணம் மிக்க நாடுகளிலே தான் இம் மரம் செழிப்பாய் வளரும். இக் காலத்திலும் இந்தியாவிலே கர்நூல் கடப்பை ஜில்லாக்களிலும், மைசூர் இராஜ்யத்திலும் இது வளர்கின்றது. இம் மரத்தின் உரிமை அரசாங்கத்தாரிடமே இருக்கும். பிறர் இதனைத் தாமாக விற்கவும் வாங்கவும் கூடாது. அரசினரிடமே விலை கொடுத்து வியாபாரிகள் பெற வேண்டும்.

இம்மரம் தேக்கு முதலிய மரங்கள் போன்று உயர்ந்தோங்கி வளர்வதன்று; ஐம்பது வருஷம் வளர்ந்தாலும் இருபது அடி உயரத்துக்குமேல் வளர்வதில்லை. நாற்பது வயதான மரத்தின் அடி மரம் மூன்றடிக்கு மேற்பட்ட சுற்றளவு உள்ளதாய் இராது. இதனால் இம் மரத்தின் வளர்ச்சி மிகவும் தாமதமானது என்று அறியலாம். சந்தனக் கட்டை அதிக கனமுள்ளது; தண்ணீரிலே போட்டதும் மேலே மிதவாமல் அமிழ்ந்துவிடும்; நன்கு வளர்ந்த மரத்தில் அறுத்த ஒரு கன அடி அளவுள்ள கட்டை அறுபது ராத்தல் நிறையிருக்கும். இந்த மரத்தைப் பூச்சிகள் அரிப்பதில்லை. "இரும்புத் தூணைச் செல்லரிக்குமா?" என்பதுபோலச் "சந்தனக் கட்டையைக் கறையான் தின்னுமா?" என்று துணிந்து கூறலாம். நன்கு காப்பாற்றுதற்குரிய பொருள்களைச் சந்தன மரத்தாற் செய்த சிமிழ்களிலும் பெட்டிகளிலும் வைத்துப் போற்றுவது நம் நாட்டு மக்கள் வழக்கமாம்.

சந்தனக் கட்டை மிக்க மணமுடையதாயினும், மரத்தின் மேற்பட்டையும், கிளைகளும், இலைகளும், பூக்களும் பிறவும் மணம் உடையனவல்ல. உள்வயிரமே நாற்பது வருஷங்களுக்கு மேற்பட்டதாயின் மணமுடையதாகின்றது. ஆதலால் இளமரங்களின் கட்டைகளுக்கு மணமில்லை என்று அறியலாம். வேர்ப் பக்கத்தில் உள்ள அடிமரமும், வேரும், மற்றப் பகுதிகளைக் காட்டிலும் அதிக மணமுள்ளனவாய் இருக்கும். எல்லா நாட்டு மரங்களிலும் ஒரே வித மணம் இருக்கும் என்று அறுதியிடலாகாது. அந்தந்த நாடுகளின் சிதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கபடி கட்டையின் மணமும் இருக்கும். நம் நாட்டிலே மைசூர் சந்தனக்கட்டையே மிக்க மணமுள்ளது. இங்நாளிலே சந்தன மரம் புதிதாய்ப் பயிராகின்ற மலேயா தீபகற்பத்திலேயிருந்து நம் நாட்டுக்கு இறக்குமதியாகும் கட்டைகளில் மணம் மிகவும் குறைவாம். மதனபள்ளி, கர்னூல், கடப்பை, மைசூர் ராஜ்யம் ஆகிய இடங்களில் அதிக மழையின்றியும் உரிய காலங்களில் இராக்காலம் தக்கவாறு குளிர்ச்சியாயும் இருத்தலால் சந்தன மரம் நன்கு வளர்கின்றது. மைசூர் மரத்தின் மணத்துக்குப் பிற்பட்டதாகவே மற்றவூர் மரங்களின் வாசனையைக் கூறவேண்டும்.

சந்தன மரம் தோட்டமாகப் பயிரிட்டுப் போற்றத் தக்கதன்று. இது பிற மரங்களின் ஒட்டலிலே பிழைக்கும் மரமாய் இருப்பதால் கள்ளிப் புதர்போல வேலியோரங்களில் வளர விடுதல் நலம் என்பர். கூட்டமாக வளரவிட்டால் நோய் புழு முதலியவற்றாற் பெருஞ் சேதம் விளையும். நல்ல பூசாரம் உள்ள நிலங்களில் எருப்போட்டு வளர வைத்தால் இந்த மரம் பட்டுப்போம். அதிக நீர்ச் சத்து இல்லாத செம்மண் தரைகளிலே காட்டுச் செடிகள் போல் நன்றாய் வளரும். இம் மரத்தைத் தோட்டமாய் பயிரிட்டால் அறுபது வருஷம் பலன் எதிர்பார்த்துக் காத்திருக்கவேண்டும். நிலவரி அந்த அறுபது வருஷங்களிலும் கொடுத்து வந்தால் நிச்சயமாய் மனச் சலிப்பு வந்துவிடும்.

சாதாரணமாய் விதை ஊன்றி, நாற்றுப் பயிராக்கி, நாற்று பிடுங்கி நட்டு இம்மரத்தை வளர்க்கலாம். காடுகளிலே தாமாக வளரும் சிறு களாப்பழம் போன்ற சந்தனப் பழங்கள் தாமாக மரத்திலிருந்து உதிர்ந்து கீழே விழுந்து விதையூன்றி முளைத்துச் செடியாய்

வளர்ந்து விடுவது பெரும்பான்மையாம். நாற்றுக்கள் மைசூர் ராஜ்யத்தில் மலிவாக விற்கப்படுகின்றன. அவற்றை மூன்றடிச் சதுரமும், அவ்வளவே ஆழமும் உள்ள குழிகளில் நடல் வேண்டும். ஒரு செடிக்கும் மற்றொரு செடிக்கும் இடையில் குறைந்தது பதினைந்தடி தூரமாவது இருக்கவேண்டும். வெற்றிலைக் கொடிக்கால்களில் ஆத்தியை முன்னே நட்டுவைப்பதுபோலப், பாற்பிடிப்புள்ள காட்டாமணக்குப் போன்ற செடிகளை, சந்தனச்செடிகளை நடுமுன் நட்டு வைத்தால், அவற்றின் நிழலில் இருந்து வேண்டிய உணவை ஏற்றுக் கொண்டு அவை வளரும். மழைகாலத் தொடக்கத்தில் நாற்று நடுதல் நலமாம். மழை யில்லையாயின் வாரம் இருமுறை நீர் வார்க்க வேண்டும். சில மாதங்களின் பிறகு உதவிச் செடிகளின் துணை கொண்டே வளர்ந்து விடும். இது காட்டு மரமாகையால், விவசாய முறையில் அதிக சிரமம் எடுத்துக்கொள்ளவேண்டா. ஆண்டுக்கு ஒரு முறை கோடைக் காலம் வருமுன் மரத்தைச் சுற்றி சிறிது கொத்தி விடுதல் நலம். அப்பொழுது உதவிச் செடிகளுக்குச் சேதம் வராமற் பாதுகாக்கவேண்டும். இப்படி ஐம்பது அறுபது வருஷம் வளர்ந்த பிறகு இம்மரங்கள் வேரோடு களைந்து பயன் படுத்தப்படும்.

சாதாரணமாய் மேற்சொல்லியவாறு ஐம்பது அறுபது வருஷம் வளர்ந்து முதிர்ந்த மரத்தில் மைசூர் ராஜ்யத்தில் நாற்பது ஐம்பது வீசை சந்தனக் கட்டை கிடைக்கும். மற்ற நாடுகளில் இவ்வளவிற் பாதியே கிடைக்கும். நல்லவேர்ச் சந்தனக் கட்டைகளிலிருந்து நூற்றில் ஏழு பங்கு அத்தர் எடுக்கலாம் எனவும், அடிமரத்தில் ஐந்து பங்கு அகப்படும் எனவும் கூறுவர். சந்தனக் கட்டையை இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி நாடுகளிலுள்ள பெரிய வியாபாரிகள் மிக்க விலை கொடுத்து வாங்கிச்சென்று அத்தர் செய்து நம் நாட்டுக்கே அனுப்பி மிக்க ஊதியம் பெறுகின்றனர். இவ்வுண்மையை அறிந்த மைசூர் அரசாங்கத்தார், இந்தியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் உதவுமாறு சந்தன அத்தர் செய்யும் கைத்தொழிலைத் தம் நாட்டிலே நன்கு நடைபெறுவிக்கின்றனர். மைசூர் ராஜ்யத்திற்குச் சந்தனக்கட்டை, அத்தர் வியாபாரங்களால் வருஷம் ஒன்றுக்கு அரைக்கோடி ரூபாய் வருமானம் வரும்.

சந்தன அத்தர் இறக்குவதற்கு இரண்டு வழிகள் உண்டு. பண்டைக்காலமுதலே நம் நாட்டிலே பழக்கத்தில் இருந்து வரும் முறை

ஒன்றும். புதுமுறையால் இயந்திரங்களைக்கொண்டு இறக்குவது மற்றொன்று. சந்தனக் கட்டைகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, ஒரு பெரிய மட்பாண்டத்தில் இட்டு, அதனோடு வேண்டிய அளவுக்குத் தண்ணீர் ஊற்றி, அடுப்பில் வைத்துக் காய்ச்சித் திராவகம் எடுக்கலாம். இம் முறையிலே பானையின் மேல்மூடியில் ஒரு சிறு துவாரம் அமைத்து, அத் துவாரத்திலிருந்து தாமிரக் குழாய் ஒன்றை அடுத்துள்ள தாமிரப் பாத்திரத்திற் செலுத்துவர். அப் பாத்திரம் அடிக்கடி குளிர்ந்த நீரில் அமிழ்த்தப்படும். பெரிய பானையிலிருந்து எழுந்த சந்தன ஆவி, தாமிர பாத்திரத்தில் வந்து குளிர்ச்சியடைந்து திரவரூபம் அடையும். இப்படியே சிறு நெருப்பில் பத்துநாள் இடைவிடாது காய்ச்சினால் சந்தன அத்தர் கிடைக்கும். இவ்வளவு பாடுபட்டும் நூறு ராத்தல் கட்டைக்கு இரண்டரை ராத்தல் அத்தர்தான் கிடைக்கிறது. புதிய முறையிலே ஏழு ராத்தல் வரையிற் கிடைக்கிறது.

மைசூர் சமஸ்தானத்திலே தற்கால ரஸாயன சாஸ்திர முறைப்படி இயந்திர சக்தியின் உதவியால் அத்தர் சேகரிக்க வேண்டுமென்று தீர்மானித்துச் சென்ற சில ஆண்டுகளாக எடுத்து வருகின்றார்கள். மைசூர் சந்தனத் தைலத் தொழிற்சாலையில் மாதம் ஒன்றுக்கு ஆறாயிரம் ராத்தலுக்கு மேலும் அத்தர் செய்யப்படுகின்றது என்பர். இப்பொழுது புதுவகையான இயந்திரங்கள் கொணர்ந்து வைத்து இருபதினாயிரம் ராத்தல் வரையில் தைலம் இறக்க வேண்டிய சௌகரியங்கள் செய்து வைத்திருக்கிறார்கள்.

நீராவி யந்திரங்களிலே நிறைய நீராவியை உண்டாக்கிச், சந்தனக்கட்டைத் துண்டுகள் இருக்கும் பாத்திரத்திற் சிறு குழாய்களாற் பாய்ச்சி, அத்தர் ஆவி உண்டானதும் எழுந்து வேறு சில குழாய் வழியாக,ஓயாமல் குளிர்ந்த நீர் சுற்றிலும்விழுந்து குளிர்ச்சிபடுத்தும் பெரும் பாத்திரங்களிலே விழச்செய்து, தைல உருவம் அடையச் செய்கின்றனர். இம் முறையிலே குளிர் நீர்க்குழாய்களும், நீராவியும் உஷ்ண சக்தியும் பல நாளைக்கு வேண்டியிருப்பதால், மின்சார சக்திக்கு மிக்க சௌகரியமுள்ள மைசூர் சமஸ்தானத்திலே அச் சக்தியின் உதவியைக் கொண்டே வேண்டுவன எல்லாம் செய்துகொள்கின்றனர். ரஸாயன சாஸ்திரப் பயிற்சி பெற்ற பலர்க்கும் வேறு பல தொழிலாளர்க்கும் இத் தொழிற்சாலையிலே பிழைப்பு

நடக்கின்றது. இந்தத் தொழிற்சாலையில் நூறு ராத்தல் சந்தனக் கட்டையிலிருந்து ஐந்து முதல் ஏழு ராத்தல் வரையில் அத்தர் எடுக்கப்படும். இந்த விபாபாரத்தில் மைசூர் ராஜ்யத்துக்கு நல்ல வருமானம் உண்டு. இங்கிலாந்திலே இந்த அத்தர் ஒரு ராத்தல் மூன்று பவுன் விலை வரையில் விற்கப்படுகின்றது.

சந்தன மரம் மிக்க விலைமதிப்புள்ள மரமாயிருப்பதால் அது நோயின்றி நன்கு வளர்ந்து பலன் தருவதும் அபூர்வமாயிருக்கிறது. சிறிய மரத்தில் சிறிது காயம் பட்டாலும் வளர்ச்சி குன்றி மணம் குறையும். சமீப காலத்திலே இம் மரத்துக்கு ஒரு புதிய நோய் தோன்றி மிக்க நஷ்டம் விளைத்துவிட்டது. இலட்சக் கணக்கான மரங்கள் வீணுக வெட்டியெறியப்பட்டன. தைல சத்து மிகவும் உள்ள மரமாகையால் பச்சை மரங்களும் விரைவிலே பற்றியெறிந்து விடும். ஆகையால் இவை வெகு ஜக்கிரதையாய்ப் போற்றப்பட வேண்டும்.

சந்தனத்தை அரைத்துக் கலவைச் சந்தனமாய்ப் பூசிக்கொள்வது நம் நாட்டிலே தொன்றுதொட்ட வழக்கம். வயிறு நிறைய உண்டவர்கள் சந்தனம் பூசிக்கொள்வதால் உடம்பு குளிர்ச்சியுற்று விரைவிலே உணவு ஜீரணமாகும் என்ற நம்பிக்கை நம் நாட்டிலே உண்டு. பித்த ஜ்வரத்துக்கும் உஷ்ண வியாதிகளுக்கும் சந்தனப் பொடியாற் செய்த கஷாயம் கொடுக்கப்படும். சொரி சிறங்கு முதலிய உடம்பின் சர்ம வியாதிகளுக்குச் சந்தன அத்தர் தடவுதல் நலமாம். சந்தனம் பூசினுல் வேர்க்குரு மறையும் என்பர். உடம்பின் உஷ்ணுதிக்கத்தைத் தணிக்கச் சந்தன சத்தை உள்ளுக்கும் கொடுக்கலாம்; வெளியிலும் உபயோகிக்கலாம். சந்தனப் பொடியை இனிப்பான பொருள்களுடன் கலந்து மூலவியாதிக்கு மருந்தாகக் கொடுப்பதுண்டு. சந்தனுதித் தைலம், சந்தனவடி, சந்தன மாத்திரை, சந்தன லேகியம் முதலிய மருந்துகள் ஆயுர்வேத வைத்திய முறையிலே உடம்பின் குளிர்ச்சிக்கு ஏற்ற மருந்துகள் என்று வழங்குகின்றன. தலைவலி கண்டால் தலையின்மேலும் பொட்டிலும் குழைத்த சந்தனத்தையேனும் சந்தன அத்தரையேனும் தடவினுல், உடனே குணமாகும் என்பது ஆயுள் வேதியர் துணிபு.

---

## 7. அன்புள்ள இடத்தில் அமலன் இருப்பான்

### (டால்ஸ்டாய் சிறு கதை)

ருஷிய தேசத்தில் ஒரு சிறு நகரத்தில் மார்டின் ஆவ்டீச் என்ற பெயர் பூண்ட சக்கிலியன் ஒருவன் வாழ்ந்து இருந்தான். அவன் ஒரு சிறு வீட்டின் அடி நிலத்தில் இருந்த ஒரே பலகணி உள்ளதோர் சிறு அறையில் இருந்துகொண்டு தன் தொழிலை நடத்திவந்தான். அந்தப் பலகணியின் மூலமாக அவன் தெருவிலே போவோர் வருவோரை யெல்லாம் பார்க்கக்கூடும். வீதிப் புறம் பார்த்தால் நடப்போரது பாதங்கள் மாத்திரம் தெரியுமாயினும், மார்டின் அவர்களது பாதரக்ஷைகளைக் கொண்டே அவர்கள் இன்னார் என நிதானிக்கக்கூடியவனாய் இருந்தான். அநேக ஆண்டுகளாக அவன் அந்த இடத்திலேயே வாழ்ந்து வந்தனாகையால், அந் நாட்டிலுள்ள பெரும்பான்மையான ஜனங்களின் பாதரக்ஷைகள் அவனுக்குத் தெரியும். அவனுடைய தொழிற்சாலையில் ஒரு முறை அல்லது இருமுறை செப்பஞ் செய்யப் பெறாத அடி நிலையே அந்நாட்டில் இல்லை யென்னலாம். சில செருப்புக்களுக்கு அடித்தோலும், சிலவற்றுக்கு மேற்றோலும், சிலவற்றுக்கு முன்புறத்தோலும் அவன் புதுமையாகச் செய்து கொடுத்திருப்பான்; கிழிந்தவையாகிய பல சோடுகளைத் தைத்தும் கொடுத்திருப்பான். அதனால் அவன் தன் வீட்டுப் பலகணியின் வழியாக வீதியில் நடக்கும் தன் தொழிற்றிறத்தின் பலனைப் பார்த்து மகிழ்வதுண்டு. அவன் பலர்க்குச் செருப்புத் தைக்கும் தொழிலை மேற்கொண்டான். அவன் உபயோகிக்கும் தோல்கள் நல்லவையாய் நெடுங்காலம் உழைக்கக் கூடியவையாய் இருந்ததாலும், அவன் கேட்ட கூலி அதிகமாய் இல்லாதிருந்ததாலும், எல்லாரும் அவனிடமே வேலை கொடுத்து வந்தனர். அவன் சொல்லை எவரும் நம்புவர். குறித்த காலத்திலே அவன் வேலையை முடித்துக் கொடுத்து விடுவான். சில வேலைகளுக்கு அதிக நாள் ஆகுமென்றறிந்தால், அவன் முன்னதாகவே தெரிவித்து விடுவான். அந் நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் அவனையும் அவன் தொழிற்றிறத்தையும் அறிந்து வேறெங்கும் மாறிப்போய் வேலை கொடுக்க விரும்பாதிருந்தனர். அவன் எப்பொழுதும் யோக்கியமான மனிதனாகவே யிருந்தான்; முதுமைப் பருவம் நெருங்க

நெருங்க ஆத்மார்த்த விஷயங்களை எண்ணவும் தெய்வ சிந்தனை செய்யவும் தொடங்கினன்.

மார்டின் தொழில் பழகும் தொழிலாளியாய் இருக்கும் சிறு பருவத்திலேயே தன் அன்பிற்குரிய மனைவியை இழந்தான். அவள் மூன்று வயதே நிரம்பிய ஒரு சிறுவனை விட்டுச் சென்றாள். முன்பு பிறந்த இரண்டு குழந்தைகள் தாய் இருக்கும்போதே இறந்து விட்டதால், இந்த ஒரு குழந்தையே அவன் அன்புக்குரியனாய் எஞ்சியிருந்தான். முதலிலே மார்டின் தன் மகனைக் கிராமாந்திரத்தில் இருந்த தன் சகோதரி ஒருத்தியிடம் விட்டு வளர்க்கச் செய்யலாம் என்று எண்ணினனாயினும், பிறகு 'என் சிறுவன் அறியாத குடியிலே வளர விரும்பான். ஆகையால் நானே வளர்ப்பேன்' என்று கருதித் தானே வளர்த்தான். தொழில் பழகும் காலம் முடிந்ததும், மார்டின் தன் மகனை அழைத்துக்கொண்டு ஒரு சிறு வீடு அமர்த்தித் தொழில் செய்து வாழ்ந்து வந்தான். மதலையரால் அவன் மனமகிழ்வது கடவுளுக்குச் சம்மதமில்லை போலும். சிறுவன் வளர்ந்து தகப்பன் தொழிலுக்குச் சிறிது சிறிதாக உதவி செய்யத் தொடங்கிய காலத்தில் நோய் வாய்ப்பட்டு ஒருவாரம் ஜ்வரத்தால் வருந்தி இறந்தான்.

மார்டின், அச் சிறுவன் சவத்தைப் புதைத்து விட்டுப் பொறுக்கலாகாத துக்கம் உடையவனானன்; துக்க மிகுதியால் தெய்வத்தைப் பழிக்கவும் தொடங்கினன். அவனுக்கு உலக வாழ்வே வறிதாகத் தோன்றியதால் கிழவனாகிய தன்னை உயிரோடு துயரப்பட விடுத்துச் சிறியவனாகிய தன் குமாரனை அழைத்துக் கொண்டதற்காகக் கடவுளைப் பழித்துத் தன்னையும் கொண்டு போகுமாறு வேண்ட முற்பட்டான். இறுதியில் அவன் வழக்கம் போலத் தேவாலயத்துக்குத் தொழப் போவதை நிறுத்திவிட்டான்.

இவ்வாறு மார்டின் வாழ்ந்து வருகையில், ஒரு நாள் புண்ணிய க்ஷேத்திர யாத்திரைக்காகப் புறப்பட்டு எட்டு வருஷமாக நடந்து வந்த ஒரு கிழக்குடியானவன் அவனைக் கண்டான். மார்டின் அவனிடம் பேசித் தன் துயரத்தைச் சொல்லி வருந்தினன்.

மார்டின் "நான் இனித் தெய்வ சிந்தனை யுள்ளவனாய் உலகில் வாழ விரும்பவில்லை. மரணம் அடையவே விரும்புகிறேன். நான்

கடவுளை வேண்டுவது அதுவே. நன்மை வரும் என்ற நம்பிக்கையை இழந்து, தனித்து வாழும் மனிதன் நான்" என்ருன்.

கிழப் பிரயாணி மார்டினை நோக்கி, "அன்ப, நீ அவ்வாறு கூற லாகாது. கடவுள் செயலைப்பற்றிக் குற்றவாராய்ச்சி செய்ய நமக்கு அதிகாரம் இல்லை. நாம் நமது அறிவைக் கொண்டே யாவும் துணியலாகாது. கடவுள் அருளில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். கடவுள் உன் மகன் இறப்பதும், நீ இருப்பதும் நியாயம் என்று திருவுள்ளங் கொண்டார். ஆகையால் அதுவே தகும். நீ வருந்து வாயாயின் உனது சுகவாழ்வு ஒன்றையே கருதி இவ்வுலகில் வாழ விரும்பினுய் என்று ஆகும்" என்று கூறினன்.

மார்டின் "அங்ஙனமாயின், நான் வேறு எக் காரணத்தின் பொருட்டு உலகில் வாழ வேண்டும்?" என்ருன்.

கிழவன் "கடவுளின் பொருட்டே வாழவேண்டும். ஏனெனில் அவரே உனக்கு வாழ்வைக் கொடுத்தவர். ஆகையால் அவர் செய லின் பூர்த்தியின் பொருட்டாகவே நீ வாழவேண்டும். தெய்வத்தின் பொருட்டு வாழும் தெளிவான புத்தியேற்பட்டதும் துயரம் ஒன் றும் தோன்ருது; கஷ்டங்களைப் பொறுப்பது மிகவும் எளிதாய் விடும்" என்று விளக்கினுன்.

மார்டின் சிறிதுநேரம் மௌனமாயிருந்து பிறகு "ஆனுல், நான் எவ்வண்ணம் கடவுள்பொருட்டு வாழ்வது?" என்று கேட்டான்.

"கிறிஸ்துநாதர் நமக்கு வழி காட்டியிருக்கிருர்" என்றனன் முதியோன். "உனக்கு வாசிக்கத் தெரியுமா? தெரியுமாயின், வேத புஸ்தகம் ஒற்றை வாங்கி வாசித்துப் பார்ப்பாயாக. அதன் கண் எவ்வாறு கடவுளின் பொருட்டு வாழலாம் என்பது விளக்கப் பட்டுள்ளது. அந் நெறியை நீ அதைப் படித்து நன்கு உணரலாம்" என்று உரைத்தான்.

மார்டின் உள்ளத்தில் இச் சொற்கள் உறுதியாய்ப் பதிந்தன. அன்றே அவன் வெளிச் சென்று பெரிய எழுத்தில் அச்சிட்ட ஒரு புதிய வேத புஸ்தகத்தை வாங்கி வந்து வாசிக்கத் தொடங்கினுன். முதலிலே விசேஷ காலங்களில் மாத்திரம் வேத புத்தகத்தை ஓத வேண்டும் என்று கருதினனுயினும், அதை எடுத்துப் படிக்கத் தொடங்கியது முதல், ஒரு நாளேனும் இடைவிடாமல் வாசித்து

வந்தான். விளக்கில் எண்ணெய் இன்றித் திரி கனன்று எரியும் வரையிலும், சில இரவுகளிலே அவன் வேத புஸ்தகத்தை வாசிப்ப துண்டு. இவ்வாறு ஒவ்வொரு நாளும் வாசித்து வந்ததால் அவன் மனக்கவலை குறைந்து அமைதி அடைந்தான்.

அதுமுதல் அவன் வாழ்வின் முறைமையும் மாறியது. முன்னெல்லாம் தேயிலைப் பானத்திலும் சில சமயங்களில் மதுபானத்திலும் மனஞ் செலுத்துவான். இப்பொழுது அவ் விரண்டையும் அறவே ஒழித்துவிட்டான். அதிகாலையில் தொழிற்சாலையில் உட்கார்ந்து பகல் முழுதும் தன் வேலையைச் செய்வான். மேன்மேலும் திரும்பத் திரும்ப வாசித்துக்கொண்டே சென்றதால், அவனுக்கு அவ் வேத புத்தகத்தின் உண்மைப் பொருள்கள் ஒவ்வொன்றாய் விளங்கலாயின. அவன் ஒரு நாள் இரவு நெடு நேரம் வரை வேத நூலைப் படித்துக்கொண்டிருந்தான்; கிறிஸ்துநாதர் மலையிற் செய்த உபதேசத்தை ஊன்றிக் கவனித்தான். அவ்வுபதேசத்திற் சில வாக்கியங்கள் அவன் உள்ளத்தைக் கவர்ந்து உருக்கின.

“ தீமை செய்தார்க்கும் நன்மையே செய்க. ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மற்றொரு கன்னத்தையும் காட்டுக. உட்சட்டையைக் கவர்ந்து சென்றவனுக்கு வெளிச்சட்டையும் கொடுத்துதவுக. கேட்பவர்க் கெல்லாம் கொடுக்க. நின்பொருள்களைக் கவர்ந்து சென்றோனைக் கேளாதொழிக. நினக்கு மற்றவர் யாதுபுரிதல் நலம் என்று எண்ணுகின்றனையோ, அதனையே நீ மற்றவர்க்குச் செய்க.

என்னைத் தேவனே, தேவனே என்று அழைத்துப் புகழ்ந்துகொண்டே நான் சொல்லுவன ஒன்றும் செய்யாதிருப்பது என்? என் அருகில் வந்து நான் சொல்வன கேட்டு அவ் வண்ணமே நடப்பவன் யாருக்கு நிகரானவன் என்று கூறுவேன்! அவன் ஆழமான அஸ்திவாரம் அமைத்து உறுதியான பாறையின் மேற் கட்டிடம் அமைத்துக்கொண்டவன் ஆவான். வெள்ளமும் புயலும் எழுந்தாலும் அவை அவன் கட்டிய வீட்டை அசைக்கவல்லவை யாகா. என் உபதேசங்களைக் கேட்டு அவ்வண்ணம் நடவாதவன் அஸ்திவாரம் இன்றியே வீடு கட்டியவன் ஆவான். சிற்றாறு ஒன்று அதன்மேற் பாய்ந்தாலும் அவ்வீடு நில்லாது. விரைவிலே பாழாய்ப் பெருநஷ்டம் விளையும்.”

இவ் வாக்கியங்களை மார்டின் ஆவ்டீச் நன்கு கவனித்து வாசித்தான்; ஆத்ம சாந்தி பெற்று மூக்குக் கண்ணாடியைக் கழற்றிவைத்துவிட்டுச் சிந்திக்கத் தொடங்கினான்; தன் வாழ்க்கையை அவ் வாக்கியங்களைப் படியாக வைத்து அளந்து பார்க்கத் தொடங்கினான்.

"என்வீடு பாறையின்மேல் அமைந்துளதா? உறுதியில்லாத மணலின் மேல் நிற்கின்றதா? பாறையின்மேல் நிலைத்திருக்குமாயின் நலமே. இங்குத் தனிமையில் நினைத்துப் பார்க்கும்போது எல்லாம் எளிதாகவே தோன்றுகிறது. கடவுள் ஆணைப்படியே நடந்து, அவர் விரும்பியவற்றை யெல்லாம் புரிந்திருப்பதாகவே எண்ணிக்கொண்டு கவலையற்றவனாகிப் பாவவழியில் இறங்கலாமா? இல்லை. இந் நாள் வரை நான் எவ்வளவு புண்ணியஞ் செய்திருப்பினும், என் கடமை யெல்லாம் புரிந்து முடித்திருப்பினும், இனியும் நலம்புரியவே முயல்வேன். அதற்கும், கடவுளே! உமது அருள் வேண்டுவன்" என்று தனக்குட் கூறிக்கொண்டான். பிறகு சிறிது நேரம் தியானம் செய்துவிட்டு வேத புத்தகத்தில் உள்ள சில வரலாறுகளை வாசித்தான். அங்கு ஒரு பகுதியில் "தேவ குமாரர் பெண்பிள்ளை பக்கம் திரும்பினார். ஸைமனைப் பார்த்து, "நீ இப் பெண்மக்களைப் பார்த்தாயா?" என்றார். நான் உனது வீட்டில் நுழைந்தேன். நீ என் காலைக் கழுவவும் நீர் தாராதிருந்தாய். இவளோ தன் கண்ணீரால் என் கால்களைக் கழுவினாள். தனது கூந்தலால் ஈரம் புலர்த்தினாள். நீ என்னை வணங்கி அடியில் விழவில்லை. இவள் என் அடியில் வீழ்ந்து கண்ணில் ஒத்திக்கொண்டாள். என் தலைக்கு நீ எண்ணெய் இடவில்லை. இவளோ என் பாதங்களிலே தைலம் தடவினாள்"—என்று வந்த வாக்கியங்களைப் பார்த்து நெடுநேரம் சிந்தனையில் ஆழ்ந்தான்.

"நானும் அவ்வாறான குற்றம் உடையவனே. என் பசி தாகங்களை நினைத்தே நான் உண்பதும் பருகுவதும் செய்கிறேன். சுகமாகவும் சுத்தமாகவும் வாழவேண்டுமளவு என் அவசிய சௌகரியங்களைத் தேடிக்கொள்கிறேன். விருந்தினரை உபசரிக்க நினைத்ததேயில்லை. ஸைமனும் தன்னைப்பற்றியே கவலை கொண்டவனாயிருந்தான். தேவனே விருந்தினனாக அவன் மனையகம் புகுந்தும் அவன் கவனிக்கவில்லை. அந்த அருள் வள்ளலாகிய தேவன் என் மனைக்கு வந்தால் நான் அவனைக் காட்டிலும் சிறப்பாக வரவேற்பேனோ என்பதே சந்தேகம்."

மார்டின் இவ்வெண்ணத்தோடு தன்னை மறந்து நித்திரை செய்தான்; துயிலின் இடையே "மார்டின்" என்று கூப்பிடும் குரலைக் கேட்டான்; துடித்து எழுந்தான்; "யார் அங்கே?" என்றான்; கதவுப்புறம் திரும்பிப் பார்த்தான்; ஒருவரையும் காணவில்லை; முன்புறம் சாய்ந்தான்; திடீரென்று "மார்டின், மார்டின், நாளை நீ வீதிப்புறம் பார்! நான் உன்னிடம் வருவேன்" என்னும் வார்த்தைகளைக் கேட்டான். கேட்டதும் அவன் தன் ஆசனத்திலிருந்து எழுந்து கண்ணைக் கசக்கிக் கொண்டான். அச் சொற்களைக் கேட்டது கனவோ நனவோ என்ற சந்தேகம் அவன் உள்ளத்தில் எழுந்தது. பின்பு சிறிது சிந்தித்துத் தெளிந்து விளக்கைக் குளிரவைத்துவிட்டு நித்திரை செய்தான்.

மறுநாட் காலையில் சூரியோதயத்துக்கு முன்பே மார்டின் விழித்துக்கொண்டு தேவப் பிரார்த்தனை செய்தான்; பின்பு அடுப்புப் பற்ற வைத்து கீரைக் குழம்பும் பணியாரமும் செய்தான்; பான பாத்திரத்தை அடுப்பில் வைத்துவிட்டுப் பலகணிக்கருகில் தன் வேலையைச் செய்ய உட்கார்ந்தான்; மிகவும் கவனத்தோடு வேலை செய்தானாயினும் அவன் எண்ணமெல்லாம் முதல்நாள் இரவிற் கண்ட காட்சியிலேயே ஆழ்ந்திருந்தது. அந்த வாக்கைக் கேட்டது மயக்கமோ, மெய்யேயோ என்ற சந்தேகம் அவன் உள்ளத்தில் எழுந்தது. உண்மையாகவே இருக்கவேண்டும் என்று கடைசியில் முடிவு செய்தான்.

இப்படி மார்டின் உட்கார்ந்திருக்கையில், வீதியிலே பலர் அங்குமிங்கும் போய்வரக் கண்டான். சிறிது நேரமானதும் பல இடங்களிற் கிழிந்து தைத்த செருப்புடன் கிழவனான ஒரு பழைய போர் வீரன் அவ்வழியில் வந்தான். அவன் பக்கத்துக் கடைக்காரனிடம் வேலைக்கமர்ந்திருப்பதை மார்டின் அறிவான்.

அம் முதியோன், கடையின் வாயிலில் விழுந்திருந்த பனியை மண்வெட்டியால் அப்புறப்படுத்திக் கொண்டிருந்ததை மார்டின் கண்டான். முந்திய நாளிரவு கனவிற்கண்ட காட்சி அவன் நினைவில் வந்தது. சற்று அதைப்பற்றியே சிந்தித்திருந்தான். பின்பு 'இதென்ன அறிவீனம்! நாம் தினந்தோறும் காணும் கிழவன் தான் இவன்? இவனுக்கும் நேற்றிரவில் நாம் கண்ட கனவுக்குமென்ன சம்பந்தம்?' என்று எண்ணியவாறே வேலை செய்யலானான். எனினும் மார்டின் மனம் வேலையில் ஊன்றவில்லை. அவன் மீண்டும் அக்கிழவனை

நோக்கினன்; அவ்வயோதிகன் வேலைசெய்த சிரமத்தால் களைப்புற்று வாயிற்படியில் அமர்ந்திருக்கக் கண்டான். மார்டின் உள்ளத்தில் இரக்கம் குடிகொண்டது. 'பாவம், வயோதிகன்—வேலை செய்து அயர்ச்சியுற்றிருக்கிறான்' என்று கருதி, அவனை யணுகி, "ஐயா, உம்மைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. வாடையில் மெலிந்து காணப்படுகின்றீர். வாரீர் என்னுடன். சிறிது சூடான தேநீர் பருகி வரலாம்" என்று பரிவுடன் அழைத்தான்; அதுகேட்ட முதியவன் உள்ளம் களிகூர "கிறிஸ்துநாதர் உன்னைக் காப்பாற்றுவாராக. நீ ஆற்றவிருக்கும் உதவிக்குக் கைம்மாறு செய்யவல்லார் அக்கடவுளே" என்றுரைத்து, மெல்ல நடந்துவந்து ஓர் இருக்கையில் அமர்ந்தான்.

பிறகு இருவரும் தேயிலைப்பானம் அருந்தத் தொடங்கினர். கிழவன் இரண்டு கோப்பை பருகினான்; சிறிது ரொட்டியும் தின்றான். பின்பு மார்டினும் ஒரு கோப்பை பானம் செய்தான். திரும்பவும் வாயிற்புறம் யாராவது வருகின்றனரா என்று பார்த்தான் மார்டின். அக் கிழவன் மார்டின் அங்ஙனம் எதிர்பார்ப்பதன் காரணத்தை விசாரிக்க, அவன் தான் கண்ட காட்சியை விவரித்தான். அப்பால் மார்டின் மீண்டும் அவ்வயோதிகனுக்கு ஒரு கோப்பை தேநீர் தர, அவன் பருகிவிட்டுத் தன்வழியே ஏகினன்.

அக் கிழவன் வெளியேறிய பின்னர் மார்டின் சிறிதளவு உணவருந்திப், பாத்திரங்களைக் கழுவி வைத்துவிட்டு மீண்டும் தன் வேலையைத் தொடங்கினான். ஆயினும், முந்திய இரவில் அசரீரியாக எழுந்த வாக்கு அவன் உள்ளத்தை விட்டு அப்பொழுதும் அகலவில்லை. அதனால் அவன் பின்னும் சிலர்க்குத்தான் உதவி புரிய நேருமென்று எண்ணிப், பலகணியின் வழியாக வெளியே பார்த்த வண்ணமிருந்தான். அவன் கருதிய சம்பவத்திற்கு ஏற்றவர் எவரும் அவ் வழியே வந்திலர்.

திடீரென்று வெளியே ஒரு குழப்பம் நிகழ்ந்தது. மார்டின் வீட்டுப் பலகணிக்கெதிரில் ஒரு பழக்கூடைக்காரி நின்றாள். அவள் கூடையில் சில பழங்களே எஞ்சியிருந்தன. அநேகமாய் எல்லாவற்றையும் அவள் விற்றிருந்தாள்; முதுகின்மேல் ஒரு சாக்கு நிறைய மரத்தூளைச் சுமந்து வந்தாள்; ஒரு தோள் வலித்ததால், மற்றொரு தோளுக்கு அம் மூட்டையை மாற்றமுயன்றாள். அச் சமயத்தில்

கந்தைகட்டிய சிறுவன் ஒருவன் அவள் கூடையில் இருந்த ஆப்பிள் பழங்களில் ஒன்றை மெல்லத் திருடினன். அவன் ஓடுமுன் அக் கிழவி அவனைப் பிடித்துவிட்டாள். அவன் தப்பியோட முயன்றான். பழக்காரி அவன் குடுமியைப் பிடித்துக்கொண்டு அவனைப் புடைக்க ஆரம்பித்தாள். சிறுவன் அவளை வையத் தொடங்கினன். இதுகண்ட மார்டின் வேகமாய் ஓடி அவ்விருவரையும் பிரித்து விட்டுச் சிறுவனைக் கையிற் பற்றிக்கொண்டு "இவனை விட்டுவிடு, அம்மா ; கிறிஸ்துவின் பொருட்டு இச்சிறுவனை மன்னித்து விடு" என்று வேண்டினன்.

கிழவி, "ஆம், நான் அவனை மன்னிக்கிறேன்! அதிகாரிகள் இடம் சென்று அவன் புதுமையான சாட்டையால் கசையடி வாங் கிய பிறகு மன்னித்துவிடுவேன். அவனை நான் போலீசாரிடம் ஒப்புவிக்கப் போகிறேன்" என்றாள்.

மார்டின் "தாயே, அவனை விட்டுவிடு. இனிமேல் இம் மாதிரி யாகக் குற்றம் செய்யமாட்டான். கிறிஸ்துநாதர் நமக்கு இயற்றிய நன் மையைக் கருதியாவது விடலாம் அம்மா" என்று கூறி மன்றாடினன். பின்பு கிழவி சிறுவனைப் பிடித்த பிடியை விட்டாள். அவன் ஓட முயன்றான். மார்டின் அவனைத் தடுத்து நிறுத்திக், "குழந்தாய், நீ இக் கிழவியிடம் மன்னிப்புக் கேள். இம்மாதிரியான காரியத்தை இனி ஒருபோதும் செய்யாதே. நீ பழத்தைத் திருடியதை நான் பார்த் தேன்" என்றான். சிறுவன் கண்ணீர்விட்டுக் கசிந்துருகி, மார்டின் கூறியபடியே அப் பழக்காரக் கிழவியிடம் மன்னிப்புக் கேட்டான். அச் சமயத்தில் மார்டின் "இதோ இப் பழத்தை உனக்குத் தரு கிறேன். இதை எடுத்துக்கொள். பாட்டி, நான் உனக்கு இதன் விலையைத் தருகிறேன்" என்று கூறிக்கொண்டு ஒரு பழத்தை எடுத் துச் சிறுவன் கையில் கொடுத்தான். அக்கிழவி அதுகண்டு, "நீ இப்படிச் செய்வதால் இந்த துஷ்டப் பையனுக்கு மேலும் கெட்டுப் போக வழிகாட்டுகிறாய். அவனுக்கு ஒருவாரம் வரையில் ஞாபகம் இருக்கக்கூடிய பரிசு கொடுத்திருக்கவேண்டும்" என்று கூறினள்.

அதுகேட்டுப் பொறாத மார்டின் "அம்மே, நாம் பரிசுகொடுக்கும் வழி அப்படியிருக்கலாம். ஆனல் அது கடவுளின் வழி அன்று. இந்தச் சிறுவன் இந்த ஒரு பழம் எடுத்ததற்காகக் கசையடி பட வேண்டும் என்றால், நம்முடைய பாவங்களுக்காக நாமும் தக்கவாறு தண்டனை பெறவேண்டும் என்பது நியாயமன்றோ?" என்றான்.

கிழவி சிறிதுநேரம் மௌனமாய் இருந்தாள். பிறகு மார்டின் அவளுக்குச், சேவகன் ஒருவனது கடன்களை மன்னித்து, விடுதலைச் சீட்டுக் கொடுத்த யஜமானன் ஒருவன் செய்தியையும், அச்சேவகன் அன்றே விரைந்து தனக்குக் கடன் தரவேண்டியிருந்த ஏழை யொருவனை இம்சிக்கச் சென்ற செய்தியையும் விளக்கும் கதையைக் கூறி, அவற்றில் பொதிந்துள்ள தத்துவ உண்மைகளையும் விளக்கினான். கிழவியும் சிறுவனும் அவ் வரலாற்றை கவனித்துக் கேட்டனர்.

பிறகு மார்டின் "மக்களாகிய நாம் பரஸ்பரம் குறை பொறுக்க வேண்டும் என்று கடவுள் ஆணையிட்டிருக்கிறார். அவ்வாறு நாம் செய்யாவிட்டால் அவர் நமது குறைகளைப் பொறுக்கமாட்டார். நாம் எல்லா மக்கள் குறைகளையும் பொறுக்க வேண்டும். விசேஷமாக அறிவில்லா மனிதரது குற்றங்களைப் பொறுப்பது நம் கடமையாம்" என்று கூறினான். கிழவி, "ஆம் அது மெய்யாய் இருக்கலாம். ஆயினும் சிறு பையல்கள் மிகவும் கெட்டுப்போய் விட்டார்கள்" என்றனள். மார்டின் "அவர்கள் கெட்டுப்போனால் திருத்துவது மூத்தவர்களாகிய நமது கடமையே யன்றோ?" என்றான்.

பிறகு கிழவி தன் குழந்தைகளின் குணங்களை விவரித்துவிட்டு "இந்தச் சிறுவனைக் கடவுள் காப்பாராக" என்று கூறி மூட்டையைத் தூக்கப்போனாள். உடனே அச்சிறுவன் முன்வந்து "பாட்டி, நான் இந்த மூட்டையைத் தூக்கிவருகிறேன்" என்று கூறி எடுத்துக்கொண்டு உடன் சென்றான். இருவரும் மார்டினிடம் விடைபெற்று ஏகினர். கிழவி பழத்தின் விலையைக் கேட்க மறந்தாள். மார்டினும் தன்னை மறந்து அக் காட்சியைக் கண்டு மனம் பூரித்தான். பிறகு தன் வீட்டினுட் புகுந்து முன்போலவே வேலையைச் செய்து முடித்து மாலைக் காலமானதும் விளக்கேற்றி வேத புத்தகத்தைத் திறந்தான். முதல் நாள் கண்டதுபோலவே அற்புதக் காட்சி கண்டான். "மார்டின், நீ என்னை அறியவில்லையா!" என்றதோர் குரல் கேட்டது. "யார்" என்று வினவினான். "நான்தான்" என்றது அக்குரல். நன்கு கவனித்தான். தான் உதவிபுரிந்த இருவரும் நேரில் நிற்பதுபோன்ற காட்சியைக் கண்டு உண்மை உணர்ந்தான். "எளியார்க்கு உதவியதால் எனக்கு உதவியவன் ஆனாய்" என்ற வாக்கியத்தை வேத புத்தகத்திற் பார்த்துத் தெளிந்து மனம் பூரித்தான்.

## 8 ஜப்பானும் ஜப்பானியரும்

இந் நாளிலே உலகம் புகழும் நிலையிலுள்ள நாடுகளில் ஜப்பான் தலை சிறந்தது என்று கூறுவது மிகையாகாது. இந்நாடு உருவத்தாற் சிறிதேயாயினும் உரத்தாற் பெரிது. இஃது அமைதிப் பெருங் கடலில் (பஸிபிக் மகா சமுத்திரம்) ஆசியா கண்டத்தின் கீழைக் கரைக்குக் கீழ்பாலுள்ள பல நெருங்கிய தீவுகளாலாகிய தேசமாம். ஜப்பான் என்ற சொல்லுக்கு அந் நாட்டவர் மொழியில் உதய சூரிய தேசம் என்பது பொருள். உண்மைப் பொருளோடு பொருந்திய இப் பெயர், கதிரவன் முதன் முதலாகக் கீழைத் திசையில் உதித்துத் தோன்றும் நாட்டுக் கமைந்தது பொருத்தமேயன்றோ ?

இந் நாடு நிலவுலகில் இக் காலத்திலுள்ள வல்லரசுகளில் ஒன்றாகும். ஆசியா கண்டத்திலுள்ள நாடுகளில் ஒன்றாகிய ஜப்பானுக்கு வல்லரசுப் பட்டம் எவ்வாறு வந்தது என்று நம் உள்ளத்திலே ஒரு அதிசய வுணர்ச்சி எழலாம். இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய நாடுகளுடன் ஒரு நிகராக நம் சகோதர நாடாகிய ஜப்பானும் வைத்தெண்ணப்படுவதற்குக் காரணம், அந் நாடு அத் தகுதியைப் பெறத் தனக்குள்ள உரிமையைத் தனது முன்னேற்றத்தால் வெளியிட்டதேயாகும். எவ்வளவு முன்னேற்றம் பெற்ற நாடாயிருப்பினும், தங்கள் இனத்தார் குடியேறி ஆதிக்கம் பெறாத நாடாயின், ஐரோப்பியர் அதனை எளிதில் வல்லரசு என்று கூற ஒருப்பட்டார். தங்கள் நாகரிகத்தின் மேம்பட்ட நாகரிகம் வேறெங்கும் இராது என்பதே அவர்கள் உள்ளார்ந்த உணர்ச்சியாகும். இத்தகைய உறுதியான கடைப்பிடி பூண்ட நம் மேனாட்டுச் சகோதரர்கள் ஜப்பானையும் தங்கள் இனத்திலே இணைத்துக்கொண்டதற்குக் காரணம் பின் வருமாறு :

சற்றேறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன்னே ஐரோப்பிய வல்லரசுகளில் ஒன்றாகிய ருஷிய நாட்டுக்கும் ஜப்பானுக்கும் பெரும்போர் ஒன்று நிகழ்ந்தது. அதில் மேனாட்டார் யாவரும் அதிசயித்து மூக்கிற் கைவைக்குமாறு மிகச் சிறு நாடாகிய ஜப்பான் மிகப் பெரிய நாடாகிய ருஷியாவை வென்று களங் கொண்டது அந் நாள் முதலே வல்லரசுகள் ஜப்பானோடு உறவு கொண்டாடி, அதனைத் தம் மினத்திற் சேர்த்துக் கொண்டன. ருஷிய நாட்டை வெல்லும் ஆற்றலை ஜப்பானியர் எங்ஙனம் பெற்றனர் ? அதற்குத்

தக்க படைவன்மை அவர்களுக்கு எவ்வண்ணம் கிடைத்தது ? இவ் வினுக்களுக்கு விடையறிய விரும்புவோர் ஜப்பானின் பிற்கால சரித்திரத்தை அறிய முயல்வது அவசியம்.

ஏறக்குறைய அறுபது ஆண்டுகளுக்கு முன்னே ஜப்பானும் மற்றக் கீழ் நாடுகளைப் போலவே இருந்தது. ஆயினும் முன்னேற்றத்துக்குப் பூர்வாங்கமான சில குணங்கள் அந் நாட்டவரிடம் இருந்தன. ஜப்பானியர் குணங்களிற் சிறந்தவை, ராஜபக்தியும் தேசாபிமானமுமாகும். இங்கிலாந்து இக் காலத்திலே உலகத்தில் தலை சிறந்த நாடாக விளங்குவதற்குக் காரணம் கடல் சூழ்ந்து, மரக்கலங்கள் நுழையத் தக்க வண்ணம் கரை பல பக்கங்களிலும் உடைப்புடையதாய் அமைந்திருப்பதேயாம். இங்ஙனமே ஜப்பான் தேசமும் இயற்கை நலம் படைத்திருப்பது வெளிப்படை. பிரிட்டிஷ் தீவுகளும் ஜப்பானிய தீவுகளும் பூமண்டலத்தின் அக்ஷாமிச நிலையில் ஏறக்குறைய ஒரே நிலையில் இருக்கின்றன. இவ்விரு நாடுகளின் சீதோஷ்ண ஸ்திதியும், மலைகள் முதலியவற்றின் இயற்கையமைப்பும் அநேகமாய் ஒத்துள்ளன எனலாம். ஜப்பானியர் இதனையுணர்ந்து தம்மைக் குணதிசை யாங்கிலர் எனவும், தம் நாட்டை பஸிபிக் பிரிடன் எனவும் கூறிக் கொள்கின்றனர்.

நிலப் பரப்பிலும் மக்கட்டொகுதியிலும் மிக்கதாகிய சீன நாடு தம் நாட்டை விழுங்க முயன்று முன் வருமோ என்று உள்ளத்தில் எழுந்த அச்சமே ஜப்பானிய மக்களை ஒன்றுபடச் செய்தது. ருஷியர், ஸைபீரியா நாட்டை வென்று பஸிபிக் சமுத்திரக்கரையில் நின்று கடலில் இறங்கத் துணிந்ததும் ஜப்பானியர் விழித்துக் கொண்டு முன்னேற்றமடைய முயலலாயினர்; ருஷியரைப் போலவே தாமும் படை வன்மையுடையராலன்றி உலகில் வாழ வியலாது என்பதை உணர்ந்தனர்; மேனாட்டவர் எவ்வெத்துறைகளில் முன்னேறி யுள்ளனரோ, அத் துறைகளிலெல்லாம் தாமும் இறங்கி ஊக்கத்தோடு உழைத்து முன்னேற முயன்றனர்.

சிறு மரக்கலங்கள் கொண்டு வலி குன்றியிருந்த தங்கள் நாட்டுக் கப்பற்படையை இக்கால முறைக்கிணங்க எஃகினாலியன்ற நீராவிக் கப்பற் படையாக்கினர். கப்பற் படையின் பெரிய அதிகாரிகளையும், ஊழியர்களையும், மீகாமர்களையும், மேனாட்டு முறைகளிலே நன்கு

பயிற்றினர். ஜப்பானியரது நிலப்படை முன்னுளிலே வாளும் வில்லும் தாங்கிய படைஞரைக் கொண்டதா யிருந்தது; இந் நாளிலோ உலகினர் கண்டு அதிசயிக்கவும், பகைவர் கண்டு நடுங்கவும் தக்க வலி படைத்து, நவீன சாஸ்திரீய முறைகளைத் திறம்படக் கையாளும் பெரும்படையாயுளது. முன்னுளிலே உண்ணுட்டுப்போர்களே மலிந்திருந்த அந் நாட்டில், இந் நாளில் அமைதி குடிகொண்டு நிலவுகின்றது. தேசப் பாதுகாப்பிற்குரிய அதிகாரிகளும், ஊழியர்களும் நிரம்பிய போலீஸ் இலாகா மிக்க பயிற்சி பெற்று வலி சிறந்து விளங்குகின்றது. வழிதுறை யறிய வியலாதிருந்த நாட்டிலே இப்பொழுது எங்கும் இருப்புப் பாதைகள் மலிந்துள்ளன. மின்சார சக்தியால் எண்ணிறந்த காவதங்கள் செய்திகளைப் பரப்பும் பலவகை நூதனக் கருவிகளும் நன்கு அமைக்கப்பெற்றுப் பயன்பட்டு வருகின்றன. பொதுநலச் சேம நிதிகளும், பண்டசாலைகளும், யந்திரத் தொழிற் சாலைகளும் நாடெங்கும் தோன்றி யுள்ளன. பொது மக்களால் தெரிந்தெடுக்கப்பெறும் பிரதிநிதிகள் நிறைந்த பாராளு மன்றமும் அமைந்துள்ளது. நூதன முறையிலே கலைபயிற்றும் பல கலாசாலைகளும், பல நாட்டு மொழிகளையும் நூல்களையும் விஞ்ஞான சாஸ்திரங்களையும் ஆராய்ந்து பயன்படுத்தும் சர்வகலாசாலைகளும் புதுமை மணம் கமழத் தோன்றி யுள்ளன. எண்ணற்ற சமாசாரப் பத்திரிகைகள் எழுந்துலவுகின்றன. இத்தகைய ஆக்கப்பாடுகளும் மாறுபாடுகளும் சென்ற ஐம்பது அறுபது ஆண்டுகளுக்குள் நிகழ்ந்தன வென்று கூறின், நீங்கள் நம்பமாட்டீர்கள். இவை அனைத்தும் உண்மையே யென்றற்குச் சிறிதும் ஐயுறவில்லை. இத்தகைய மாறுபாட்டை ஒரு நாட்டின் வாழ்வில் மிகச் சிறு காலமாகிய அரை நூற்றுண்டினுள் இயற்றவல்ல ஜப்பானியரைக் கண்டு உலகம் ஏன் நடுங்காது? அன்னவர் திறத்தை அறிவுடைய உலகத்தார் போற்றிப் புகழாதிருத்தலும் இயலுமோ?

ஜப்பான் நாட்டில் இயற்கைச் செல்வி எங்கும் அழகுற நடம் புரிவள். அங்குள்ள, குளிர்ந்து தெளிந்த நீர் நிறைந்தோடும் அருவிகளும், பல நிறம் விளங்கப் பாயும் நீர் வீழ்ச்சிகளும், பலநிற மலர்கள் தாங்கிய செடிகளும் கொடிகளும் தழைத்திருக்கும் பள்ளத் தாக்குக்களும், பனிக்கட்டிகளால் மூடுண்ட பெருமலைக் கொடுமுடிகளும் பார்ப்பதற்கு மிகவும் ரமணீயமாய் இருக்கும். அங்கு

பியூஜியாமா வென்னும் எரிமலை யொன்றுண்டு. அதன் காட்சி கண் கொள்ளாக் காட்சியே. அம் மலைச் சிகரத்தை ஜப்பானியர் தேவதை யெனப்போற்றி, அதன் வனப்பில் ஈடுபட்ட உள்ளத்தினராய் ஆண்டு தோறும் எண்ணிறந்த ஆருயிர்களை உவப்போடு பலியிடு கின்றனர். ஆடவரும் பெண்டிரும் கைகோத்துத் தம் அழியா அன் போடு உயர்வாழ்வு பெறக் கருதி அதனுள் வீழ்ந்து உயிரை இழப் பதுண்டு. தம் எண்ணம் நிறைவேறாத பெண்டிரும் ஆண் மக்களும் இளம் பருவத்தினரா யிருந்தும் உலக வாழ்வை வெறுத்து அதன் வாய்ப் புகுகின்றனர். இன்றும் இக் கோரக் காட்சி நடைபெறுகின் றது. பல்லாயிர மக்கள் உயிரைக் குடித்து, இன்னும் பல்லாயிரர் உயிரைக் கொள்ளை கொள்ளக் குதிகொண்டிருக்கும் அம் மலையின் இயற்கைக் காட்சி, அதன் அழகொன்றே காரணமாக அந் நாட்டவர் உள்ளத்தை உருக்கித், தான் புரியும் தீமையை மறந்து மகிழச் செய் கின்றது. இதனாலே ஜப்பானியர் அழகிய இயற்கைக் காட்சிகளில் ஈடுபடும் உள்ளப் பான்மை யுடையார் என்பதை உணரலாம். அவர்கள் துன்பங்கண்டுழி நடுங்காது, நினைத்ததை நிறைவேற்றும் மனவுரனுடையர் என்பதும் இதனாற் புலப்படும்.

ஜப்பானில் எங்கு நோக்கினும் அழகிய தோட்டங்கள் காணப் படும். நகரங்கள் கிராமங்கள் வீடுகள் எல்லாம் தத்தம் அளவுக் கேற்பப் பலநிறப் பூக்களையுடைய மரம் செடி கொடி நிறைந்த தோட்டங்களால் அழகு பெற்று விளங்கும். அந் நாட்டில் வெற் றிடமே காண்பதரிதாம். ஜப்பான் நாட்டிற் புதுமையாகப் புகுந்து வெளிப்படும் அயலவன் ஒருவன் ஒரு பெரும் பூங்காவில் நுழைந்து கண்ணும் மனமும் களித்து வெளிவந்ததாகவே எண்ணுவான்.

ஜப்பானியர் மனையகங்கள், மூங்கில்களாலும் காகிதங்களாலும் அமைக்கப் படுவனவாம். அவ்வாறு அமைப்பதில் பொருட் செலவு அதிகம் ஆகாது. மேலும் எரிமலைகளாலும் பூகம் பங்களாலும் அடிக்கடி பெருந்தீங்கு நேரும். அந் நாட்டில் கற்களாலும் சுண்ணாம்பாலும் வீடுகள் அமைத்து வாழ்வதால் பெரு நஷ்டத்துக் கிடமாகும். பூகம்ப காலத்திலே காகித மனைகளில் வாழ்வோர், கன்மனைகளில் வாழ்வாரைக் காட்டி லும் எளிதில் உயிர் பிழைத்து வெளியேறலாம். இத் தன்மை

யுள்ள வீடுகளுக்கு அதிகச் சேதமும் ஏற்படாது; வெள்ளத்தின் முன் நிற்கும் கோரைபோல ஒரு கணம் தலைசாய்ந்து மறுகணம் நிமிர்ந்துவிடும். இன்னுமொரு நன்மையும் இத்தகைய காகித வீடுகளில் அமைந்துளது. மனையகம் வாழ்வோர் எக் காரணத்தாலேனும் அயலூர்களுக்குச் செல்ல விரும்பினால், தம் வீடுகளையும் சுருட்டி மடக்கிச் சுமந்து செல்லலாம். மனைவி வீட்டுக்குரிய பல வகைச் சிறு பொருள்களை மூட்டையாகக் கட்டி முன்னே சுமந்து செல்லக், கணவன் தன் வீட்டையே பெயர்த்து ஒடுக்கமாய் அமைத்துத் தலையிற் சுமந்து செல்லும் காட்சிகளை இன்றும் ஜப்பான் நாட்டிலே பல இடங்களிற் காணலாம். இவ் வீடுகளைப் பெயர்க்கவும் மறுபடி அமைக்கவும் சில நிமிஷங்களே செல்லும்.

ஜப்பான் தேசத்திலே தீயினால் நேரும் சேதங்கள் அதிகம். ஜப்பானியர் இந்த விஷயத்திலே மிக்க அஜாக்கிரதையாக இருப்பவர் என்றே கூறவேண்டும். அவர்களில் தங்கள் மனையகங்களிலே உபயோகிக்கும் விளக்குகளின் கண்ணாடி நிலையில் காகிதங்களையொட்டி வைப்பதால் மிகவும் எளிதாகவே தீப்பற்றிக்கொண்டு ஏக காலத்தில் பலவூர்கள் இருந்தவிடந் தெரியாவண்ணம் அழிதற்கு ஏதுவாகிறது. இவ்விபத்தால் அதிக நஷ்டம் ஒன்றும் விளையாது. இன்னும் சில மூங்கிற் கழிகளும் காகிதமும் வாங்கி அன்றே மற்றொரு வீடு அமைத்துக் கொள்ளல் எளிது.

அந் நாட்டு வீடுகளிலே நம் நாட்டு வீடுகளில் இருப்பதுபோல அறைகள் இல்லை. பகலிற் பார்த்தால் வீடு முழுதும் ஓரே திறந்த வெளியாய்ப் பெரியதோர் மண்டபம்போல் தோன்றும். வாயில் நன்கு திறந்திருக்குமாதலால் வீதியில் நடப்போர், வீட்டுள் நடக்கும் எல்லாக் காரியங்களையும் நன்கு காணலாம். ஏனெனில், வெளிச்சமும் காற்றும் ஒரு வீட்டிற்குள் எவ்வளவு வரக்கூடுமோ, அவ்வளவும் வருதற்கு வழியமைக்கவேண்டும் என்பதே ஜப்பானியர் துணிபு. இரவிற் பார்ப்போமாயின் இவ்வீடுகளே பகலில் இருந்த தோற்றம் மாறிப் பல அறைகளை யுடையதாய் நாம் கண்டது இதுதானோ, வேறொன்றோ என்று ஐயுறுமாறு வேறுபட்டுவிடும். காகிதத் தடுக்குக்களாலும் தட்டிகளாலும் இவ் வறைகள் அமைக்கப்படுகின்றன. வெயில் அதிகமாயிருக்கும் பகற்காலங்களில் வீட்டின் முன்புறத்தில்

ஒரு திரையைத் தொங்கவிட்டிருப்பர். பன்னிறமுள்ளதாய் அமைந்த இத் திரையில் மனைத்தலைவன் பெயர் வெண்ணிற மையி னால் எழுதப் பெற்றிருக்கும். மனையகத் திருக்கும் பொருள்கள் மிகச் சிலவே. அவையும் குறைந்த விலைக்குப் பெறத்தக்கவையே. தரையிலே எப்பொழுதும் பாய்கள் விரிக்கப்பட்டிருக்கும். இருக் கவும் படுக்கவும் உதவுபவை இப் பாய்களே. பத்து அல்லது பதி னைந்து ரூபாய்ச் செலவிலே ஒரு ஜப்பானியன் புதியதோர் வீடு கட்டிக் குடித்தனத்துக்கு வேண்டிய பாத்திரம் பண்டங்களும் வாங்கி வாழ்க்கை தொடங்கி விடலாம்.

வறியர் செல்வர் என்ற வேறுபாடின்றி எல்லோருடைய வீடு களும் ஒரே மாதிரியாய் இருக்கும். எல்லோரும் மரத்தாலும் பீங் கானாலும் அமைந்த பாத்திரங்களையே உபயோகிப்பர். பாத்திரங்கள் மிகவும் அதிசயமான வேலைப்பாடு அமைந்தவையாய் இருக்கும். வெண்பட்டில் தீட்டப்பெற்ற அழகிய சித்திரங்கள் வீடெங்கும் தொங்கி அழகு செய்து பார்ப்போர் கண்களைக் கவரும். சில செல்வர் அபூர்வமாகப் பொன் வெள்ளிகளாலாகிய சிறு பாத்திரங் களை உபயோகிப்பதும் உண்டு. செல்வர்கள் தமது மனைப்புறத்தே செங்கலாலும் இருப்புத் தகடுகளாலும் சிற்றறையொன்று அமைத்து வைத்திருப்பர். இராக்காலங்களிலே விலையுயர்ந்த பொருள்களை அவ்வறைகளிலே பூட்டி வைத்து வேண்டும்போது எடுத்துக் கொள்வார்கள்.

ஜப்பானியரிடம் மிகவும் அருமையான நற்குணங்கள் பல உண்டு. அவர்களது தேசபக்தி ராஜபக்திகளைப்பற்றி முன்னரே கூறினோம். ஜெர்மனியரைப் போலவே ஜப்பானியரும் சட்டத்துக் கும் அதிகார வரம்புக்கும் அஞ்சி நடப்பவராவர். சிறுவர்கள் மிக வும் இளம்பருவத்திலிருந்தே பெற்றோர்க்கும் பெரியோர்க்கும் அரசி னர்க்கும் அடங்கி நடக்குமாறு கற்பிக்கப்படுகின்றனர். அங்கே போலீசார்க்கு வேலை அதிகம் இல்லை என்றே கூறலாம். ஜப்பானியர், எவரிடமும் மரியாதையாய் நடந்துகொள்ளும் இயல்புடையர். அவ ரது தேசபாஷையிலே நம் நாட்டு வைஷ்ணவ பரிபாஷை போன்ற மரியாதையை வெளியிடும் பல சொற்களைக் காணலாம். தெருக்களிற் குப்பை கூட்டும் சிறு தொழிலாளரும் ஒருவரை யொருவர் காணும்

போது மரியாதையாய் வணங்காமலிரார். அயல் நாட்டவர் ஜப்பானுக்குச் சென்றால் அடையும் மரியாதைக்கும் சிறப்புக்கும் அளவில்லை. அன்னியர் எக்கேடு கெட்டால் நமக்கென்ன என்று தவிக்க விட்டுவிடாமல் வேண்டிய உதவிகள் பலவும் செய்வார்கள்.

ஜப்பானியர் மிக்க சாமர்த்தியமும் புத்திக் கூர்மையும் வாய்ந்தவர் ஆவர்; தமக்கு வேண்டிய அவசியப் பொருள்களையெல்லாம், மூங்கிலாலும் காகிதங்களாலுமே செய்துகொள்வர். வீட்டுச் சுவர்களும், விளக்குகளும் காகிதத்தால் அமைக்கப்படும். சட்டைகளும், கைகுட்டைகளும் காகிதத்தால் செய்யப்படுவனவாம். குடைகளும், தடிகளும், விசிறிகளும் மூங்கிற் சிம்புகளாலும் காகிதங்களாலும் செய்யப்படுகின்றன. நாம் தென்னை மரத்தின் பல்வேறு பாகங்களையும் வீணாக்காமல் உபயோகிப்பதுபோல, ஜப்பானியர் மூங்கிலைப் பயன்படுத்துகின்றனர். அதிலிருந்தே காகிதமும் செய்துகொள்கின்றனர். தூண்களுக்கும் தட்டிகளுக்கும் மூங்கிலே உதவுகிறது. மூங்கில் தழை கூரை வேய உதவுகின்றது. ஒரு பொருளையும் அற்பமாகக் கருதிப் புறக்கணியாமல் பயன்படுத்தும் சிறந்த குணம் ஜப்பானியருக்கு இயல்பாகவே அமைந்திருக்கிறது.

உணவு கொள்வதில் ஜப்பானியர்க்கு விதிவிலக்குகள் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் எதையும் புசிக்கும் இயல்பினர். எந்தப் பிராணியும் அவர்கட்கு உணவாய் உதவும். புத்த மதத்தைத் தழுவிய அவர்கள், இங்ஙனம் வாழ்வது நமக்கு அதிசயம் விளைக்குமாயினும், இது உண்மையே. இந்த உணவுப்பொருள்களையும் சிறிது அழுகித் துர்நாற்றம் வீசத் தொடங்கிய பிறகு மிகவும் விருப்போடு புசிப்பர். ஆயினும் அவர்கள் வழக்கமாய் உண்பது அரிசிச் சோறும் மீனுமே. ஜப்பானில் நெல் மிகுதியாய் விளைவதாலும், சுற்றிலுமுள்ள கடல்களில் மீன்கள் ஏராளமாய் அகப்படுவதாலும் இத்தகைய உணவு அவர்கட்கு அமைந்தது போலும். மூங்கிலின் இளந்தழைகளாலும் அரும்புகளாலும் ஜப்பானியர் ஒரு சிற்றுண்டி செய்வர். அஃது அவர்களுக்கு நம்நாட்டுப் பஞ்சாமிருதம் போன்றிருக்கும். ஜப்பானியர் உணவு புசிக்கும் விதம் ஒரு பெரும் விந்தையே. எதிரிலே ஒரு பீங்கான் தட்டில் பருக்கைகள் ஒன்றோடொன்று ஒட்டாமற் சமைத்த சோறு வைக்கப்பட்டிருக்கும். பக்கத்தலே இரு சிறிய மூங்கிற் சிம்புகள் இருக்கும். உண்பவன்

மண்டியிட்டுட்கார்ந்து, தட்டை இடக்கரத்தில் ஏந்தி, வலக்கரத்தில் மூங்கிற்சிம்புகளைக்கொண்டு ஒரு பருக்கையேனும் கீழே சிதறாமல் உண்பது அதிசயம் விளைக்கும். பழக்கத்தால் எதுதான் இயலாது ?

இளம்பருவத்தே சிறுவரும் சிறுமியரும் ஒரே திறமாக ஆடையணிவர். சிறுவரும் சிறுமியரும் வயதேறியதும் வேறுபாடான உடை உடுப்பர். குழந்தை பிறந்ததும் அதன் நிறமும் அழகும் எந்த மலருக்கு நிகராகும் என்று சிந்தித்துப் பார்த்து அப்பூவின் பெயரை அதற்கிடுவர். பிறகு குழவி ஆடைகள் அணியும் பருவம் அடையும்போது அம்மலரைப் போலவே அணிவிப்பர். தெருக்களிற் குழந்தைகள் நடப்பது பெரும் புஷ்பங்கள் நடமாடுவது போலத் தோன்றும். சிறுவர் சிறுமியர், பெரியோர் கீறிய கீற்றைத் தாண்டாது பணிவோடு நடப்பர் ; தமக்கு ஒரு பொருளின் மேல் எவ்வளவு ஆசை பிறந்தாலும் பெற்றோர் கொடுத்தாலன்றி அதைத் தொடவும் மாட்டார் ; எவ்வளவு துன்பம் நேரினும், உடம்பிற் புண்பட்டு உதிரம் ஒழுகினும் பொறுத்துக் கொண்டு, தீர குணத்தை விளக்குவரே யன்றி, நம் நாட்டுச் சிறுவர் அற்ப விஷயத்திற்கும் பெருங்குரல் இட்டு அழுவது போல அழமாட்டார். இக் குணம் பெரியோரான பிறகு அவர்க்கு எங்ஙனம் உதவும் என்று கூறவும்வேண்டுமோ ? அந்நாட்டவர் இன்று பெரும் படைஞராயிருத்தற்கு இக் குணமே முக்கிய காரணமாம். ஒரு சிறு குழந்தைக்கு நாம் ஏதேனும் சிறியதோர் உதவி செய்தால், அது எவரேனும் தன் ஆற்றலுக்கியன்றளவு கைம்மாறு இயற்றாதிராது.

சிறுவர் பற்பல விளையாட்டுகள் விளையாடுவர். சில விளையாட்டுக்களிற் பெரியோரும் கலந்து கொள்வதுண்டு. எண்பது ஆண்கள் நிறைந்த முதியோன் ஒருவன் எட்டு வயது நிரம்பாத சிறுவனோடு ஒரு நிகராயிருந்து, காற்றாடி விடுதலும் குண்டு விளையாடுதலும் எத்தகைய விந்தையாயிருக்கும் ! பாம்பு மீன் முதலியவற்றைப் போலவும் ஆகாய விமானங்களைப் போலவும் காகிதக் காற்றாடிகள் செய்து பறக்க விடுவதில் ஜப்பானியர் மிக்க திறமை பெற்றவர். காற்றாடிகள் விடுவது பெரிய திருவிழாவைப்போல் நடைபெறும். போட்டிப் பந்தயங்களும் நடப்பதுண்டு.

நீர்ஓடைகள் இருக்குமிடங்களிற் சிறுவர்கள், ஓடுந் தண்ணீரின் வேகத்தால் இயங்கும் நீர்ச்சக்கரங்கள் அமைத்து, அவற்றைக்

கொண்டு பதுமைகள் அமைத்த இயந்திரங்களை ஓட்டி விளையாடு வார்கள். பல நிறமுள்ள மணலைக்கொண்டு நம் நாட்டிலே கோலம் போடுவதுபோல அழகிய சித்திரங்கள் அமைத்தும் சிறுவர் விளையாட்டாய்ப் பொழுது போக்குவதுண்டு. விட்டில்களைப் பிடித்து அவர்கள் மூங்கிற் சிலம்புகளால் ஆகிய கூடுகளில் விட்டு அவை துள்ளிக் குதிக்கும் அழகைப் பார்த்துக் களிப்பார்கள். பத்துப் பன்னிரண்டு பெரு வண்டுகளைப் பிடித்து அவற்றின் உடம்பின் நடுப்பகுதியிலே சிறு நூல்களைக் கட்டிப் பிணைத்துக் காகிதத்தினற் செய்தமைத்த இலேசான சிறிய வண்டிகளை இழுக்கச் செய்வார்கள். சிறுவர்கள் எங் நாட்டிலும் ஒரே மனப்பான்மை யுள்ளவராய் இருக்கின்றனர் என்பது இங்குக் கூறிய செய்திகளால் விளங்கும்.

ஜப்பானியர், தம் நாட்டினிடம் மிக்க அபிமானம் உடையோராவர். எதிர்பாராவண்ணம் திடீரென்று தோன்றி இரண்டொரு வருடங்களின் முன்னே, டோக்கியோ, யோகஹாமா முதலிய நகரங்களில் மிக்க தேசம் உண்டாக்கிய பூகம்பங்களும் அந் நாட்டினர்க்குத் தம் நாட்டினிடம் வெறுப்பை விளைக்கவில்லை. நேற்றுப் பெரு நகரமாய் இருந்தது, இன்று வெறும் பாலையாய்விடக் கூடிய கொடுமையை விளைக்கும் பூகம்பங்களை அடிக்கடி அனுபவிக்கும் அந்நாட்டவர், தம் நாட்டினிடம் தேவதா விசுவாசம்பூண்டு வாழ்கின்றனர். இடையூறு பெரிதாகத் தோன்றுங்கால் அதனை எதிர்த்து நின்று வெல்ல வேண்டுமென்பதே ஒவ்வொரு ஜப்பானியனும் உள்ளத்திற் கருதும் கருத்தாம். கீழை நாடுகளில் ஒன்ருகிய ஜப்பான் தற்கால முறைகளிலே எல்லாத் துறைகளிலும் உயர்வுற்றுக் கல்வியும் செல்வமும் பொலிந்து வாழ்வது இந்தியராகிய நமது முன்னேற்றத்திற்குச் சிறந்த வழிகாட்டியாக உதவும்.

# 9. காங்கேயன் சூளுரை

பாரததேசத்தின் பண்டைய பெருமைகளைப் பல வழிகளாலும் நன்கு விளக்கும் இதிகாச ரத்தினங்கள் இராமாயணம், மகாபாரதம் என்பனவாம். அவற்றுள் அளவாற் பெரிதாய் அமைந்து, பல வரலாறுகளைத் தன்னுள் அடக்கிக்கொண்டு, நம் முன்னோர் வாழ்வின் முறையை ஆடிபோற் காட்டும் பெருமை படைத்த மாபாரத்திலே வருகிற வீரர்களுள், பீஷ்மர் என்பவர் மிக்க புகழ்படைத்தவராவர். இப் பெரியோர் பாரதயுத்த காலத்திலும், அதற்கு முன்னும் பின்னும் தம் வாழ்க்கை முறையால் உலகிற்கு விளக்கிய நல்லொழுக்க நெறிகள் பலவாம். அவர் போரின் பிறகு அர்ஜுனன் அமைத்துக்கொடுத்த அம்புப் படுக்கையில் யோகியாய் அமர்ந்து, பாண்டவர்க்கு உபதேசித்த மொழிகள் எக்காலத்தவரும் மதித்துப் போற்றும் அறநெறி விளக்கமாய் உள்ளன. இவரது வாழ்க்கைச் சரிதையே நம் நாட்டு மக்கள் தருமநெறி வாழ்க்கைக்கு ஒரு பெரிய இலக்கியமாய் அமைந்துள்ளது. இப் புண்ணிய சீலரது இளம் பருவத்தில் நிகழ்ந்த ஓர் அருஞ்செயல் இங்கு விளக்கப்படும்.

இந் நல்லோர் சந்திர வமிசத்து மன்னனாகிய சந்தனு என்ற கோமகனுக்குத் தேவகங்கை யென்ற மங்கையினிட முதித்த மைந்தராவர். பெற்றோர் அமைத்தபடி இளமைப்பருவத்தே வசிட்ட முனிவரிடம் வேதநூற் பொருள்களையும், பரசுராமரிடம் தனுர் வேதத்தைபும் நன்கு பயின்று, அத் துறைகளிலே தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இலராய் விளங்கினர்.

சந்தனு மன்னன் கங்காதேவிக்கு மணவினையின் முன்பு கொடுத்த வாய்மொழி பழுதுபடாவண்ணம், தனது எட்டாம் குமாரனாகத் தோன்றிய காங்கேயனை மிக்க விளம்பருவத்தே பிரிந்தான். கங்காதேவி கணவனைப் பிரிந்தும் மைந்தனை வளர்க்கும் பொறுப்பை யேற்றுக்கொண்டனள். இந்த நிலைமையில் முப்பத்தாறு ஆண்டுகள் சந்தனு மன்னன் தனிமையில் வாழ்ந்தனன். குருகுல வாசத்தாற் கல்விச் செல்வம் நிரம்பப் பெற்ற காங்கேயன், தந்தையைக் காண விழைந்து நகர்க்குத் திரும்பினன். தேவர் விரதத்தைப் பூண்டதால் தேவ விரதன் என்றும் அழைக்கப்பெற்ற அச் செல்வன், தந்தையின் கழல்களை வணங்கி மனம் பூரித்து முன்னின்றனன்.

உணவு தேடச் சென்ற நாகம், தன் மணியை யிழந்து எங்கும் தேடிப் பின்பு அடைந்தால் எத்தகைய மனமகிழ்ச்சி யடையுமோ, அத்தகைய மனமகிழ்ச்சியுற்றுத் தன் சிறுவனைக் கண்ட சந்தனு மன்னன், தன் முன்னோர் சென்ற வழியே செல்லக் கருதிக் குடிமக்கள் உள்ளம் களிகூர அவனுக்கு இளவரசுப்பட்டம் அளித்து மகிழ்ந்தான். பின்னர் நான்கு ஆண்டுகள் குடிமக்கள் குறையின்றி வாழச் சந்தனு செங்கோலோச்சினன். இளவரசனும் நல்லோர் பாராட்டத் தக்க நற்செயல்கள் புரிந்து வாழ்ந்தான்.

இங்ஙனம் அமைதியாய் வாழ்ந்து வருகையில் ஒரு நாள் சந்தனு மன்னன் யமுனை யாற்றுக்கருகிலுள்ள பெருங்காடு ஒன்றில்வேட்டமாடச் சென்றான்; நெடு நேரம் வேட்டையாடிக் களைப்புற்று, யாற்றோரம் செல்லக் கருதித் திரும்பினான். அவ்வழியில் நடக்கும்போது முன்பு ஒரு நாளும் நுகர்ந்தறியாததோர் புதிய நறுமணத்தை நுகர்ந்து அதிசயித்து, அது வந்த திசையை நோக்கி விரைந்து ஏகினான். அவ்வினிய மணம் தோன்றிய காரணத்தை ஆராயக்கருதி முன் சென்றவேந்தன், யாற்றங் கரையைக் குறுகினன். அங்கு ஒரு சிறிய ஓடத்திலே அழகமைந்த உருவமுடைய இளமங்கையொருத்தி பரத்தியர் உடை பூண்டு புன்னகை பூத்த முகத்துடன் அமர்ந்திருந்தாள். அம் மங்கையை நெருங்கிய மன்னன், "இறைவன் படைப்பில் இது ஒரு புதுமையோ ?" என்று சிறுபொழுது அதிசயித்து நின்றான். பின்பு ஒருவாறு மனந்துணிந்து அவளோடு உரையாடத் தொடங்கிப் "பெண்ணே நீ யார்? யார் மகள் ஆவாய்? இங்கு யமுனைக் கரையிலே சிறியதோர் ஓடத்திலே தனித்திருந்து இவ் வேளையில் நீ இயற்றும் அரும்பணி யென்ன ?" என வினவினன். அதற்கவள் "அரசே, யான் இப் பக்கத்தில் வாழும் பரதர் குலத்தலைவன் மகளாவேன். என் தந்தை கட்டளையால் நான் இங்கு வருவோரைக் கரையேற்றும் பணி பூண்டிருக்கிறேன். நீர் நீடூழி வாழ்க" என்று இயம்பினள்.

அவளது இனிய சொற்களாலும் இயற்கை யழகாலும் உடம்பினின்றெழுந்த பரிமள கந்தத்தாலும் மனம் மயங்கிய சந்தனு மன்னன், அவள் தந்தையைப் பார்த்து பேசக் கருதிக் காட்டினுட் சென்றனன் ; அங்கு ஒரு சிறு குடிலில் இருந்த பரதர்தலைவனைக் கண்டு தன் உள்ளக் கருத்தை வெளியிட்டான். அம் முதியோன்

தன்னைக் காண வந்தவன் வேந்தன் என்பதை உணர்ந்து கொண்டு, வணங்கி இனிய சொற்களால் வரவேற்றான். சந்தனு மன்னன் அவனிடம் தன் கருத்தை வெளியிட, அப் பரதர்தலைவன், " அரசே, அடியேனுக்குச் சந்திர வமிச பூபதி யொருவர் மருமகனாக வருதல் பெரும் பாக்கியமே. எம் குலத்தார் உம்மைப் போன்ற அரசருக்குப் பெண் கொடுத்தலைப் பெரும் பேருகவே மதிப்பர். ஆயினும் முதலில் தம்மிடம் யான் ஒன்று கூற விரும்புகின்றேன். மன்னர் மன்ன, என் மக்கள் வயிற்றிற் பிறக்கும் மைந்தனுக்கு உமது அரசுரிமை வருவது உறுதியாய் இருக்குமாயின், நான் உமக்கு அப் பெண்ணை மணம் புரிவிக்க இசைவேன் " என்ருன். சந்தனு மன்னன் இது கேட்டுத் திகைத்து, மனம் வருந்தி, இன்னது செய்வதென்றறியாது காங்கேயன்மேல் வைத்த அன்பின் மிகுதியால் மறுமொழி யொன்றும் கூருது மௌனமாக நகர் நோக்கித் திரும்பினுன்.

நகர் சேர்ந்த மன்னன் உள்ளம் சத்தியவதி யென்ற பரிமள கந்தியை மணக்க எழுந்த ஆசைக்கும் காங்கேயனுக்குத் துரோகம் செய்ய நேரிடுமே என்றெழுந்த துக்கத்துக்கும் இடையில், இருபாற் கவர்வுற்று ஊசலாடி, ஒருபாற் படாது தவித்தது. இந் நிலையிலே தன் மனத்தைப் பறி கொடுத்த மன்னன் அரண்மனையிலே ஒரு தனியறையிலே கவலையே உருவாயமைந்து சோர்ந்து கிடந்தான்.

அவனை அந் நிலையிற் கண்ட காங்கேயன், "தந்தையே, இந் நாட்டு மன்னர் அனைவரும் நமக்கு அடங்கித் திறையளக்கின்றனர். நம்மைப் பகைத்தெதிர்ந்து போர்க்கோலம் பூணும் மனவலி படைத்தோர் எவரும் இலர். குடிமக்களும் ஒருவிதக் குறையுமின்றி மனவமைதியோடு வாழ்கின்றனர். அரண்மனையகத்தும் யான் அறிந்தவளவில் எவ்விதக் குறையும் இல்லை. அங்ஙனமிருக்க என்றும் இல்லாத இப் பெருங்கவலைக்குறி, இன்பமயமான புன்னகை தவழுதற்குரிய நுமது முகத்திலே தோன்றக் காரணம் என்ன ? இத் துயரத்தின் காரணத்தை என்னிடம் கூறலாம் என்று கருதுவீராயின் வாய் மலர்ந்தருள வேண்டுகின்றேன் " என்று வினயத்தோடு கேட்டான்.

சந்தனு மன்னன் அதற்கு மறுமொழி கூறத் தொடங்கிக், "குழந்தாய், நின்னை மகனுகப் பெற்ற எனக்கு மனக்குறை உண்டோ? ஆயினும் சென்ற சில நாட்களாக என் உள்ளத்தில் எழுந்த

ஓர் எண்ணத்தை உன்னிடம் கூறுவதாற் பெரும் பயன் விளையாது என்று அடக்கி வைத்திருந்தேன். இன்று நீயே கேட்பதாற் கூறத் துணிகின்றேன். நமது அருங்குலத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு உரிய பற்றுக்கோடாக இப்பொழுது நீ ஒருவனே இருக்கின்றாய். நீயும் போர்த்தொழிலிலே பெருவிருப்புடையவனாக விளங்குகின்றாய். காங்கேய, உலக வாழ்க்கை நீரிற் குமிழிபோல் நிலையற்றது என்பதை வசிட்ட முனிவர் மாணவனாகிய நினக்கு யான் விளக்கிக் கூற வேண்டா. எவ்வகையிலாவது நின் வாழ்வுக்கு ஊறு நேருமாயின், அன்றே நம் குலம் அழியும். நீயே நூறு புத்திரர்க்குச் சமமான புகழ் படைத்திருக்கின்றாய். ஆயினும் இத்துயர் என் மனத்தை விட்டகல வில்லை. அருமருந்தன்ன செல்வக் குமர, நமது புராதன மரபு என்னோடு அழிந்துபடாதிருக்க வேண்டுமென்பதே என் மனத்தில் எழுந்த வேட்கையாகும். நீ சுத்த வீரனாய் இரும்பினும், இப் பெருங் குலம் விளங்க வந்த ஏகபுத்திரனாய் இருத்தலால், எவ்வமயத்தில் என்ன கேடு விளையுமோ என்ற கவலை என் மனத்தை வாட்டுகின்றது,'' என்று தன் உள்ளக் கருத்தை வெளியிடா துரைத்தனன். இவ்வுரை கேட்ட தேவவிரதன், தந்தையின் உட்கருத்தை உய்த்துணர்ந்து கொண்டு, ''தந்தையே, இறைவன் அருளால் நும் மனத் துயர் விரைவிலே மாறலாம்'' என்று கூறி வெளியே சென்றான். அரண்மனைப் புறத்தே காங்கேயன் தேர்பாகனைக் கண்டு, அரசன் மன மாறுபாட்டுக்குரிய காரணத்தை விசாரித்தறிந்துகொண்டு விரைவிலே தேரேறி மன்னர் பலர் புடைசூழ யமுனையாற்றங்கரை சென்றான். அங்கு அப்பரதர் தலைவனைக் கண்டு, தன் தந்தையின் மனக்குறையை நீங்க வேண்டுவன புரிய முயன்றான்.

பரதர் தலைவன் :—இளவரசே, நேற்று அரசர்பிரான் இங்கு வந்திருந்தனர். தம் கருத்தைத் தெரிவித்தார். அவரது விருப்பம் நிறைவேற யான் கூறிய நிபந்தனையை அறிவீரா ?

காங்கேயன் :—நிபந்தனை யாது ? இங்குள்ளோரும் யானும் அறியுமாறு கூற வேண்டுகிறேன்.

பரதர் தலைவன் :—அரசர் குலக்கொழுந்தே, என் செல்வி அரசச் செல்வத்தில் உரிமை பெறுவது உறுதியாமாயின் நும் தந்தையை மணம் புரிந்து கொள்வாள். இவளுக்குப் பிறக்கும் மகனே உமது தந்தைக்குப் பின் அரசனாதல் வேண்டும். அரசருக்குப் பெண் கொடுக்க எவனேனும் பின்னடைவனோ ? இம் மங்கை

கேவலம் பரதர் குலத்துப் பிறந்தவள் என்று கருதல் வேண்டா. இன்னவள் நமது குலத்தின் மதிப்புக்கும் பெருமைக்கும் ஒரு சிறிதும் குறைபடாத ஒரு அரசமரபிலே பிறந்தவள். யான் இவளை வளர்த்த உரிமையே உடையேன். இவள் தந்தை உபரிசரவசு என்ற மன்னராவர். அவர் நமது தாதையாகிய சந்தனு மன்னரே அவளை மணப்பதற்குத் தகுதியும் உரிமையும் உடையார் என்று என்னிடம் கூறியிருக்கின்ருர். என் மகளது எதிர்கால நல்வாழ்வுக்கு எத்தகைய இடையூறும் இருத்தலாகாது என்பதே என் உள்ளக்கருத்தாம். என் மகளும் அவள் மக்களும் உம் உரிமைக்குப் பகையாய்த்தோன்றியிருப்பதாய் நீர் எண்ணுவீராயின், அவர்களுக்கு என்ன விளையுமோ, அறியேன். ஆகையால் அரசச் செல்வத்திலே உமக்கு உரிமை இருக்குமளவும் யான் என் இளஞ் செல்வியை உமது தந்தைக்கு மணம் புரிவிக்க இசைதற்கில்லை.

காங்கேயன் :—பரதர் தலைவரே, எந்தையார் கருத்து நிறைவேற ஒரு சிறு இடையூறே உளது என்று நும் வாய்மொழியால் அறிகின்றேன். அச்சிறிய இடையூற்றையும் ஒழிக்கும் பொறுப்பு என்னுடையதே. இவ்வுலக வின்பம் நிலையற்றது என்பதைக் குரு மொழியால் அறிந்துளேன். கற்றவழியில் நின்றலன்ருே அறிவுடையோர் கடனுகும்? என் மூதாதையருள் ஒருவராகிய பூரு என்பார் இயற்றிய செயற்கருஞ் செயலைப்பற்றி நீர் கேட்டறிந்த துண்டோ? அவர் தமது தந்தையாகிய யயாதி மன்னர், சுக்கிரன் சாபத்தாற் பெற்ற முதுமையை ஒழித்து, இளம்பருவ வாழ்வை அடையும் வண்ணம் தமது இளமையை உதவி, அவரது முதுமையைப் பெற்றுக் கொண்டார். அதனுல் அவர் பெற்ற புகழும் பெருமையும் இவ்வுலகம் எங்கும் பரவியுள்ளது. அத்தகைய நல்லோர் மரபிலே தோன்றிய யான், என் குலப்பெருமை அழியாது காத்தற் பொருட்டேனும் என் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றக் கடமைப்பட்டவன் ஆவேன். கதிரவன் மரபிலே பிறந்த இராமபிரான், முடியையும் நாட்டையும் இழந்து மரவுரியுடுத்துச் சடைமுடி தரித்துக் காடுநோக்கி நடந்தது தந்தையார் கருத்தென்று மாற்ருந்தாய் கூறியமொழியினுல் அன்ருே? ஆகையால், ஐய, என் கடமையை நெறியறிந்து நிறைவேற்றுவதில் யான் சிறிதும் பின்னிடையேன். அன்பர்களே, அரசர்களே, இப்பாரதர் குல மகள் என் தாயாதற்குள்ள சிறு தடையை யான் ஒழிக்கின்றேன்.

எங்கும் நிறைந்த இறைவனே சான்ருக, நான் உரைக்கும் சூளுரை இதுவாம். இவட்கு இனிப் பிறக்கும் மைந்தனே எங்கள் மரபின் அரசுரிமையைப் பெறுவானுக. யான் அரசச் செல்வத்திலும் நாடாட்சியிலும் எத்தகைய உரிமையையும் கொள்ளேன். யான் என்றும் எப்பொழுதும் நினைந்து போற்றும் தெய்வம் என் மனநிலை உறுதியாய் நிற்கத் துணைபுரிக. இது முக்காலும் சத்தியம். இவ் வுறுதி யுரையினின்று வழுவுவேனுயின், பெற்ருேர்க்குத் தீங்கியற் றும் பாவியரும், தெய்வ நிந்தனை செய்யும் தீயோரும் செல்லும் நரகிற் செல்வேனுக.

பரதர் தலைவன் :—பரதவமிச சிரேட்டரே, இந் நாள்காறும் எவரும் செய்யத் துணிவு கொள்ளாத அருஞ்செயலை இப்பொழுது நீர் செய்ய முன் வந்தீர் என்பது உண்மையே. இதனுல் நமது குலப் பெருமையும் சிறப்புற்று விளங்கும். ஆயினும் என் உள்ளத் தில் எழும் ஒரு சிறு சந்தேகத்தை இங்கே தெரிவிக்க விரும்பு கின்றேன்.

காங்கேயன்:—ஐயம் எதுவாயினும் கூறுமின். என்னுல் அதனை இயலுமளவு போக்குகின்றேன்.

பரதர் தலைவன் .—சத்திய விரதரே, பெண் பெற்றவர்கட்கு உள்ள இயற்கைக் குணத்தால், யான் ஒன்று கேட்கிறேன். நீர் உமது மாற்ருந்தாயின் மகனுக்கு உமது உரிமைகளை மனமுவந்து கையளித்து விட்டீர் என்பது உண்மையே. உமது மக்களும் அவ் வண்ணமே உரிமையை இழந்து, மனம் பொறுத்து அமைந்திருப்பர் என்று எங்ஙனம் உறுதி கூறலாம்? பின்னுளிலே அவர்கள் எதிர்த் துப் போரடிக் கலகம் விளைப்பரோ என்று என் மனம் கவல்கின்றது. இதற்கு யான் என் செய்வேன்?

காங்கேயன்:—ஐய, உமது மகள் எனது தாயாதற்கு எத்துணை இடையூறுகள் இருப்பினும் அவற்றை ஒவ்வொன்ருகக் களைவதே எனது கடப்பாடாகும். ஆதலால் உம் உள்ளத்தில் எழுந்த இச் சிறு சந்தேகத்தையும் போக்குகின்றேன். அரசர்காள், யான் முதலிற் கூறிய சூளுரையைக் கேட்ட நீவிர் இதனையும் கேண்மின். யான் மணம் புரிந்து கொண்டாலன்ருே மகப்பேறு பெறுவேன்? எனக்கு மைந்தர் தோன்றிய பிறகன்ருே இவர் கூறும் இடையூறு நேரும்? அவ்விடையூறு தோன்ருவண்ணம் அதனை வேரோடு களைய உறுதி பூண்டேன். யான் இவர் மனம் அமைதி பெறுமாறு கூறும் சூளுரை

இதுவாம். மறைகள் தேடிய மலர்ப் பதங்களின்மேல் ஆணையிட்டு, "இன்று முதல் யான் நைஷ்டிகப் பிரமசாரியாக வாழ்வேன்" என்று அறுதியிட்டு உரைக்கின்றேன். பெண் மக்களைத் தாய்மார் களாகக் கருதி முக்கரணங்களும் ஒற்றுமைப்படத் தூய்மையான வாழ்வு நடத்துவேன். இவ்வுடம்பில் உயிருள்ளவளவும் கடுமையான பிரமசரிய விரதம் பூண்பேன். இது திண்ணம். இவ் விரதத்துக்கு மாருக யான் நடக்குமாறு தேவரே தூண்டினும் மனம் மாறு படேன். தேவரினும் மேம்பட்டவராக யான் கருதும் பெற்ரேரும் ஆசிரியரும் என் மனவுறுதியைச் சிதைக்க முற்படினும், அவர் ஆணையையும் எதிர்த்துப் போர் புரியவும் துணிவேன். தந்தையர் பொருட்டு இயற்றத் தக்க கடமைகளை முறையுறப் புரிந்த மக்களுள் யானும் ஒருவனுவேன் என்று உலகம் மதிக்குமாயின், அதுவே எனக்குப் பெரும் பேருகும்.

இவ் வமயத்திலே தேவர் பூமாரி பொழிந்து "இவரே பீஷ்மர், இவரே பீஷ்மர்" என்று கூறினர். அன்று முதல் காங்கேயர் பீஷ்ம ரென்றே உலகினராற் கூறப் பெற்றனர். பின்பு பீஷ்மர் சத்திய வதியை நோக்கித், "தாயே, ஏறும் தேரில்; நம் அரண்மனைக்குச் செல்வோம்" என்றனர். அவளும் தந்தையின் அனுமதி பெற்றுப் புறப்பட்டனள். அரசர் முதலோரும் பீஷ்மரை மனமாரப் புகழ்ந்து பின் சென்றனர்.

பீஷ்மர் அரண்மனை யடைந்து மன்னனைக் கண்டு வணங்கி, "எந்தாய், என் தாயை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்ருர். சந்தனு மன்னன், இவ்வருஞ் செயலைக் கண்டு அதிசயித்து,

"தந்தையர்க் குதவும் உதவியின் எனக்குச்
  சதமடங் குதவினை ; நினக்கு
மைந்தருக் குதவும் உதவியிற் சிறிதும்
  மாதவஞ் செய்திலேன் உதவச்
சிந்தையிற் றுறக்கம் வேண்டுமென் றெண்ணிச்
  செல்லுமன் றல்லதுன் னுயிர்மேல்
முந்துறக் காலன் வரப்பெருன்" என்றே
  முடிவிலா வொருவரம் மொழிந்தான்.

பீஷ்மர் இவ் வரத்தின் உதவியாற் பெற்ற பெருமையைப் பாரதம் நன்கு விளக்கிக் கூறுகின்றது.

## 10. ஆகாய விமானம்

இந் நூற்றாண்டில் நாம் காணும் அதிசயங்களுள் ஆகாய விமானமும் ஒன்றும். இது வந்த வரலாற்றை ஆராய்வோம். மேனுட்டாருள் பௌதிக ரசாயன சாஸ்திர ஆராய்ச்சி மிக்க அறிஞர் பலர் சென்ற பல நூற்றாண்டுகளாக ஆகாயத்திற் பறக்கும் ஊர்திகளைச் செய்தமைக்கப் பல்லாற்றானும் முயன்றனர். அவர்களுள், கி. பி. 1214-ஆம் ஆண்டிலே ரோஜர் பேகன் என்ற அறிஞர் ஜலாக்கினி அல்லது அக்கினியாவியை நிரப்பிய மெல்லிய தகடுகளால் ஆகிய பந்துகள் மேலே செல்லும் என்று அறிந்து உலகிற் குணர்த்தினர். பின்னர் ஹென்றி கவெண்டிஷ் என்பார் ஒருவர், தமது சோதனைகளினால் ஜலவாயுவின் சக்தியை உணர்ந்தார். அந்த வாயுவினால் ஆகாயப் பயணத்துக்குப் பேருதவி உண்டு என்பதைச் சிறியதோர் காகிதக் கூண்டின் மூலமாக ஒரு மாணவன் உணர்ந்தான். அவன் முயற்சி பொழுது போக்காக முடிந்தது.

பிறகு பிரான்ஸ் தேசத்திலே லியான்ஸ் நகர்க்கருகில் ஒரு சிறிய நகரில் வாழ்ந்த ஸ்டீபன், ஜோஸப் என்ற இரு சகோதரர் இத்துறையில் மிகவும் முயன்றனர். கவெண்டிஷ் ஆசிரியர் தம் ஆராய்ச்சிகளைப் பற்றி வெளியிட்ட நூலின் பிரதி யொன்றை இச்சகோதரர்கள் கண்டு நன்கு பயின்று தம் சோதனைகளை மேன்மேலும் நடத்தினர். அவ்விருவரும் காற்றினும் புகை இலேசானது என்பதை உணர்ந்து ஒரு பெரிய கூண்டிலே புகையை அடைத்துப் பறக்கவிட்டு, அது விண்ணில் வெகு தூரம் சென்றதை அறிந்து மகிழ்ந்தனர். 1873-ஆம் ஆண்டிலே புகை குறையாதிருக்க அனல் தொட்டி யொன்றைக் கீழே அமைத்து ஒரு பெரிய கூண்டைப் பறக்கவிட்டு அது நெருப்பவிந்ததும் கீழே விழுந்ததைக் கண்டனர்.

அதன்பின் ஜலவாயுவே இம்முயற்சிக்குத் தக்கதென்று பலர் துணிந்தனர். அதனைக் கொண்டும் கூண்டுகள் செய்வித்துப் பறக்கவிட்டுச் சிறிது பலன் பெற்றனர். பின்னாளில் பிலடர் டி ரோஸியர்ஸ் என்பரும் மார்க்விஸ் டி ஆர்லண்ட்ஸ் என்பவரும் அனல் வாயுவின் உதவியால் மேற்செல்லும் கூண்டொன்றை அமைத்துத் தாமும் விண்ணிற் சென்றனர். அக் கூண்டு பாரிஸ் நகரைக் கடந்து விண்ணகத்தே மூவாயிரம் அடி உயரத்திற் பறந்து சென்றது. ஸீன் நதிக்கு மேல பறந்தபோது அக் கூண்டு மெதுவாகக் கீழே

இறங்கி நதியில் விழாமல் தரையை அடைந்ததால், அவ்விருவரும் எவ்வித இடையூறுமின்றி உயிர் பிழைத்தனர்.

அதன் பின்னர் 1785-ஆம் ஆண்டிலே ஒரு அமெரிக்கரும் பிரஞ்சியர் ஒருவரும் ஜலவாயுக் கூண்டொன்றை அமைத்து, டோவரிலிருந்து கலே பட்டணத்திற்கு விண் வீதி வழியே சென்றனர். அதுகண்ட பிலடர் டி ரோவஸியர்ஸ் என்பார் தாமும் அங்ஙனம் செல்லக் கருதி, ஜலவாயுக் கூண்டொன்று அமைத்து, அதனடியிலே தீத்தொட்டி ஒன்றை வைத்து, அதற்கும் கீழே வைத்த தொட்டியில் அமர்ந்து விண்ணிற் சென்றபோது, ஜலவாயு தீப் பற்றிக் கொண்டதால் மூவாயிர அடி உயரத்தில் இருந்து கீழே விழுந்து மாண்டார். இவ்வாறு பலர் வெற்றியும், தோல்வியும், உயிர்ச் சேதமும் அடைந்ததால், ஆகாயக் கூண்டின் அமைப்பிலே பல சீர்திருத்தங்கள் தோன்றின.

முதற்கண் வாயுக்களின் உதவியால் மேலே செல்லும் கூண்டுகள் அபாயமின்றிக் கீழே யிறங்கத்தக்க வழிகளை ஆராய்ந்து அவற்றில் ஒருவாறு வெற்றி பெற்றனர். நாளேற வேறப் பறவைகளைப் போன்ற உருவமுடைய விமானங்களை யமைத்துப் 'பெற்றோல்' எண்ணெயின் உதவியால் விண்ணில் இயங்க முயலலாயினர். சிறுவர் காற்றாடி விண்ணிற் பறக்கும் இயல்பை அறிந்த புத்திமான்கள் சிலர் விண்ணியக்க முறைகளை ஆராயப் புகுந்தனர். காற்றின் வேகம் உள்ள காலத்தில் அதன் உதவியால் விண்ணிலே பறக்கும் காற்றாடிகள், அவ்வுதவி இல்லாத காலத்திலே சிறுவர் விரைவாக முன்புறம் ஓடும் விசையினால் விண்ணில் இயங்குகிறது. விண்ணிற் பறந்த காற்றாடி கீழே இறங்கும்போது மற்றப் பொருள்களைப் போல வேகமாய் விழாமல் மெல்ல வருகிறது. காற்றின் சக்தியே இதற்குக் காரணமாம். பட்டம் போன்ற ஒரு திகந்தமான தட்டு வெகு விரைவாகச் சென்றால் விண்ணிற் பறக்கக்கூடும். இம் முறையை உய்த்துணர்ந்து கர்னல் காடி என்பவர் மனிதனைச் சுமக்கத்தக்க பெரிய பட்டம் ஒன்று அமைத்து இங்கிலீஷ் சானல் என்ற கால்வாயின்மேற் பறந்து சென்றார். பின்னும் சிலர் பறவைகள் பறக்கும் தத்துவத்தைக் கொண்டு புதிய இயந்திரங்கள் அமைத்துப் பறந்து வெற்றி பெற்றனர். அந்நாள் முதலே ஆகாய விமானங்கள் இறகுகளோடு அமைந்தன. இம் முயற்சியிலே அமெரிக்கரும் ஐரோப்பியரும் இறங்கிப் பலதிறப்பட்ட பயன்பெற்றனர்.

பூரண வெற்றி பெற்றவர் வில்பர் ரைட், ஆர்வில்லி ரைட் என்ற பெயர் பூண்ட ரைட் சகோதரரே யாவர்.

ரைட் சகோதரர் ஒரு அச்சியந்திர சாலையிற் கூட்டாளிகளாக இருந்து அதனை நடத்தி வந்ததோடு பைஸைகிள் செய்யும் தொழிலும் மேற்கொண்டிருந்தனர். இவ்விருவரும் ஆகாய விமானம் அமைக்கும் வேலையைத் தங்கள் பொழுது போக்காகக் கொண்டு, முதலில் ஆரம்பித்தனர். அப்புதுத் தொழில்முறையைப்பற்றி வெளி வந்த பல புத்தகங்களையும் பார்த்து, முன்னே முயன்றவர்களுக்கு அவரவர் முயற்சிகளில் நேரிட்ட குறைகளை ஒவ்வொன்றாய் ஒழித்துப் பல சோதனைகளின் பிறகு ஒரு ஆகாய விமானத்தை 1903-ஆம் வருடம் டிசெம்பர் மாதம் 17-ஆம் நாளில் அமைத்து அதில் ஏறிப் பறந்து சென்னர். அதிற் பின்னும் பல சீர்திருத்தங்கள் செய்து மக்கள் எவ்வித அச்சமுமின்றி இவ் விமானங்களின் உதவியால் விண்ணில் இயங்கலாம் என்று முடிவு செய்தனர். அப்பால் அவர்கள் பல நாடுகளுக்கும் சென்று தம் விமானத்தைக் காட்டிப் பல்லோர் புகழும் பேறு பெற்றனர். அந்நாள்முதலே ஆகாய விமானம் நன்கமைந்து சீர்பெறலாயிற்று.

ஆகாய விமானம் விண்ணிற் பறக்கும்போது தூரத்தில் நின்று பார்த்தால், பெரியதோர் பறவை பறப்பது போலவே தோன்றும். அது காற்றிலே எழுந்து உயரப் பறக்க வேண்டியிருத்தலால் இலேசான பொருள்களாலேயே அமைக்கப்பெறல் வேண்டும். ஆகாய விமானங்கள் ஏறக்குறைய இருபத்தைந்தடி நீளம் உடையவையாய் அமையும். அவற்றுக்கு இருபுறமும் நீண்ட சிறகுகள் உண்டு. அவை விமானத்தின் குறுக்கே அமைந்திருக்கும். ஒவ்வொரு சிறகும் சுமார் பதினைன்கடி நீளமும் ஏழடி அகலமும் இருக்கும். சில ஒற்றைச் சிறகுள்ளதாய் அமையும். வேறு சில மேலும் கீழுமாய் அமைந்த இரட்டைச் சிறகுகளைக் கொண்டிருக்கும்.

ஆகாய விமானத்தில் வாலும் சிறகும் நீங்கலாக உள்ள பகுதிக்கு உடல் என்று பெயர் வழங்கும். உடற்பகுதி நீண்ட சதுரமான ஒரு குழாய் போன்றிருக்கும். அதன் நடுப்பாகம் பருத்தும் முன்பகுதியும் பின்பகுதியும் வரவரச் சிறுத்தும் அமைந்திருக்கும். உடலின் முன்புறத்திற் கைகள் போன்ற இரண்டு உறுப்புக்கள் உண்டு. அவை சுழற் கைகள் எனப்படும். அக் கைகளுக்குப் பின்புறத்தில் விமானத்தை ஓட்டுதற்கு வேண்டிய இயந்திரம் அமைந்திருக்கும்.

உடலின் இடைத்தலத்திற் பிரயாணிகள் உட்கார இடம் உண்டு. உடலின் பின்புறத்தில் விமானத்தின் வால் அமைந்திருக்கிறது.

விமானம் ஆகாயத்திற் பறக்குமுன், பூமியிற் சிறிது தூரம் செல்லும். அதற்காகவே இரண்டு சக்கரங்கள் அமைந்திருக்கும். விமானி விமானத்தைச் செலுத்தத் தொடங்கும்போது, அதில் அமைந்திருக்கும் பெற்ரோலினல் மோட்டார் யந்திரத்தை முதலில் இயக்குவான். அதனுல் சுழற் கைகள் மிகவும் வேகமாய்ச் சுழலும். அதன் விசையினுல் விமானம் மேலே கிளம்பும். முதலிலே சிறிது தூரம் பூமியில் விரைவாகச் சென்று பிறகுதான் படிப்படியாக விமானங்கள் ஆகாயத்தில் எழுந்து பறக்கும்.

ஆகாய விமானத்தை உயர்த்தவும் தாழ்த்தவும் திருப்பவும் சில கருவிகள் உண்டு. அவற்றை விமானி எளிதிற் கையாளும் வண்ணம், அவை சம்பந்தமான பிடிகளெல்லாம் விமானி உட்காருமிடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இங்ஙனம் இருப்பதால் விமானி தான் உட்கார்ந்தபடியே விமானத்தை தன் இஷ்டப்படி நடத்த வல்லவனுய் இருக்கிருன். விமானம் மேலே கிளம்பி, இறக்கைகளின் சகாயத்தால் விண்ணில் நிலைபெறுகிறது. பிறகு யந்திர விசையால் வேகமாய்ச் செல்கிறது.

ஆகாயவிமானம் மேலே எவ்வளவு உயரம் வேண்டுமென்ருலும் செல்லும். ஆனுல் விமானிகள் அதனைப் பதினையாயிர அடி உயரத்துக்கு மேற் செலுத்துவதில்லை. ஆகாய விமானம் சாதாரணமாக நூறு மைல் வேகத்திற் பறக்கும். இக் காலத்தில் இரு நூறு மைலுக்கு மேலும் வேகமாகச் செலுத்தப்படுகின்றன. மிகவும் வேகமாய்ச் செல்லும் புகைவண்டியும் மணி யொன்றுக்கு அறுபது மைல் வேகத்தில் ஓடுகிறது. விமானமோ புகைவண்டியின் வேகத்தைப் போல நான்கு மடங்கு வேகத்தில் ஓட வல்லது. புயல், சுழல்காற்று, பெருங் காற்று முதலியவற்ருல் ஆகாய விமானத்துக்கு அபாயம் நேரிடுவதுண்டு. ஆகையால் விமானிகள் தக்க சமயம் பார்த்தே விமானத்தைச் செலுத்த வேண்டும்.

ஆகாய விமானங்களில் இரண்டு வகை உண்டு. ஒன்று தரையில் இறங்கவும் தரையிலிருந்து மேலே கிளம்பவும் தக்கது. இன்னென்று சமுத்திரத்தில் இறங்கவும் அங்கிருந்து மேல் ஏறவும் தக்கது. சில விமானங்கள் மிகச் சிறியவையாய் இருக்கும். அவற்றில் இரண்டு மூன்று பேர்கள் உட்காரலாம். இப்பொழுது உலகிலுள்ள பல நாடுகளுக்கும் ஆகாயவிமானங்களாற் பிரயாணம் நடைபெறுகிறது

இன்னும் சில ஆண்டுகளில் ஆகாய விமானம் சர்வ சாமானியமாய் நாடெங்கும் பரவும்.

இதுவரை கூறிவந்த விமானங்கள் பெற்ரோலின் சக்தியால் ஆகாயத்திற் சஞ்சரிக்கின்றன. நிலத்திலே ஓடுகின்ற மோட்டார் வண்டிகளுக்கும் இந்த எண்ணெயே உதவுகின்றது. ஆனால் புகைவண்டிகள் நீராவியால் ஓடுவதுபோல ஆகாய விமானங்களும் நீராவியால் ஓடலாம் எனவும், அப்படி ஓடும் விமானங்கள், ஆகாயத்திலே இந்நாளில் விமானங்கள் சாதாரணமாய்ப் பறக்கும் உயரத்தைக் காட்டிலும் அதிக உயரத்திலே மிகவும் வேகமாய்ப் பறக்கக் கூடும் என்றும் சமீபத்திலே உலகத்தினர் அறிய நேர்ந்தது. நீராவி விமானத்தின் வரலாற்றைப் பற்றியும் இங்குச் சிறிது விளக்கிக் கூறுவோம்.

ஜ்யார்ஜ் பெஸ்லர், வில்லியம் பெஸ்லர் என்ற சகோதரர் இருவர் 1933-ஆம் ஆண்டிலே இந்தப் புதிய விமானத்தை அமைத்து இதன் உண்மைச் சக்தியை உலகிற்கு விளக்கினர். இச் சகோதரருள் மூத்தவரான ஜ்யார்ஜ் என்பவர் முப்பத்தொரு வயதினர். இவர் பூதத்துவ சாஸ்திர விற்பனராவர். இளையோராகிய வில்லியம் இருபத்தொன்பது வயதினர். இவர் இயந்திரத் தொழிலில் திறமையுள்ளவர். ஆகாயப் பயண முறைகளிலே அபூர்வமான இத் தொழிலில் இவ்விருவரும் 1930-ஆம் வருஷம் முதல் உழைத்து இவ்வாண்டிலேயே வெற்றி பெற்றனர். இவர்கள் இந்திரசாலை யொன்றிலே மூன்று வருடம் நன்கு முயன்று நிறைவேற்றிய தம் விமானத்தைச் சமீப காலத்திலே பறக்கவிட்டு உலகிற்குக் காட்டினர். இந்த விமானத்தில் உள்ள யந்திரம் 150 குதிரை வேகம் விசை தரக்கூடியது; 180 ராத்தல் நிறை உள்ளது.

இவ் விமானம் நீல நிறமாக அமைக்கப்பட்டுளது; நிலத்திலிருந்து விண்ணில் எழும்போது இன்றுவரை நாம் கண்டுள்ள மற்ற விமானங்களைப் போன்று பெருஞ் சப்தம் விளைப்பதில்லை. விமானி, விமானத்திலிருந்த வண்ணம் நிலத்திலிருப்போரோடு பேசக்கூடும். ஆகாயத்தில் இருந்தபடியே மற்ற விமானங்களினால் செய்ய இயலாத பல அற்புத வேலைகளை இவ் விமானம் செய்யவல்லது. சாதாரண விமானங்கள் நிலத்தில் அதிக தூரம் ஓடிய பிறகே விண்ணில் எழுந்து பறக்கும். நீராவி விமானமோ மிகக் குறுகிய இடத்திலேயே விண்ணில் எழவல்லதாம். நூறடிச் சதுரமுள்ள நிலத்திலே இவ் விமானத்தினை விண்ணினின்று யந்திர விசையைக்குறைத்து நிறுத்தலாம்.

இப் புதிய விமானத்திலே நீராவி எழுதற்காகத் தண்ணீரைக் கொதிக்க வைக்கும் பெரிய பாத்திரம் இயந்திரத்துக்கு அருகில் உள்ளது. இந்த நீராவியின் விசையால் வேறெவ்வகையிலும் இயலாத பலவகைச் சௌகரியங்களை இவ் விமானத்தில் அமைத்திருக்கின்றனர். மின்சார சக்தியினுல் இந்த நீராவி யந்திரம் விரைவிலே உஷ்ணம் பெற்று இயங்கத் தொடங்குகிறது. வில்லியம் பெஸ்லர் விமானத்தின் ஆதனத்தில் அமர்ந்து மின்சார விசையைத் தொட்டதும் தீப்பற்றுதற்குரிய பகுதிக்கு எண்ணெயும் வாயுவும் கலந்து செல்கின்றன. இங்கு ஒரு மின்மயப்பொறி இவற்றைத் தீப்பற்றச் செய்து, ஒரு சிறு தீக்கொழுந்தைச் சிறிய குழாய்ச் சுருள்களின் வழியே செலுத்துகிறது. இதன் பின் சில நிமிஷங்களிலே நீராவியின் சக்தி, விமானம் எழத்தக்க நிலையை அடைகிறது. அப்பால் விமானி தன் யந்திரத்தை ஓட்டும் முறைகளைக் கவனிக்கவேண்டும். இந்த இயந்திரச் சுழற்சியால் முன்னுள்ள சுழற் கைகள் ஒரு நிமிஷத்துக்கு ஆயிரத்து அறுநூற்று இருபத்தைந்து முறை சுற்றும். நானூறு மைல் பிரயாணம் செய்வதற்கு இவ் விமானத்திற்கு பத்து காலன் தண்ணீர் வேண்டும் என்று அளந்தறியப்பட்டுள்ளது. இந்த அளவையும் தக்கவாறு யந்திரங்களை அமைப்பதாற் குறைத்துக் கொள்ளலாம் என்று அவ் வியந்திரத்தை ஆக்கியோர் கூறுகின்றனர்.

இவ்வாறு இயங்கும் விமானங்கள் தீயினுல் அழிவெய்த ஏதுவில்லை. மிகச் சுருங்கிய எண்ணெய்ச் செலவுதான் இவ் விமானத்தில் உண்டு. ஆயிர அடிகளுக்கு மேலே பறக்கும்போது நீராவி விமானங்கள் பறவைகளைபோல நிச்சப்தமாகச் செல்லும். போர் புரியுங் காலங்களிலே இத்தகைய விமானங்கள் பகைவர் உளவை அறிய நிச்சப்தமாய் வெகு விரைவிலே செல்ல உதவக்கூடியனவாம்.

நிலத்திலிருந்து ஒருகாத உயரத்துக்கு மேற்பட்ட ஆகாய மண்டலத்திலே பறத்தற்கு இத்தகைய விமானங்களே ஏற்றவையாம். பெற்ருேல் விமானங்கள் மேற் செல்லச்செல்லத் தம் சக்தியை இழக்கின்றன. இவை, மேல் ஏற ஏற அதிகச் சக்தி பெறுகின்றன. இப் புதிய விமானங்கள் இன்னும் என்னென்ன நலம் விளைக்கும் என்பதை எதிர் காலத்தில் அறிவோம். பலர் முயன்றும் வெற்றி பெருத இத்துறையில் சித்தி பெற்ற கலிபோர்னியா நாட்டுச் சகோதரர் நீடுழி வாழ்வாராக.

———

# குறிப்புரை

## செய்யுட் பகுதி

## I. கடவுள் வாழ்த்து

### 1. தேவாரம்

சைவ சமய குரவர்; திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்னும் நால்வராவர்.

இங்குள்ள செய்யுட்களை இயற்றியவர் திருநாவுக்கரசர். அவர் அப்பர், வாகீசர் எனவும் கூறப் பெறுவர். இப் பெரியோர், நடு நாட்டிலே திருவாமூரிலே வேளாளர் குலத்திலே புகழனார்க்கும் மாதினியார்க்கும் குமாரராய் அவதரித்தனர். இளம் பருவத்திலே இவர்க்கு அமைந்த பெயர் மருள் நீக்கியார் என்பது. இவர் சகோதரியார் திலகவதியார் என்பவராவர். பெற்றோரைச் சிறு பருவத்தில் இழந்து திலகவதியாரால் வளர்க்கப் பெற்ற இவர், சமண மதத்திலே சில காலம் சென்று, தருமசேனர் என்ற பெயரோடு தலைமை பூண்டிருந்து; பின்பு கொடிய சூலை நோயால் வருந்தி; அது தீர்க்கும் வழியறியாது, தமக்கையார் தெரிவித்த வண்ணம் சிவபிரானைப் புகழ்ந்து 'கூற்றாயினவாறு' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி நோய் நீக்கப் பெற்றார். அப்பொழுது சிவபெருமான் அருளிய பெயர் நாவுக்கரசர் என்பதாம். அதன்பின் சமண அரசனால் பெரிதும் துன்புற்று, அத் துன்பங்களைச் சிவனருளால் வென்று, சைவத் துறவியாய் எண்பத்தொரு வருடகாலம் வாழ்ந்திருந்து தேவாரப் பதிகங்கள் பாடினார். இப்பெரியோர் வாழ்ந்த காலம், மகேந்திர பல்லவன் காலமாகிய ஏழாம் நூற்றாண்டாகும். திருஞானசம்பந்தர், சிறுத்தொண்டர் முதலிய பெரியோர்கள் இக்காலத்தில் வாழ்ந்தனர்.

அப்பர் அருளிய பதிகங்களில் இந்நாளில் நமக்குக் கிடைத்திருப்பவை, இருநூற்றெழுபத்து நான்காகும். அவை தேவாரத்தில் நான்கு முதல் ஆறு வரையில் உள்ள மூன்று திருமுறைகளாய் வகுக்கப்பட்டுள்ளன. இத் திருமுறைகளுக்கு முன் மூன்று சம்பந்தர் பாடல்கள் கொண்டன. பின்னது சுந்தரர் பாடல்கள் அடங்கியது.

இங்குள்ள செய்யுட்கள் பொது வகையில் அமைந்த கடவுள் துதிச் செய்யுட்களாய்ப் பல பதிகங்களிலிருந்து எடுக்கப்பட்டன. தேவாரம் என்னும் தொடர்மொழி, தே+வாரம், தே+ஆரம் என்று பிரிபடும். வாரம் என்பது இசைப்பாட்டு. தெய்வத்தைப் பாடிய இசைப்பாட்டு எனவும் தெய்வத்துக்குச் சூட்டிய பா மாலை எனவும் இத் தொடர்க்குப் பொருள் கூறலாம்.

1. வாழ்த்த - துதிக்க. மட நெஞ்சு - அறியாமை மிக்க நெஞ்சு. தாழ்த்த - வணங்க. சென்னி - தலை. நெடுங்காலம் வீழ்த்தவா - அநேக பிறவிகளாய்ப் பெற்ற பல வாண்டுகளை வீணாக்கியவாறு என்னே!

2. விறகில் தீ, பாலில் நெய், மணியில் ஒளி மறைந்துள்ளன. அவை உலகவுயிருள் மறைந்தொளிரும் கடவுளுக்கு உவமையாயின. உறவு - பக்தி. உணர்வு - ஞானம். விறகையும், பாலையும், மணியையும் கடைந்தால், முறையே தீயும், நெய்

யும், ஒளியும் தோன்றுகின்றன. அங்ஙனமே, பக்தி ஞானங்களை மத்தும் கயிறுமாகக் கொண்டு கடைந்தால் இறைவன் வெளிப்படுவேன்.

3. வம்-வாருங்கள். கனி உண்ண வல்லீராயின், ஈசன் எனும் கனியை உண்மின். சால - உரிச்சொல்.

4. பருதியான் - சூரிய மண்டலத்தில் மறைந்திருப்பவன். பல்வேறு சமயங்கள் கருதியான் - பல்வேறு மதங்களாலும் தியானிக்கப்பட்ட பொருளாய் உள்ளவன். பிருதி - உருவத்தோற்றம். சுருதி - வேதம்.

5. நித்தல் - தினந்தோறும். அங்கம் ஆறு - வேதாங்கங்கள்; சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தசு, சோதிஷம்.

## 2. பெருமாள் திருமொழி

பெருமாள் திருமொழி என்னும் பிரபந்தம், நாலாயிர திவ்ய பிரபந்தத்திலே, முதலாயிரத்தில் அடங்கியது. இதனை இயற்றியவர், சேர நாட்டரசராய் இருந்த குலசேகர ஆழ்வார். ஆழ்வார் பன்னிருவர். அவர்கள் பாடிய பாடல்கள் நாலாயிரப் பிரபந்தம் எனப்படும்.

குலசேகரர், கோழிக் கோட்டிலிருந்து சேரநாட்டை ஆண்ட அரசர் திருடவிரதர் குமாரர்; இராமபிரானிடம் மிக்க பக்தி உடையவர்; பாகவதர்மீது தேவதா விசுவாசம் உடையவர்; பாகவதர்மீது அடாப்பழி ஒன்று நேரிட்ட காலத்திலே பாம்புக் குடத்திலே கையிட்டுப் பாகவதர் பரிசுத்தர் என்று விளக்கினர். இவர் வடமொழியில் முகுந்த மாலை என்றதோர் தோத்திர நூல் இயற்றியிருக்கின்றார். பெருமாள் பக்தி மிக்கதால் இவர்க்குப் பெருமாள் என்றே சிறப்புப் பெயர் அமைய, அதனால் இவர் பாடிய திருமொழி 'பெருமாள் திருமொழி' எனப்பட்டது. இவர் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டு என்பர்.

வித்துவக்கோடு ஒரு வைஷ்ணவ க்ஷேத்திரம்; மலைநாட்டில் உள்ளது; இடைப்பள்ளி என்னும் வண்டி நிலைக்கு ஒரு காதத்தில் உள்ளது; வித்துவான்கள் கூடி வாழும் இடம் என்பது பொருள்.

1. தருதுயரம் - வினைப் பயனாக வந்த துயரம். சரண்-பாதம்; சரண்-புகல். விரை - மணம். தாய் சினத்தால் அகற்றினும் குழந்தை அவள் அருள் நினைத்தே அழும். யானும் அதுபோல உன் சரணையே நாடி நின்றேன்.

2. காதலன் - நாயகன். கொண்டான் - நாயகன். குலமகள் கணவனையே புகலாகக் கொண்டிருப்பது போல, யான் நின்னையே தெய்வமாகக் கொண்டேன்.

3. நீள் வயல் - வினைத்தொகை. என்பால் -'பால்' ஏழனுருபு. பற்று - பக்தி, தொடர்பு. வேந்தன் கோல் நோக்கிக் குடிவாழும், நான் உன் பற்றே உடையேன்.

4. மருத்துவன் புண்ணை வாளால் அறுத்துச் சுடினும் நோயாளி அவனை வெறுப்பதில்லை. எனக்கு எத்துணையோ உலகத்துயர் தரினும் யான் உன் அடிகளையே நோக்குவேன். காதல் - அன்பு. மாளாத - நீங்காத.

5. களிறு-குவலயாபீடம்; கஞ்சன் வாயிலில் கண்ணனைக் கொல்ல வந்தது. கண்ணன் அதன் கொம்பை ஒடித்தே அதைக் கொன்றான் என்பது வரலாறு. வங்கத்தின் கூம்பு - பாய்மரத்தின் உச்சி.

6. நெருப்பு உஷ்ணம் விளைத்தாலும், தாமரை கதிரோன் முன்னர்த்தான் மலரும். கதிரோன் கிரணங்கள் உஷ்ணத்தையே விளைப்பதாய் இருப்பினும் அவற்றைக் கண்டே தாமரை மலரும். என் துயர் போக்காவிடினும் யான் உன் சீக்கல்லால் வேறொன்றுக்கும் மனம் குழையேன்.

174943

### 3. திருவருட்பா

சென்ற நூற்றுண்டிலே அருட் செல்வராய், வாழ்ந்திருந்த திருவருட் பிரகாச வள்ளலார் என்ற வடலூர் இராமலிங்க சுவாமிகள் இயற்றிய தோத்திரப் பிரபந்தங்கள் திருவருட்பா என்ற பெயர் பெற்றன. மனுமுறை கண்ட வாசகம், சீவ காருண்ய ஒழுக்கம் முதலிய வசன நூல்களையும் இவ்வாசிரியர் இயற்றினர். இவர் பாடல்கள் எளிய நடையில் எவர் மனத்தையும் உருக்கத் தக்கவையாய் அமைந் துள் ளன. பொதுவான தெய்வத் தோத்திரங்களும், சமரசக் கொள்கையைப் போதிக்கும் செய்யுட்களும் இப்பெரியோர் வாக்கிலே பல உள.

1. எய்ப்பு-இளைப்பு, அசக்த நிலை. வைப்பு - செல்வம். துய்ப்பு - அனுபவித்தல். தயாநிதி - தயை என்னும் செல்வம் நிறைந்தவன்.

2. வாழ்வின் தனிமுதல் - வாழ்வுக்கு முதற் காரணன்.

3. இதயம் - உள்ளம். அருட்பெருஞ்சோதி என்ற பெயரால் இப் பெரியோர் கடவுளை அழைத்த பாடல்கள் பலவாம். பதி - நாயகன். பொது - சபை. பொன் புனைமாலை - பொன்னுற் புனைந்த மாலை.

---

## II. நீதிச் செய்யுட்கள்

### 1. திருக்குறள்

திருவள்ளுவர், என்னும் பெரியோர் இந்நூலை இயற்றினர். இவர் வள்ளுவர் குடியினர் என்பர் பலர். இந்நாளிலே ஆராய்ந்த சிலர், அரசரிடம் உயர்ந்த பதவி வகித்திருந்த உயர்குலத்தார் என்பர். இவர் காலம் கி. பி. இரண்டாம் நூற்றண்டுக்கு முந்திய காலமாம். மதம், வைதிக மதம் என்பர். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பகுதிகளை உடையது.

1. தானம் - அறம் புரிதற்குரிய இல் வாழ்க்கை. தவம் - துறவற வாழ்வு. வியன் உலகம் - பேருலகில்.

2. குணமென்னும் குன்றேறி நின்றார் - துறவிகள்.

3. சிவிகை பொறுத்தவன் ஊர்ந்தவனிடை அறத்தாற்றைக் காண்க.

4. பெருந் தக்க - பெருந் தகைமை உடையவை.

5. மழலை, குழலினும் யாழினும் இனிது என்பது கருத்து. கேளாதவர் - எதிர்மறை வினையாலணையும் பெயர்.

6. அவையத்து - சபையில்; பெரியோர் நிறைந்த சபையில்.

7. ஆற்றும்-செய்யும். என் நோற்றான் - என்ன தவம் செய்தான். கொல் - அசைச்சொல்.

8. அகன் - அகம்; இறுதிப்போலி. முகன், முகம் என வருவதும் அதுவே. செய்யாள் - திரு மகள். ஓம்புவான் - உபசரிப்பவன்.

9. காலத்தினுல் - காலத்திலே; உரிய காலத்தில் என்பது கருத்து. மாண - உரிச்சொல்.

10. சமன்-சமம்; போலி. கோல் - துலாக்கோல். அணி - அழகு.

11. விருந்து - விருந்தினர். சாவா மருந்து - அமுதம்.

12. பயன் தூக்கார் - பயனை ஆராயாதவர். தூக்கார் - முற்றெச்சம்.

13. யா - வேறு எந்தப் புலன்களையும்; காவார் - காக்க இயலாதவர், அடக்கக் கூடாதவர் ஆயினும்; நா - நாவினை; காக்க அடக்குக. சோகாப்பர் - சோர்வு அடைவர். இழுக்கு - குற்றம்.

### 2. நாலடியார்

இந் நீதி நூல், கடைச்சங்க காலத்துப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதனைப் பலர் இயற்றினர் என்பர். சமண முனிவர் பலர்

மதுரை நகரிலே சிலகாலம் வாழ்ந்திருந்து, பிறகு வெளியேற நேரிட்டபோது இச்செய்யுட்களை இயற்றிச் சென்றனர் என்று கூறுவர். இந்நூலைப் பதுமனர் தொகுத்தார். இஃது நான்கு அடிகளை யுடைய வெண்பாக்களால் இயன்றதால், 'நாலடி நானூறு' என்றும், 'நாலடியார்' என்றும் சொல்லப்படும்.

1. வைகல் - நாள். ஒல்வ - இயல்வன. கொடாஅது, படாஅ என்பன செய்யுள் ஓசை நிறைக்கவந்த உயிர் அளபெடைகள்.

2. ஏமம் - இன்பம். அவத்தம் - பயனற்ற நிலை.

3. கடை - கடையாயர். நெடுங் கண்ணாய் - மகடூஉ முன்னிலை.

4. ஏழை - இங்கு உலோபி.

5. கல்லாதவன் நாய்க்கு நிகராவன் என்பது.

## 3. பழமொழி

இந்நீதி நூல் கடைச் சங்க காலத்துப் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்ருகும். ஒவ்வொரு செய்யுளிலும் ஒரு பழமொழியின் மூலம் நீதியை விளக்குவதால் இஃது இப்பெயர் பெற்றது. இந்நூலின் ஆசிரியர், பாண்டிய நாட்டின் ஒரு சிறு பகுதியாய் இருந்த முன்றுரை என்ற நாட்டை ஆண்ட அரசராகிய முன்றுறை யரையர் என்பராவர். இப்பெயர் காரணப் பெயர்; இயற்பெயர் வேறு இருந்திருக்கலாம். அது இந்நாளில் அறியப்படவில்லை. இவர் சமண மதத்தினர்.

"பிண்டியி னீழற் பெருமான் அடிவணங்கிப், பண்டைப் பழமொழி நானூறும் - கொண்டினிதா, முன்றுறை மன்னவன் நான்கடியும் செய்தமைத்த, இன்றுறை வெண்பா இவை."

இஃது பழமொழிப் பாயிரச் செய்யுள். இந்நூல் நானூறு வெண்பாக்களால் இயன்றது.

பழமொழி - பண்புத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை; இந்நூற்குக் காரணப் பெயர்.

1. பிழைப்பு - குற்றம். ஆற்ற - பொறுக்க. புனலூர - ஆடூஉ முன்னிலை. 'வாழை இருகால் குலை ஈனுமோ' என்பது பழமொழி.

2. ஆனும் - ஆயினும் என்பதன் விகாரம். தொக்கக்கால் - கூடினால். மா, இரு-உரிச் சொற்கள். மாண்பு ஒருவன் - அறிவினாற் சிறப்புப்பெற்ற ஒருவன். போல்கலார் - போலார். 'போல்' இங்கு வினைப் பகுதி; 'கு' சாரியை; 'அல்' எதிர்மறை இடைநிலை; 'ஆர்' பலர்பால் விகுதி. பாய+இருள் - பாயிருள்; பரவிய இருள். 'பன்மீனும் காய்கலா ஆகும் நிலா' என்பது பழமொழி.

3. 'பரிசழிந்தாரோடு தேவரும் ஆற்றல் இலர்' என்பது பழமொழி.

4. கழி - உரிச்சொல். வளநாட - ஆடூஉமுன்னிலை. 'தமர் இல்லார்க்கு நகரமும் காடுபோலும்' என்பது பழமொழி. தமரை 'ஐ' சாரியை.

5. கரிகாற் சோழன், இரண்டு முதுமக்களுக்கு நரைமுடித்து வழக்குத் தீர்த்த வரலாற்றை இச்செய்யுள் கூறுகிறது. 'குலவிச்சை கல்லாமற் பாகம் படும்' என்பது பழமொழி.

## 4. அறநெறிச்சாரம்

தரும மார்க்கத்தின் சாரமாக உள்ள நீதிகளைத் தெரிவிக்கும் நூல். இஃது திருமுனைப்பாடி நாட்டில் வாழ்ந்த காரணத்தால் முனைப்பாடியார் என்ற பெயர்பூண்டிருந்த சமணர் ஒருவரால் இயற்றப் பெற்றது; சுமார் எழுநூறு ஆண்டுகளுக்குமுன் தோன்றியது. சமணமத உட்கருத்துக்களை நன்கு விளக்குவது.

1. உப்புக் குவடு - உப்பு மேடு; குன்று மிசை - எழனுருபு. நன்மை தொடங்குதல், இட்டுண்ணுதலுக்கு நிகர் எனப்பட்டது.

2. இறந்த - சென்ற. வினை - புண்ணிய பாவ கருமங்கள்.

3. துறக்கம் திறப்பதோர் தாள் வீட்டின் நெறியைத் திறக்க வுதவும் ஒரு திறவுகோல்.

4. சான்றோர் - புகழ்வது போலப் பழித்தல்.

5. அறி வென்னும் நீர் - உருவகம்; இச் செய்யுளில் முற்பகுதி உவமையும் பிற்பகுதி உருவகமும் கொண்டன.

## 5. நீதிநெறி விளக்கம்

நீதிநெறியை விளக்கும் நூல். இதனை இயற்றியார் திருமலை நாயக்கர் ஆதரவு பெற்ற குமர குருபர சுவாமிகள். இவர் பல மொழிகளில் வல்லவர்; காசியிலே ஒரு மடங்கட்டித் தருமம் செய்தவர்; ஐந்து வயது வரை ஊமையாய் இருந்து திருச்செந்தூர் முருகன் அருளாற் கந்தர் கலி வெண்பாப் பாடி, அருள்வாக்குப் பெற்றவர்; சகல கலாவல்லி மாலை என்ற கலைமகள் துதி பாடி இந்துஸ்தானி பாஷையைத் தாமாக அறிந்துகொண்டவர். ஒருநாள், திருமலை நாயக்கர் ராஜ்யகாரியத்திலே நெடுநேரம் மனம் செலுத்தி மாலைக் காலம் வரையில் உணவு இன்றி இருக்க நேரிட்டபோது, இப்பெரியோர், திருவள்ளுவர் அருளிய 'வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி, தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது' என்ற குறளைக் கூறினர். அரசர் அது கேட்டு மகிழ்ந்து, அத் திருக்குறளுக்கு வழி நூலாகச் சுருக்கமாக ஒரு நூல் இயற்றவேண்ட 'நீதிநெறி விளக்கம்' இயற்றினர்.

1. முகத்தது - முகத்தில் உள்ளது; இங்கு நாவினைக் குறிக்கும். முகம் வடமொழியிலே வாயைக் குறிப்பது; ஆகு பெயர். மலரவன் - தாமரை மலரில் வாழும் பிரமதேவன். வண்டமிழோர் - வளம் பொருந்திய தமிழ்ப் புலமை படைத்த பெரியோர்கள். வெற்றுடம்பு - பயனற்ற உடம்பு. வெறுமை - பயன் இன்மை. புகழ்கொண்டு இவர் செய்யும் உடம்பு - புலவர் புகழ் உடம்பு.

2. ஊழ் - விதி. ஒற்கம் - வெட்கம். புல்லுரு - புல்லால் அமைத்துப் பறவைகளை அச்சுறுத்தத் தோட்டங்களில் வைக்கும் ஆளுருவம்.

3. அம மா—இடைச்சொல். கருத்து அழிக - மனம் வருந்துக.

4. ஆக்கம் - கல்வி, செல்வங்கள். மீச்செலவு-மேற்செல்லுதல். தாழ்பலர்பால் வினை, எதிர்காலம்; (உவமையணி).

5. ஆக்கம் - வாழ்வின் உயர்ச்சி. நா இன்புற நக்கிக்கொல்லும் காட்டுப்பசு, இங்கு நல்லன போலத் தோன்றித் தீமையாய் முடியும் செயல்களுக்கு உவமையாக்கப் பட்டது.

---

## III. தனிச் செய்யுட்கள்

இவை பல புலவர்கள் பல சந்தர்ப்பங்களிலே பாடிய தனிப்பாடற்றிரட்டிலிருந்து எடுக்கப்பட்டன.

1. கனகதண்டி - பொற்சிவிகை.

2. சேடன் - நஞ்சு கொண்ட பாம்புக்கு நிகராயவன்.

3. எழிற்கோ - நன்னன் என்பான்.

4. கல்வி, வீரம், வெற்றி, மக்கட்பேறு, மனத்துணிவு, செல்வம், தானியம், மற்ற வாழ்வுகள், இன்பம், அறிவு, அழகு, பெருமை, அறம், குலம், திடசரீரம், தீர்க்காயுள் என்பன இங்குப் பதினாறு பேறுகளாய்க் கூறப்பட்டன.

5. வெண்ணெய் இருந்தும் நெய் தேடுவாருண்டோ? விளக்கிருந்தும் நெருப்புத் தேடுவார் உண்டோ? சிவன் மனத்திலிருக்க அவனை நாடாது, ஊர்தோறும் அவனைத் தேடி அலைவானேன்?

6. துர்க்குணர் - கெட்ட குணம் உடையோர்.

7. 'ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட் டொன்றாகும்' என்று தொடங்கும் ஔவை பாடலுக்கு ஒற்றுமை காண்க.

9. மான், ஆடு, கோழி, மீன், மற்ற விலங்குகள் இங்குக் குறிக்கப்படும். அயம்-ஆடு. சிந்து சமுத்திரம்.

10. திண்டு மிண்டு-சாக்குப்போக்கு.

---

# IV. கதைச் செய்யுட்கள்

## 1. நளவெண்பா

நளனது சரித்திரத்தினை விளக்கி வெண்பாவால் இயன்ற நூல். இதனை இயற்றியவர் புகழேந்திப் புலவர். இவர் இரண்டாம் குலோத் துங்கன் காலத்தில் வாழ்ந்தவர். இவரை ஆதரித்து நளவெண்பாப் பாடச் செய்தவன், மள்ளுவ நாட்டு அரசனாகிய சந்திரன் சுவர்க்கி என் பான். இப்புலவர் 'வெண்பாவிற் புக ழேந்தி' என்று சிறப்பிக்கப் பெற்ற வர். இவர் ஒட்டக் கூத்தரோடு மாறுகொண்டதைப் பற்றிப் பல செய்திகள் வழங்குகின்றன. இவர் வைணவ மதத்தினர்.

1. நீள் நிறம் - வினைத்தொகை. தாள் நிறம் - ஆறன்றொகை. மாண் நிறம் - உரிச்சொற்றொடர். அப்பு - நீர். புள் - பறவை.

2. ஆய் இழையார் - பெண்கள். இழை-ஆபரணம்.மலங்கிற்று - மயங் கிற்று; மனம் வருந்திற்று.

3. அஞ்சல்-முன்னிலை எதிர்மறை வினை. வஞ்சி-கொடி. மணி - அழகு. விஞ்சியது - சிறந்தது. மாண-உரிச் சொல்.

4. வாமம்-அழகு. சேமம்-க்ஷேமம்.

5. தன் + ஆடல். என் + நாடல்.

6. நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்; பூமி.

7. ஆதி-ஆவாய். பாவை - உவமை யாகுபெயர்.

8. விழித்தாமரை - உருவகம். பொன்னின் மடப்பாவை - திரு மகளை யொத்த தமயந்தி.

9. சேடி - தோழி. உளம் ஊசலா டுற்றாள் - திகைத்தாள்.

10. நன்னுதல்-பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

11. மாலை - மயக்கம். மாலை-சுயம் வரமாலை. பொன் - இங்கு தமயந்தி.

12. கணி - சோதிடர். அண்ணல்- பெரியோன்; நளன்.

13. அன்னம் நளனுக்கும் காகம்புட் கரனுக்கும் உவமை. பொடி-புழுதி. தேவி-அரச பத்தினி; தமயந்தி.

14. சந்தக் கழல் தாமரை - ஆண் குழந்தையின் அடிகள். சதங்கை யணி பைந்தளிர் - பெண் குழந்தை யின் அடிகள். எந்தை-என் தந்தை என்பதன் மரூஉ. எந்தாய் - விளி.

15. சுரம் போக்கு - பாலைவனத் தில் நடத்தல். ஏதம் - குற்றம். மாத ராய் - அழகுடைய பெண்ணே! தாமம் - சுயம்வர மாலை.

16. குலமகள் கணவனைப் பிரி தல் அழகன்று என்பது கருத்து. நோக்கு - கருவிப் பொருள் விகுதி பெற்று மறைந்த காரணப் பெயர்.

17. அடிசில் - அடப்படுவது ஆகிய உணவு. அளைதல் - உழக்கல்.

18. குறுகு தலை-வினைத்தொகை. சிறு குதலை - பண்புத்தொகை.

19. ஒன்றாய் இருந்த உயிரை இர ண்டாக அரிந்தான்.

20. ஆய்ச்சியர் தயிர் கடையும் கை. போய்வரும் நளனுக்கும், அவன் மனத்துக்கும் உவமிக்கப்பட்டது.

21. வீமன் தன் கோக்காதலி என்றான், தான் பிரிதலால் தன் மனைவி என்று கூறிக்கொள்ள வெட்கம் கொண்டதால்.

23. ஒண்டொடி - பண்புத் தொ கைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. ஐயம் உறேல் - ஐயுறேல் என்று விகாரப்பட்டது.

24. காணு, நடுங்கா, உயிரா, அணையா என்பன செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சங்கள்.

26. ஒருவன் - இங்கு புஷ்கரன். இங்கண் - இங்கு.

27. அடுமடையா-சமையல் செய்யும் சமையற்காரனே.

28. கடாக்களிறு - மதயானை. பணிமுடி - ஆதிசேடன் தலை. மணி முடி - இரத்தின கிரீடம். வடு - தழும்பு.

29. முனிந்தருளல் - முன்னிலை எதிர்மறை வினை.

30. உலகளந்த மெய்யடி - வாமனவதாரத்திலே மாவலி கொடுத்த மூன்றடி மண்ணையும் பெறக் கருதி உலகங்களை அளந்து கொண்ட திருமாலின் பாதங்கள்.

31. பொன்னகரம் - அமராவதி. புரந்தரன் - இந்திரன்.

32. மயில், மேகத்தைக் கண்டு களிக்கும். முகம் கண்ணால் அழகு பெற்று இன்புறும். நிறைபுலங்கள் நீரால் உயரும். மாவிந்தநகர். நளனைப் பெற்று மகிழ்ந்தது.

## 2. அரிச்சந்திர புராணம்

இத்தொடர்க்கு அரிச்சந்திர மன்னனது பழைய வரலாறு என்று பொருள்.

இந்நூலை இயற்றியவர் நல்லூர் வீரன் ஆசு கவிராயர் என்பாராவர். நல்லூர் என்பது சேது நாட்டிலிருக்கும் வீரவநல்லூர் என்பர். இப்புலவர் சைவ மதப் பற்றுடையார்; அம்பிகை உபாசனை உடையார்; திருப்புல்லாணியிலே சக்கர தீர்த்தக் கரையிலே உள்ள மண்டபத்தில் சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து நானூற்று நாற்பத்தாறில் இந்நூலை அரங்கேற்றினர்.

சந்திரமதி திருமணம் - சந்திரமதியை அரிச்சந்திரன் மணம் புரிந்து கொண்ட செய்தியைச் சொல்லும் பகுதி என்பது பொருளாம்.

1. முனிவர் - தேச சஞ்சாரம் செய்து வந்த தவமிக்க பெரியோர்கள். அரசன் -அரிச்சந்திரன். தாதை-சந்திரமதியின் தந்தை. வல்லை - விரைவு. போதி-முன்னிலை வினை; எதிர்காலம்.

2. கன்னல் - கரும்பு. கன்னோசி - கன்யா குப்ஜம் என்னும் நாடு (Kanauj; மதிதயன் ஆண்ட நாடு. சூதன் - சாரதி. கண் சாத்துதல் - பார்த்தல்.

3. மாதங்கம் - யானை. மடங்கல் - சிங்கம். பரிமா - குதிரை பூதம் - பூதங்கள். தேரிற் கட்ட உரியன இவை என்கிறார்.

4. வார் - தோலால் ஆகிய வார். நீர் ஏறிய சங்கம் - நீரில் வாழும் சங்கம். புயங்கள் ததும்ப - புயங்கள் பூரிக்க.

6. ஓதிமம் - அன்னப் பறவை. தேவன் - பிரமன். மறை ஓதி - வேதம் ஓதியவர்.

7. தானை கடலுக்கும், பரிமா திரைக்கும். யானைகள் அருவி பாயும் மலைகளுக்கும் நிகர்.

9. இயங்கள் - வாத்தியங்கள். குழும - கூடிவர.

10. விரை - மணம். பிரசம் - தேன்.

11. அன்னம் ஆடும் துறை-அன்னங்கள் விளையாடும் துறைகள்.

12. முகுத்தம்-முகூர்த்தம். எழு-எழு நாட்கள். கன்னலம் திருக்காவணம் - கரும்புகளால் அலங்கரிக்கப் பெற்ற அழகிய பந்தர்.

13. ஈண்டினர் - சேர்ந்து திரண்டனர்.

14. சீறடி - சிறிய அடி; பண்புத் தொகை.

16. மந்தரம் அனைய தோள் வள்ளல்-இங்கு அரிச்சந்திரன். கந்தரம்-கழுத்து. உட்கருத்து - அவனது மனக்கருத்து.

17. உறீஇ - சொல்லிசை அளபெடை; பொருந்தி என்பது

பொருள். வயங்கக் கண்டனன் - அரிச்சந்திரன் மங்கலம் விளங்கக் கண்டான்.

18. கன்னி-மணம் ஆகாத பெண். மொய்குழல் - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

19. பேதை - பெண். திரை வரைப்பு-கடல் சூழ்ந்த உலகம்.

20. உவகை யம்பெரு வெள்ளம்-சந்தோஷ சாகரம். கள்ளம் - பொய். கட்டுரைத்தது - கூறியது.

21. தையலாள்-பெண். கை மூக்கிற் சேர்த்தல் அதிசயக்குறி.

22. தேவராசியம் - தேவரகசியம்.

23. அண்டர் - நாயகன் சிவபெருமான். வண்டணி குழலி-சந்திரமதி. 'மங்கலம் கண்டவர் கணவராவார்' என்பது.

24. மஞ்சனம் - அபிஷேகம். கஞ்சனம்-கண்ணாடி. அஞ்சனக் கண்ணி மைதீட்டிய கண்களையுடைய சந்திரமதி.

25. நாமம்-அரிச்சந்திரன் பெயர். மன்றல் + அலர் - மன்றலலர் என ஆதற்குரியது, செய்யுள் விகாரத்தால் மன்றலர் என்று ஆயிற்று. மன்றல் - மணம். அலர் - விரிந்த.

26. வஞ்சி - உவமையாகு பெயர். சசி-சந்திரன். சசம் - முயல்; முயற்கறை யுடையான் சந்திரன்.

27. துறவரும் - உம்மை உயர்வு சிறப்பு.

28. வல்லி - உவமை ஆகுபெயர். பல்லியம் - பலதிறப்பட்ட வாத்தியங்கள்.

### 3. குசேலோபாக்கியானம்

குசேலரைப் பற்றிய இடைக்கதை. இது பாகவதத்திலே இடையிலே கூறப்பெற்றுளது. உப + ஆக்கியானம் - இடையிலே கூறப்படும் வரலாறு. குசேலர் - கந்தை ஆடை அணிந்தவர். குசேல + உபாக்கியானம் - குசேலோபாக்கியானம். அ + உ, ஒ ஆயதால் குணசந்தியாகும். உப + ஆக்கியானம் = உபாக்கியானம்; நெடில் நின்றதால் தீர்க்கசந்தி.

இந்நூலை இயற்றியவர் வல்லூர் தேவராஜ பிள்ளை என்பவர். இவர் சோழ நாட்டவர்; திரிசிரபுரத்திலே சென்ற நூற்றாண்டிலே மகா வித்துவானாய் இருந்த மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை யென்ற புலவரது மாணாக்கராவர். தேவராஜபிள்ளை, அன்பர் பலர் வேண்டுகோளால் இச் சிறு நூலை இயற்றினர் என்ப.

1. பருவரல் - துன்பம். துணைக்கரம் - இரு கைகள். மல் - மானம், பெருமை, கௌரவம். இரத்தல் - யாசித்தல்.

2. எற்பது இகழ்ச்சி ஐ சாரியை. ஒருவிய - எற்றலினீங்கிய. நீவாரம்-காட்டு நெல்; முனிவர் உணவாகக் கொள்வது.

3. மெல்லியல் - பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. பாகம் - சமையல். பாகம் - பகுதி. அதிதி - விருந்தினர்.

4. இற்று - இத்தன்மையது. மட்குழிசி - மட்பாண்டம். பால்-ஒரு பக்கம். கோரிகை-அகப்பை. வாக்கல் - வார்த்தல்.

5. மகவு-குழந்தை. பொருமுதல்-விம்முதல்; பொருமையால் வருவது.

6. கலாம்-கலகம். மைவண்ணம் - மைநிறம் கலந்தது. வெரிந்-முதுகு. தை வந்து - தடவி. ஆற்றல் - சமாதானம்.

7. பக்கணம்-பக்ஷணம்; தின்னும் பண்டம். ஈர்க்கும் - இழுக்கும்.

8. மிடி என்னும் பெருங்கடல் - வறுமைப் பெருங்கடல்; உருவகம். அலர் - பழிதூற்றல். துவ்வாமை - பட்டினி.

9. சாகரம் - சமுத்திரம்; சகரரால் தோண்டப்பட்டது என்று பொருள்பட்டுக் காரணப் பெயர் ஆயிற்று.

10. முத்தழல்-ஆகவனீயம், காருகபத்யம், தக்ஷிணாக்கினி. சிறார்கள்-சிறுவர்கள். அழுந்து - துயரம்; முத

னிலைத் தொழிற்பெயர். அனம் - அன்னம், உணவு. ஈரொன்பான் புராணம்-பதினெண் புராணங்கள். மூரல்-உணவு. வழங்குவர்-கூறுவர்.

11. வனப்பு - அழகு. அளவா - அளவற்ற. தலைவன் தலைவியர் - நாயக நாயகியர். கலாம்-சச்சரவு.

12. வடவை - கடலில் இருக்கும் குதிரைமுக நெருப்பு. ஆகரம் - இடம். தரித்திரம் களிப்புக் கடலுக்கு வடவை; எண்ணம் வாழும் இடம் துக்கத்துக்கு ஆகரம்; ஒழுக்கம் என்னும் வனத்துக்கு அழல்.

13. யாதவர் - யதுவமிசத்தினர். மாதவன் - கிருஷ்ணன். வாய் மடுத்தனை - குடித்தனை; கலைக்கடலைக் குடித்தனை என்றார். பீத+அம்பரம் - பொன்னிற ஆடை; அதனை அணிந்தவன் பீதாம்பரன். பீதாம்பரன் - தீர்க்கசந்தி; இங்கு இச்சொல் கண்ணனைக் குறிக்கும். செல்லல் - துன்பமும் துயரமும்.

14. எழிலி - மேகம். எழிலி வண்ணன். கண்ணபிரான். பளகு - குற்றம். தனப் பொதி - பொற்குவை. போன்ம் - போலும்.

15. மண்ணிய மணி - கழுவிய மணி. எண்ணிய எண்ணியாங்கு அளிப்பவன் - இறைவனாகிய கண்ணன்.

16. மடத்தகை - அறியாத்தன்மை. அணங்கு - அண்மை விளி.

17. சேமவைப்பு - சேமித்த செல்வம். வருவாய்-வரவு. எந்த+இடம்- எந்திடம்; விகாரம்.

18. மெல்லியல் - விளி. எண்ணல்- எதிர்மறை முன்னிலை வினை.

19. உண்மை நூல் உணர்ச்சி - தத்துவநூல் அறிவு.

20. பாற்கடலை அடுத்த மீன் அப்பாலை விரும்பாது, வேறு பொருள்களை விரும்பினாற்போலக், கண்ணன் திருமுன் சார்ந்து. நாற்கதி - நால்வகைக்கதி; பிறப்பு வேறுபாடு; அண்டஜம், சுவேதஜம், சராயுஜம், உத்பிஜம் என்பன. இன்பச் செல்வம் - பேரின்பப் பேறு. துன்பச் செல்வம் - துன்பத்துக்குக் காரணமாகிய செல்வ வாழ்வு.

## 4. கம்பராமாயணம்

### சுந்தரகாண்டம்

### உருக்காட்டுப் படலம்

கம்பரால் இயன்ற இராமசரிதம். இது வடமொழி வால்மீக ராமாயணத்தின் வழிநூல். சுந்தரகாண்டம், அனுமான் சீதையைத் தேடிக் கடல் கடந்து, இலங்கையிற் கண்டு கணையாழியைக் கொடுத்துச் சூளாமணி பெற்று வந்ததைத் தெரிவிக்கும் பெரிய பகுதி. உருக்காட்டுப் படலம், அனுமான் சீதையின் முன்னே தன் பெரிய உருவத்தைக் காட்டியதைத் தெரிவிக்கும் சிறு பகுதி.

ராம + அயநம் = ராமாயணம்; தீர்க்கசந்தி. கம்பர் என்ற புலவர் சோழ நாட்டிலே திருவழுந்தூரிற் பிறந்தவர். இவ்வூர் இந்நாளில் தேரழுந்தூர் எனப்படுகின்றது; மாயவரத்துக்கு அருகில் உளது. இவர் தந்தை பெயர் ஆதித்தர். இவரை ஆதரித்த பிரபு சடையப்ப வள்ளல் என்பவர். இவர் ராம பக்தியில் ஈடுபட்டுக் கம்பராமாயணம் பாடினார்; ராமாயணத்தில் உத்தர காண்டத்தைப் பாடாது விட்டார். திருவரங்கம் பெரிய கோயிலில் இவ் விராமாயணத்தை நாத முனிகள் முதலிய பெரியோர் கூடிய சபையில் அரங்கேற்றினர். அரங்கேற்றிய காலம் சாலிவாகன சகாப்தம் எண்ணூற்றேழு; கி. பி. 885 ஆகும். பின்னாளிலே இப் புலவர், ஓரங்கல் நாட்டுப் பிரதாப ருத்திரனால் ஆதரிக்கப் பெற்றார்.

சீதையின் துயரம்-சீதை அசோக வனத்திலே தனித்துயர் உறுதல்.

1. பொறை - பொறுமை. இருங் கழலவன் - இராமன். நிருதர் நீள் நகர் - அரக்கர் நகரமாகிய இலங்கை.

இருந்தேனை - வினையால் அணையும் பெயர். புனிதன் - இராமன்.

2. வஞ்சனைமான் - மாரீசமான்; பொன்மான். மன் - இராமன். மஞ்சன் - மைந்தன்; போலி; புத்திரப் பிராயமாகிய இலக்குவன். நஞ்சனையான்-விடம்போற் கொடிய இராவணன். உய்ஞ்சனன் உய்ந்தனன்;போலி. உய்ந்தனன்-முற்றெச்சம். உலகம் - இடவாகுபெயர்.

3. அற்புதன் - இராமன். ஆசற-அடியோடழிய. தக்கலை - தக்கவள் அல்லை. எப்பரிசு இழைத்துக் காட்டுகேன்-என்ன செய்து நிரூபிப்பேன்.

4. சாதல் காப்பவர் - சாவாவண்ணம் காத்திருந்த அரக்கியர். சாம்பினர்-மயங்கினர். உலாம்-உலாவும்.

5. கண்டனன் - முற்று. அண்டர் நாயகன் - இராமன் மயில் - சீதை; உவமையாகுபெயர். தொண்டை - கொவ்வைக் கனி.

6. குடைந்து-சிறிதிடமும் விடாமல் தேடி. கொட்பு - கோட்பாடு. மிடைந்தவர் - நெருங்கியவர். உலப்பிலர் - அளவிலர். மடந்தை - விளி. சேவடி - பண்புத்தொகை; செம்மை + அடி.

7. ஐயுறல்-ஐயம் உறுதே; உறல் முன்னிலை எதிர்மறை வினை. ஆரியன் - இராமன். உரை - வார்த்தை. காண்டி - காண்பாய். நெய்யுறு விளக்கு - அணையும் நிலையில் நெய் யூற்றப் பெற்ற விளக்கு.

8. இரங்கு + அம் = இரக்கம். வை - குற்றம். போலும் - ஒப்பில் போலி.

9. அரக்கனே ஆக - அரக்கனாகவே இருப்பினும் இருக்க. குரங்கு + இனம் = குரக்கினம். எம்பிரான் - இராமன்.

10. என் உள்ளம் இரங்குதலால் இவன் வினவுதற் குரியன் என்று துணிந்தாள். மனன் - மனம்; இறுதிப் போலி. மாற்றம் - சொல். 'வீர நீ யாவன்' என்று வினவியவாறு.

11. 'நடத்தல் அரிதாகும் நெறி, நாள்கள் சில. தாயர்க்கு அடுத்த பணி செய்து இவண் இருத்தி' என்றது இராமபிரான் கூற்றும். அச்சொற்கு - அவ்வுரை வழங்கியவுடனே; அதற்கு மறுமொழி கூறுமலே செய்த செயலை விளக்க இங்ஙனம் கூறப்பட்டது.

12. நீண்ட முடிவேந்தன் - தசரதன், ஆரை - மதில்.

13. மெய்ப் பேர் தீட்டியது ராம நாமாங்கிதமான கணையாழி. நேர்ந்தனன் - இராமன் கொடுத்தான்.

14 இறந்தனர் - வினையாலணையும் பெயர். பிறந்த பயன் - பிறவியாற் பெறுதற்குரிய பயன்; புண்ய லோகப் பிராப்தி முதலியன. கொல்-அசை. துறந்த உயிர் போன உயிர். திறந்தெரிவது - தன்மை அறிவது. நன்னுதலி - சீதை.

15. மும்மைசால் உலகம் - சுவர்க்கம். மத்தியம், பாதலம்; அதை தந்த முதல்வன் பிரமன்; அவனுக்கு முதல்வன் திருமால்; இராமபிரான் திருமாலின் அவதாரமாதலால் இவ்வணம் கூறப்பட்டது. செயல்-செய்யத்தக்க கைம்மாறு. மறுமை - மறுமைப் பேறு.

16. பாழிய - வலிமை பொருந்திய. பணைத்தோள்-பெருத்த தோள். துணையிலேன். மனத்தேன் வினையாலணையும் பெயர்கள். ஊழி ஓர் பகலாய் ஓதும் யாண்டு - பிரமனது ஆயுள் அளவு. ஊழி - யுகம்; பிரமனது ஆயுட் காலத்தில் யுகம் ஒரு நாளாம். உலகம் எழும் எழும் - மேலேழு உலகங்களும் கீழேழு உலகங்களும். மேல் உலகங்கள்: பூலோகம். புவர்லோகம், சுவர்லோகம், மகாலோகம், ரஸோலோசம். தபோலோகம், சத்தியலோகம். கீழ் உலகங்கள்: அதலம், விதலம், சுதலம், ரஸாதலம், தராதலம், மகாதலம், பாதலம் என்பன. வீவு - அழிவு.

17. சுருங்கிடை - வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; சீதையைக் குறிக்கும். துணைவன் - இராமன். ஞானவான்கள் மாயைப் பெருங்கடல் கடத்தல்போல, யான் கருங்கடலைக் காலாற் கடந்தேன். கால் - பாதம், காற்று; காற்றின் உதவியால் கால்களைக் கொண்டு தாவியதால் இங்ஙனம் கூறப்பட்டது.

18. யாக்கையை - உடம்பினை உடையாய். யா+க்+கை சட்டுதல்; தொழிலாகு பெயராய் உடம்பை உணர்த்தியது. செப்பு- திசைச்சொல். முறுவல் - பற்கள்.

19. சுட்டினன் - முற்றெச்சம். மேக்கு - மேலே. மூர்த்தியான்-உருவமுடையான்.

20. மீண்டேன், அறுத்தேன், பூண்டேன் என்பன துணிவினாற் பிறந்த, விரைவு விளக்க, எதிர்காலத்தாற் சொல்லற் குரியதை இறந்த காலத்தாற் கூறிய காலவழுவமைதி. ஒறுத்தாரை - அரக்கர்களை; வினையாலணையும் பெயர். எங்கோன்-இராமன். பொலங்கழலும் - பொன்கழல். திருவில் முகத்துத் திரு அன்னாள் - அழகையும் ஒளியையும் உடைய முகத்தினளாகிய இலக்குமி நிகர்ப்பாள் சீதை.

## 5. திருவிளையாடற் புராணம்

### மாமனாகவந்து வழக்குரைத்தது

மதுரை நகரத்திலே கோயில் கொண்ட சுந்தரேசர் இயற்றிய அறுபத்துநான்கு திருவிளையாடல்களைப் பற்றி வேதாரணியத்திலே ஐந்து நூற்றாண்டுகளின் முன் வாழ்ந்த பரஞ்சோதி முனிவர் என்ற பெரியோரால் இயற்றப்பட்ட புராணம். இவர் இத் திருவிளையாடலைச் சுருக்கிக் கூறும் போற்றிக் கலிவெண்பா என்ற சிறு துதிநூலும் செய்திருக்கின்றார். முன்னாளிலே இயன்ற வேறு திருவிளையாடற் புராணங்களும் தமிழ் மொழியிலே உண்டு. ஆயினும் இம் முனிவர் தம் பக்திப் பெருக்கால் மீனாக்ஷியருள்பெற்று இதனைப் பாடினார்.

சுந்தரேசுரர் தாய் மாமனாக வந்து தோன்றி வழக்காடி ஒரு வணிகச் சிறுவனுக்கு அவன் உரிமையாற் பெற்ற செல்வங்களைத் தாயாதியர் கவராது பெற்றுக்கொடுத்த வரலாற்றைக் கூறுவது இப் பகுதியாகும்.

1. கன்னி - அங்கயற் கண்ணம்மை; கன்னிப் பருவத்திலே அரசு புரிந்ததால் மதுரை நகர், கன்னி நகர் என்ற பெயர் பெற்றது. நான்மாடக்கூடல் இந்திரன் ஏவிய மேகங்கள் பொழிந்த மழையைத் தடுக்க, இறைவன் அருளிய நான்கு மேகங்கள் மாடங்களாகக் கூடி நின்ற புராண வரலாறு காரணமாக மதுரைக்கு வந்த பெயர். நிதிக்கோன் - குபேரன். மடவார் - இளமை நலம் வாய்ந்த பெண். சுசீலை - நல்லொழுக்கம் உடையாள். சேக்கை - இருக்கை. முளரி - தாமரை. திரு - இலக்குமி.

2. பேறு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்; 'பெறு' பகுதி. புனைவன - புனைதற்குரிய ஆபரணங்கள்.

3. மயக்கு - மயக்கம்; 'மயங்கு' பகுதி; முதனிலை திரிந்த தொழிற் பெயர் (மயக்கு). தணவா-நீங்காத. பூசல்-சண்டை சச்சரவு. வெகுண்டு-கோபித்து.

4. பெருமிதம் - கர்வம். மேலைக்கு - வரு பிறப்புக்கு. தருதவம் - வினைத்தொகை.

5. வரவு தாழ்ப்ப - வருதற்குத் தாமதிக்க. வன்பு - பலாத்காரம். வௌவினர் - கவர்ந்து கொண்டார்.

6. வெறுக்கை - செல்வம்; காரணப் பெயர்; தொழிலாகு பெயர். வளன் - இறுதிப்போலி. களைகண் - புகல், கதி.

7. பாதத்துணை - இணையடி. என்தந்தை-எந்தை; மரூஉ. யாய் - தாய்.

இரங்கி - வருந்தி. இனைய - பின் வருவன.

8. காணி - நிலத்தின் அளவு; இங்குப் பொதுவில் நிலம் குறிக்கப் படும். எம்முன் - எமது முன்னோன்.

9. அருத்தி - ஆசை; இங்கு பக்தி. இருத்தி - இருப்பாய்.

10. சீறு - முதனிலைத் தொழிற் பெயர். கங்கையாறு கொள் சடையார் - கங்கை யாற்றைச் சடையிற் கொண்ட சிவபெருமான்.

11. புலர்ந்த பின் - விடிந்த பிற்பாடு. வலந்தரு மன்றம் - எளியோர்க்கு நியாய பலம் தரும் நியாய சபை. சலம் - வம்பு.

12. வேரி - மணம். உண்கண் - மையுண்ட கண்.

13. வெள்ளி மன்றவன்-வெள்ளியம்பலத்தே திருக்கூத்து ஆடிய சிவபிரான். பொற்குன்றவன் - மேருமலையை வில்லாகஉடைய சிவபிரான்.

14. அட்டில் - அடுப்பு; சமையல் அறை. இடேல் - எதிர்மறை. பட்டிமை - பொய். அறத்தவிசு - தரும ஆசனம். ஒட்டுதல் - இங்கு விசாரித்துத் தீர்ப்பளித்தல்.

15. அறக்கொடி - உமாதேவி. பாகர் - இடப்பாகத்தில் உடையவர்.

17. அங்கதம் - தோள்வளையல். கண்டிகை - ருத்திராக்ஷமாலை.

18. மணிகள் அழுத்திய மோதிரங்களை அணிந்த கை, வண்டு மொய்த்த புறவிதழையுடைய செந்தாமரை மலர்க்கு நிகராகக் கூறப் பட்டது.

19. உட்கிடை - மனத்துட் கிடக்கும் கருத்து.

20. அரசன், ஆன்றவர், செங்கோன்மை, தெய்வம், தருமம் இருப்பின் அநீதி நிகழாது என்பது.

21. விம்மிதம் - ஆச்சரியம்; 'விஸ்மிதம்'.

22. தாதுலராத கோதை - மலர் அணியாத கூந்தலையுடைய கைம்பெண். கண்டம் - கழுத்து. ஆதுலர்- யாசகர்.

23. குடங்கை - அங்கை. மடங்கல் - சிங்கம். ஏறு - ஆண். அனையார் - இங்கு மாமனாக வந்த சிவ பெருமான்.

24. ஐம்படை - திருமாலின் பஞ்சாயுதங்களைப் போலப் பொன்னால் செய்யப்பெறும் ஒரு ஆபரணம். சிலம்பு-காரணப்பெயர்; முதனிலைத் தொழிற்பெயராய்த் தொழிலாகு பெயர் ஆகும். மொய்ம்பு-மார்பு.மதாணி-பதக்கம். சுட்டி - முகத்திலே தொங்கத் தலையில் அணிவது.

25. தைவந்து - தடவி. இனையன் மின் - எதிர்மறை முன்னிலை வினை.

26. மாருட்டம் - மாறுபாடு செய்தல். இம்மி - மிகச்சிறிய அளவு. ஏற்றோர்க்கு - இரந்தவர்களுக்கு. மிதப்ப - அதிகமாக. படும்-அழியும்.

27. மாணிக்கம் தேற்றி விற்கும் வணிகர் - மதுரையில் நிகழ்ந்த மற்றொரு திருவிளையாடலைக் குறிக்கும்; (மாணிக்கம் விற்ற திருவிளையாடல்). புங்கவர் - பெரியோர்; நியாய சபையோர். இடன் - போலி.

28. கள்வர் - வஞ்சக வேடத்தோர்; இங்கு வணிகனாக வந்து அதற்கு ஏற்க ஆடிய சிவபெருமான். செங்கோல் = நூல்; தருமம் = தட்டு; நா = துலைநா (உருவகவணி.) மேவலர் - பகைவர்.

29. நரைமுது புலி - நரைத்த கிழப்புலி. அனுவதித்தல்-மறுமுறை விளங்குமாறு எடுத்துரைத்தல். ஞாதி - தாயாதியர்.

30. அவையம் - சபை. நக்கு - சிரித்து; நகு-பகுதி; பகுதி விகாரப் பட்டு இறந்த காலம் காட்டிய வினையெச்சம். கவள மான்-யானை. யானை உரித்துப் போர்த்தது - தாருகாவன இருடியர் யாகத்திலிருந்து எழுந்து வந்த யானையை உரித்துப் போர்வையாய்ப் போர்த்த வரலாறு. கண்ணுதல் - நெற்றிக்கண் உடையார்.

32. வேம்பன் - வேப்பமாலை அணிந்த பாண்டிய மன்னன்.

33. ஒல்லை-விரைவு. எழு-தூண். கால் - காற்று. செல்ல+எழு என்பன செல்லெழு என்று சேர்ந்தன.

34. அறன் - அறம் ; கடைப்போலி. தத்த மைந்தன்-சுவீகாரபுத்திரன். மனை - பத்திரம் ; தீர்ப்பு.

35. இம்-இடைச்சொல். இரும் - உரிச் சொல். நாய்கன் - வணிகன். உவகை - சந்தோஷம். வரிசைகள் - சிறப்புக்கள். கைம்மறி - கையை மறிக்கும் நேரத்துள் மறைந்து போன. புதுக்கினன் - புதுமையாய் அமைத்தான். கனகம்-பொன்.

———

## V. பிரபந்தச் செய்யுட்கள்

அந்தாதி, கலம்பகம் முதலிய பிரபந்தங்களிலிருந்து எடுத்த செய்யுட்கள்.

### 1. அழகரந்தாதி

மதுரைக் கருகில் உள்ள திருமாலிருஞ் சோலைமலை என்னும் அழகர் மலையிற் கோயில் கொண்ட திருமால்மேற் பாடப்பெற்ற அந்தாதி. அந்தத்தை ஆதியாக உடையது அந்தாதி.

முதற் செய்யுளின் ஈற்றில் உள்ள சொல், அசை, எழுத்து முதலியவற்றுள் ஏதேனும் ஒன்று, அடுத்த செய்யுளின் முதலிலே வரவமைத்து இங்ஙனமே கடைசிச் செய்யுளின் ஈற்றுச் சொல், முதற் செய்யுளின் முதலில் வந்து பொருந்தச் செய்து, மாலைபோல அமையத் தொடுப்பது.

இப் பிரபந்தத்தை இயற்றியவர் பிள்ளைப் பெருமாளையங்கார் என்ற பெரும் புலவர். இவர் முந்நூறு ஆண்டுகளின்முன் வாழ்ந்தவர். இவர் இயற்றிய பிரபந்தங்கள் அஷ்டப் பிரபந்தங்கள் என்று வழங்குகின்றன. வைணவ பக்தி மிக்கவர் ; மறந்தும் புறந்தொழா மனத்தினர். இங்குக் காட்டிய மூன்று செய்யுட்களில் அந்தாதித் தொடை அமைந்திருத்தலை நோக்குக.

1. பித்து+அரும்பா நின்ற - பித்துத் தோன்றுகின்ற. கைத்து-வெறுத்து. அரும்பாவி - கொடும் பாவி. முத்தர் - நித்ய சூரிகள். பார் - இடவாகு பெயர். புது+அரும்பு=புத்தரும்பு.

2. புரந்தரன்-இந்திரன். பூபதி - அரசன். புகர்முகமா - யானை. நல்குரவு - தரித்திரம். நிரந்தரம் - நிலை பெற்றது. அலங்காரர் - அழகர் பெயர்.

3. கழலுதல் - விட்டோடுதல். வம்பு - வீண். பிராயம் - ஆயுள். திருமங்கை - இலக்குமி. அபிராமன்-புகழ்தற்குரியான். மல் - மல்லர்கள். (துரியோதனன் சபையில் மல்லரை வதைத்தது.)

4. கிருஷ்ணன் துரியோதனனிடம் தருமராதியோர் பொருட்டுத் தூது சென்றபோது நிகழ்ந்த அற்புதச் செய்கைகளுள் ஒன்று ; கண்ணன் தன்னைக் கொல்ல மறைந்திருந்த மல்லரைக் கொன்ற செயலாம்.

### 2. அழகர் கலம்பகம்

அழகர்மேற் பாடிய கலம்பகம் என்னும் பிரபந்தம். கலப்பு+அகம்= கலம்பகம் ; பலவகைச் செய்யுட்களும் கலந்துவர அந்தாதித் தொடையாய்ப் பாடப்படும் பிரபந்தம். இதன்கண் புயவகுப்பு, அம்மானை, மதங்கு, பிச்சியார், கொற்றியார் முதலியன வருதல் வேண்டும். இக் கலம்பகத்தை இயற்றியவர் வேம்பத்தூர்ப் புலவருள் ஒருவர். அவர் இயற்பெயர் வெளிவரவில்லை. கவிகுஞ்சர பாரதி என்ற சிறப்புப் பெயர் வழங்குகின்றது. இரண்டு நூற்றாண்டுகளின் முன்பு வாழ்ந்தார்.

1. தவம் : தவம் என்பது தவம்புரிவோரை இகழ்ந்து பக்திப் பெருமையைப் புகல்வதாம்.

RTR/133


ஊசி முனே - ஊசி நுனியில். நின்றும் என்ன - என்ன பயன்? ஊமர் - ஊமையர். வளே - சக்கரம். பறத்தல் - கமன குளிகையின் உதவியாற் பறத்தல். அண்டர் - தேவர். நீலமலே - திருமால். தொழும்; இயலாதேல் நாமம் கூறும்; அதற்கும் தளர்ந்தால் நினேவீர்; வேண்டும் பேறுபெறலாம் என்று இயையும்.

2. மறம்: பெண் கொடுக்க மறக்கும் மறவர் கூற்று. ஓலே, சந்திரிகை என்பன நிருபத்தைக் குறிக்கும். சந்திரிகை காதணிக்கும் ஆதலால், காதிற் செருகுக என்ருர்.

காரிகை = பெண், யாப்பிலக்கணம் (சிலேடை). அரிவை - பெண், அரிந்த வைக்கோல். நாரி - பெண், வில் நாண். பாவை - பெண், பதுமை. தையல் - பெண், தைத்தற்ருெழில். வஞ்சி - பெண், கருவூர். கோதை - பெண், சேரவரசன். இளம்பிடி - பெண், பெண் யானே. குமரி - பெண், கற்ருழை. அடவி, காடு. மணம்-வாசனே, கலியாணம். நங்கை - பெண், (நம் + கை) நம்முடைய போர்த்திறம் விளக்குங் கை.

3. மது சூதனன் - மது என்னும் அசுரனேக் கொன்றவன். யதுவீரன் - கிருஷ்ணன். நந்து - சங்கு. உளவா - உள்ளவனே. தண் + அம் + துளவா - துளசியை உடையாய்.

## 3. மீனுக்ஷியம்மை

## பிள்ளேத்தமிழ்

மீனுக்ஷி அம்மையின்பேரில் பாடப்பெற்ற பிள்ளேத்தமிழ்.

பிள்ளேத்தமிழ் :-குழந்தைப்பருவச் செய்கைகளேப்பற்றிப் பாடும் பிரபந்தம். காப்பு, தால், சப்பாணி, செங்கீரை, முதலிய பத்துப் பருவங்களே உடையது. ஆண்பாலேப்பாடின் ஆண்பாற் பிள்ளேத்தமிழ் எனப்படும். இஃது பெண்பாற் பிள்ளேத் தமிழ் ஆகும். இதனேப் பாடியவர், **குமரகுருபர சுவாமிகள்**. இச்செய்யுள் திருமலேநாயகர் முன் அரங்கேற்றப்பட்டது. இங்குள்ள கவி வருகைப் பருவத்தில் உள்ளது.

1. கடவுட் பழம் பாடல் - தெய்வத்தன்மை பொருந்திய பழைய தோத்திரங்கள். நறை - தேன். அகந்தை - அகங்காரம். தொழும்பர் - தொழும்புபூண்ட பக்தர். அகந்தைக் கிழங்கு, உளக்கோயில் எற்றும் விளக்கு என்பன உருவகம். சிமயம் - சிகரம். பொருப்பு-மலே. தரங்கம் - அலே. ஒருவன் சொக்கேசன். உயிர் ஓவியமே - உயிரோடு கூடிய சித்திரமே. மதுகரம் - வண்டு. குழற்காடு - கூந்தலாகிய காடு. மலயத்துவஜன் - ஒரு பாண்டியன்; மீனுக்ஷியைக் குழந்தையாய் வளர்க்கும் பேறு பெற்றவன்.

## 4. திருவேங்கடமாலே

திருவேங்கட மலேயில் (திருப்பதி) எழுந்தருளி யிருக்கும் திருமால் தோத்திரமாகிய மாலே. இஃது வெண்பாவில் இயன்றது; பிள்ளேப் பெருமாள் ஐயங்கார் பாடியது.

1. கான் - மணம். மடங்கா - நிறைந்த. நான் மடங்கு - நான்கு பங்கு. ஆர்வம் - ஆசை.

2. மறையோர் புறத்திலும், கலேஞர் உள்ளும் மேதை அகலாதிருக்கும். கோதை - ஆண்டாள்; (சூடிக் கொடுத்த வரலாறு இங்கு வந்தது). தாளுன்றப் பற்ருத தாரணியார் - தாளே ஊன்றுதற்குப் போதாத பூமியை உடையார். (வாமனவதார வரலாறு).

3. யோகியரும் கிளிகளும் கூடு விட்டு மறுகூடு அடைதல். எட்டு மதமா - அஷ்ட திக்கஜங்கள்; அவற்றை வென்று வந்தான் இராவணன். நாளேவா இன்றுபோ என்று உவந்தான் - இராமன் இராவணனுக்கு அருளிய பெருமை.

## 5. அறவுரை

இஃது சிலப்பதிகாரத்தில் உள்ளது. கோவலன் வரலாற்றைக்

கூறும் இப்பெருங் காப்பியம், சேர பரம்பரையில் பிறந்து இளமையிலே துறவுபூண்ட இளங்கோவடிகளாற் பாடப்பெற்றது. இவர் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

அறவுரை-தரும வாசகம். திருத்தகு - திருத்தக்க. திருவுடையராய் இருத்தற்குத் தகுதியுடைய. நல்வீர் - முன்னிலைப் பன்மை. பரிவு-துன்பம், வருத்தம். இடுக்கண் - தீங்கு. தெளிந்தோர்.வினையாலணையும் பெயர். ஊன் ஊண்-ஊனை உண்ணுதல். ஊண் - முதனிலை திரிந்த தொழிற்பெயர். உயிர்கொலை-இரண்டன்றொகை. தானம் - இல்லறத்தார் மேற்கொள்ளும் கடமை. அறம்-தவம்; துறவிகள் கடமை. கொல்லன் மின் - கொல்லாதீர்; இங்குக் கொல்லுதல், மறந்து தீங்கியற்றல். பொய்க்கரி-பொய்ச் சாட்சி. பொருள் மொழி - மெய்ம்மொழி. அறவோர் - தருமசீலர். பிறவோர்-அவரின் வேறாய பாபிகள். அல்லவை-பாவங்கள். அஞ்சுதல்-மனத்தால் நினைக்க அஞ்சுதல். பிழை உயிர்-துன்புறும் ஜீவவர்க்கங்கள்; மரணநிலையும் கூறலாம். வெள்ளைக் கோட்டி-அறிவில்லார் கூட்டம். விரகு-அறிவு. வரையாது - உறுதியுற அமைந்த அளவிற்கு மேற் செல்லாது. செல்லுவது-வருவது. தேம் - இடம். மல்லல் - பெருமை.

---

## உரைநடைப் பகுதி

### 1. தமிழகம்

கடல்கோள்-கடலால் கொள்ளப்படுதல். வியாபித்தல் - பரவுதல். பொருளதிகாரம் என்பது தொல்காப்பியத்தில் மூன்றாவது அதிகாரம். அதன்கண் அகம் புறம் என்ற இருதிணைகளால் முன்னாளிலே தமிழர் வாழ்ந்த முறை விவரிக்கப்பட்டுள்ளது. ஆநிரைகள்-பசுக்கூட்டங்கள். சிலம்பு, வெற்பு, பொருப்பு எனபன மலையின் பெயர்கள். கான்யாறு - காட்டாறு. மாயவன் - கருநிறம் உடைய திருமால். கடையர் - உழு தொழில் செய்வோர். முதுமை+ஊர் - மூதூர்; பெருமை+ஊர் - பேரூர்; பண்புத் தொகைகள். இந்திரன் - தலைவன். உவர்க்கழிகள்-உவர் நீர் உள்ள கடல்வாய்க்கால்கள். நடுவு நிலைத்திணை - முல்லைக்கும் குறிஞ்சிக்கும் நடு நிலையில் உள்ள பாலை. நுகர்தல் . அனுபவித்தல். கடவுள் வழிபாடு - கடவுளை வழிபடுதல். சமயம் - மதம். பலதேவர் - பலராமன். சரித்திரப் புலவர் ஒருவர் - P. T. ஸ்ரீநிவாச ஐயங்கார், M.A., L.T. (History of the Tamils.) கழன்மலர்கள்-பாதமலர்கள். நித்தியபூசை-தினந்தோறும் நிகழும் பூசை. நைமித்திகம் - யாதேனும் ஒரு நிமித்தம் கருதி நடைபெறும் திருவிழா. சிற்பம் - கல்லில் உருவம் அமைக்கும் கலை (Sculpture). சித்திரம் - ஓவியம் (Painting). புரவலர் - அரசர்.

### 2. மருதபாண்டியர்

ஸல்லாபம் - பேசுதல். தேவதானம் - தெய்வத்துக்குத் தானமாக உதவுதல். சாரம் - மூங்கில் முதலிய மரங்களால் அமைவது;கட்டிடம்உயர் நிலையில் இருந்து கட்ட உதவும். திருப்பூவணம் - மதுரைக்குக் கிழக்கே ஒருகாத தூரத்தில் உள்ள சிவஸ்தலம். ராஜ+ஆக்கினை - அரசர் ஆணை. ஆணையிடுதல் நம் நாட்டு பழைய வழக்கங்களுள் ஒன்று.

### 3. பொன்

எல்லாம் பொருளிற் பிறந்துவிடும் என்பது நான்மணிக்கடிகையில் உள்ள ஒரு வாக்கியமாம். ‘பணம் பந்தியிலே குலம் குப்பையிலே’ என்னும் பழமொழி உலகம் செல்வரையே மதிக்கும்; உயர்குலத்திற் பிறந்தோர் என்பதற்காக ஒருவரை மதியாது என்று கூறுகின்றது

174943

## 4. சுலோசனை

நல்ல கண்ணினை உடையாள். இந்திரஜித்தின் தலைவி. வேள்வி - யாகம். விழைகின்றேன் - விரும்புகின்றேன். முன்றானை - முன்புறம் தொங்கும் ஆடையின் பகுதி. இந்நாளில் இச்சொல் 'முந்தாணி' என்று மருவி வழங்குகிறது. மணாளன் - நாயகன், மணவாளன். வைதேகி - விதேக ராஜன் மகள், சீதை. காகுத்தன் - ககுத்தன் வமிசத்திற் பிறந்தவன், இராமன்; இவை இரண்டும் வடமொழித் தத்திதாந்த நாமங்கள். மும்மை - மூன்று. கற்பின் தெய்வம் - சீதை. எரி - நெருப்பு. துகில் - வஸ்திரம். ராகவன் - ரகு வமிசத்திற் பிறந்தவன். தத்திதாந்த நாமம். குரங்கு + படைஞர் - குரக்குப் படைஞர். தாசரதி - தசாத குமாரனாகிய இராமன். இராவணி - இராவண குமாரனாகிய இந்திரஜித்து; தத்திதாந்த நாமங்கள். சுலோசனையின் தந்தை - இலக்குவன்.

## 5. ஸர்வதேச சங்கம்

**Leage of Nations**

உட்ரோ வில்ஸன் Woodrow Wilson, President of the United States of America at the time of Great War. கிளைக்கும்-எழுகின்ற.

## 6. சந்தன மரம்

மெல்லிய சந்தனக்கட்டை தான் தேய்ந்த காலத்தும் மணம் குறைபடாது. அரைத்தாலும் சந்தனக் கட்டை தன் மணம் நீங்கப்பெறாது. 'இரும்புத்தூணைச் செல்லரிக்குமா' என்பது ஒரு பழமொழி. உள் வயிரம் - சேகு.

## 7. அன்புள்ள இடத்தில் அமலன் இருப்பான்

இந்தக் கதையின் உட்கருத்து, ஜீவகாருண்யமே தெய்வத்தை அறியும் வழியாகும் என்பதாம். ருஷிய நாட்டுப் பெரியோராகிய கவுண்ட் லியோ டால்ஸ்டாய் என்பார் இதனை ருஷிய மொழியில் எழுதியுள்ளனர்.

## 8. ஜப்பானும் ஜப்பானியரும்

உரம் - வலிமை. வல்லரசு - வலிமை மிக்க ராஜாங்கம். ஆதிக்கம் - தலைமை. கடைப்பிடி கொள்கை. மேனாட்டார் - மேற்குத் திசையில் உள்ள நாடுகளில் வாழ்கின்ற ஜனங்கள். களம் கொள்ளுதல் - போர்க்களத்தில் வெற்றி பூணல். தேச + அபிமானம் - தேசாபிமானம், தீர்க்க சந்தி. அக்ஷாம்சரேகை - Latitude. சீத + உஷ்ணம் - சீதோஷ்ணம், குண சந்தி. குணதிசை - கிழக்குத்திசையில் உள்ள ஆங்கிலர். கண்கொளாக் காட்சி - கண்ட அளவில் அமையாத காட்சி. ஆருயிர் - அருமை உயிர், பண்புத்தொகை. இரும்பு + தகடு - இருப்புத்தகடு.

## 9. காங்கேயன் சூளுரை

காங்கேயன் - கங்கையின் மகன், தத்திதாந்த நாமம். சூளுரை - சபத மொழி. பீஷ்மர். அஞ்சத்தக்க விரதம் பூண்டவர். வேட்டம் - வேட்டை. குடில் - குடிசை. பூபதி - அரசர். பேறு - 'பெறு' பகுதி; முதனிலை திரிந்த தொழிற் பெயர். குமிழி - கொப்புளம். கதிரவன் - சூரியன். சத்திய விரதர். சத்தியமான விரதத்தை உடையவர். நைஷ்டிகப் பிரமசாரி - ஆயுட்காலம் முழுவதும் மணம் புரியாது பிரமசாரியாய் வாழ்பவன். சத மடங்கு - நூறு மடங்கு. மாதவம் - பெருந்தவம். துறக்கம் - சுவர்க்கம், வீடு.

## 10. ஆகாய விமானம்

ஜலவாயுவு-Hydrogen; இக்காற்று விரைவிலே தீப்பற்றும் இயல்புடையது. பெற்றோல் - Petrol. விசை - வேகம். இங்கிலீஷ் சானல் பிரிடிஷ் தீவுகளுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையில் உள்ள ஒரு கால்வாய். சமுத்திரத்தில் இறங்கும் விமானம் - Seaplane. பூதத்துவ சாஸ்திரம் Geology. பயணம் - பிரயாணம்,

PRINTED AT THE ROYAL PRINTING WORKS, MOUNT ROAD, MADRAS.—2